அன்பளிப்பு

# அகத்தியர்கள்

மகாமகோபாத்யாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

வித்துவான், ஆ. சிவலிங்கனார்,
(விரிவுரையாளர், சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ்க் கல்லூரி மயிலம்)

**Specimen Copy
for Consideration.**

ஒற்றுமை ஆபீஸ்,
தியாகராயநகர், மதராஸ்.

[ரூ. 1.

வேலுமயிலுந் துணை.

# முகவுரை.

தமிழ் நூல்களையெல்லாம் ஆரிய மொழி பெயர்ப்பு நூல்கள் என்றும் தமிழ்ப் புலவர்களையும் ஆரியர்கள் என்றும் கூறி வந்துவிட்டனர் ஆரியர்கள் தமிழ் நாட்டில். அவர்கள் கூற்றுக்கு ஆளாகியவரே அகத்தியர் என்ற தமிழ்ப் புலவரும் ஏன்—இவர் அறவே மறைக்கப்பட்டு விட்டாரென்றே சொல்ல வேண்டும். இவரது அகத்தியமும் மறைந்து விட்டது. அவ்வகத்தியரைப் பற்றியும் அவரது பெயரையே புனைந்து அறிஞர்களாகத் திகழ்ந்த பிற அகத்தியர் களைப் பற்றியும் கூறுவது இந்நூல்.

இது சிறு நூலாயினும் காலப்போக்கில் பெரு நூலாகலாம்.

ஆ. சி.

# அகத்தியர்கள்

## 1. தமிழ் நாட்டில் ஆரியர்கள்

### பழங்காலத் தமிழகம்

இன்றைய நிலநூலாராச்சியாளர் பலரும், பண்டைய அறிஞர்கள் தாந்தாம் கேட்டனவற்றைத் தத்தம் நூல்களில் கூறிச்சென்ற கடல்கோளைப் பற்றி ஒத்த முடிபுக்கு வந்திருக்கின்றனர். கடல்கொண்ட இடம் ஒரு பெரிய கண்டம் என்றும் ஆதி மக்களின் தோற்றமும் அங்கேயே நிகழ்ந்த தென்றும் கூறுகின்றனர்கள். அம்மக்களும் தமிழரே யாவர் என்றும் அறுதி யிடுகின்றனர்கள். தமிழரின் முதற் றோற்ற இடமாகிய அக்கண்டத்தை இலெமூரியா என்றனர். அதன் விரிவைக் காண்பாம்:—

உயர்திரு. கே. அப்பாதுரைப் பிள்ளையவர்கள், எம்.ஏ., எல்.டி., தமது குமரிக்கண்டம் என்னும் நூலில் கூறுவதைக் காண்பாம்:—

" இன்றைய உலகப் படத்தை யெடுத்துப் பார்த்தாலுங்கூட இந்தியாவும் ஆப்பிரிக்காவும் முன் இணைக்கப்பட்டிருந்தன வென்று காட்டும் அறிகுறிகளைக் காணலாம். இந்தியாவின் மேற்குக் கரையிலிருந்து ஆப்பிரிக்காவின் அருகிலுள்ள ஸெசெல்ஸ், மடகாஸ்கர், மோரீஸ்வரைக்கும். இலக்கதீவம், மாலாதீவம், சாகோஸ்தீவக்கூட்டம், ஸாயாதே முல்லா, அதஸ்கரை இவை உட்படப் பல தீவுகளும் மணல் மேடுகளும் காணப்படுகின்றன."

"இவற்றுள் ஸெசெல்ஸைச் சுற்றி நெடுந்தொலை கடல் 30 அல்லது 40 பாக ஆழத்திற்குமேல் இல்லை யென்றும் அதனடியிலுள்ள நிலம் தட்டையான அகன்ற மணல் மேடென்றும் டார்வின் என்பவர் குறிப்பிடுகின்றார்."

* * * * *

"மேற்கூறிய இத்தீவுகள் அனைத்தும் இந்தியாவையும் ஆப்பிரிக்காவையும் முன் பிணைத்திருந்த நிலப் பகுதியின் முதுகெலும் பென்னலாகும்."

* * * * *

"இதன்படி கிழக்கிந்தியத் தீவுகளில் மேல் பக்கத்திலுள்ள ஸுமத்ரா, ஜாவா, போர்னியோ முதலிய பெரிய தீவுகள் கிழக்குப் பாதியை அதாவது இன்றைய ஆசியா கண்டத்தைச் சேர்ந்தவை யென்றும், கீழ்ப்பக்கமுள்ள ஸெலிபீஸ், மொலுக்காய், நியூகினி, ஸோலமோன் தீவுகள் முதலியவை கிழக்குப் பகுதி அதாவது இன்றைய ஆஸ்திரேலியாவுடன் சேர்ந்தவை யென்றும் ஏற்படுகின்றன" (பக். 24–25)

* * * * *

"ஆப்பிரிக்காக் கண்டமும் இந்தியாவும் பெரிதும் ஒத்திருப்பதிலிருந்து லெமூரியாக் கண்டம் ஆப்பிரிக்காவையும் இந்தியாவையும் இணைத்திருக்க வேண்டும் என்பதும், கிழக்கிந்தியத் தீவுகளும் ஆஸ்திரேலியாவும் ஒத்திருப்பதிலிருந்து லெமூரியா ஆஸ்திரேலியாவரை ஒரு காலத்தில் எட்டியிருக்கவேண்டும் என்பதும், பஸிபிக் தீவுகள் வட அமரிக்காவில் கலிபோர்னியப் பகுதியுடன் ஒற்றுமையுடையவாயிருப்பதால் லெமூரியா அதனை ஒருவகையில் உள்ளடக்கியிருந்த தென்பதும் விளங்கும் (பக். 23)

"இன்றைய உலக அமைப்புடன் ஒப்பிட்டு நோக்கினால் ஆப்பிரிக்காவின் ஒரு பகுதி, இந்துமாக் கடல், தெற்கு ஆசியா, பசிபிக் கடலின் தென்பகுதி, ஆஸ்திரேலியா இத்தனையும் லெமூரியாக் கண்டம் உள்ளடக்கியிருந்தது (பக். 48)

இக்கூற்றுக்களால் இலெமூரியாக் கண்டத்தின் பரப்பினை ஒருவாறு உணரலாம். இப்பரந்த நிலத்தில் அக்காலத்தில் ஒரே மொழி வழக்கில் இருந்திருக்கின்ற தென்பதை ஆங்காங்கு வழங்கும் மொழிகளிற் காணப்படும் ஒற்றுமைகள் சான்று பகர்கின்றன. அவற்றை யீண்டு விரிப்பிற் பெருகும். அம்மொழிகள் யாவற்றிலும் உள்ள ஒற்றுமை தமிழையே பெரிதும் ஒத்திருக்கின்றது. அதனால் லெமூரியாக் கண்டத்தில் முதற்கண் வழங்கிய மொழி தமிழ் மொழியே என்னலாம். இலெமூரியா தமிழ் நாடாக இருந்தது.

### கடல்கோள்

காலப் போக்கில் இக்கண்டம் கடல்வாய்ப் பட்டது. இதன் சிறு பகுதியே யிக்காலத்து எஞ்சி யுள்ளது. நான்கு பெரிய கடல் கோள்களினால் இலெமூரியா அழிந்தும் சிதறுண்டும் போயிற்று.

1. இன்றைக்கு. 10,0000 ஆண்டுகட்கு முன் நிகழ்ந்தது.
2. ,, 82,000 ,, ,,
3. ,, 75,000 ,, ,,
4. ,, 50,000 ,, ,,

முதற் கடல் கோளால் நிலப்பரப்பாயிருந்த இடம் இந்துமாக்கடல் என்றும் பசிபிக்கடல் என்றும் இரண்டு கடல்கள் தோன்றப் பிரிவடைந்தது. அழிந்த நிலப்பரப்பும் பல. பின் மற்றைய மூன்று கடல் கோள்களாலும் பெரும்பாகம் அழிந்தன.

இந்நான்கு கடல் கோள்களுக்குப் பின்னர் மடகாஸ்கர், இந்தியா, பசிபிக் தீவுகளிற் பல இவைகளே எஞ்சின. நான்காம் கடல் கோளுக்குப் பின்னர் அட்லாண்டிக் கடல் பகுதி நிலமாயிற்றென்றும் இன்றைக்கு 15000 ஆண்டுகட்கு முன்னர் நிகழ்ந்த கடல் கோளால் அதுவும் அமிழ்ந்ததென்றும் அறிஞர் கூறுவர். இவ்வைந்தாம் கடல்கோளுக்குப் பின்னர் தலைச் சங்க மதுரைக் கடல்கோள் நிகழ எஞ்சிய நிலப் பரப்பே இக்காலச் சங்க நூல்களிற் கூறப்படும் குமரிக் கண்டமாகக் கொள்ளலாம். இக் குமரிக் கண்டத்தையும் கடல் விட்டுவைக்க வில்லை. (இதனைப்பற்றிய கடல்கோள் பின்னர் ஆராயப்படும்) குமரிக் கண்டக் கடல்கோளால் பல நிலப் பரப்புக்கள் நீரில் அமிழத் தற்காலத்தில் இலங்கை, தென்னிந்தியா என்ற அளவில் தமிழ்நாடு அமைவதாயிற்று. இந்தியா முழுமையும் ஒரு காலத்தில் தமிழ் வழங்கி வந்திருக்கின்றது. ஆரியர் வரவால் வட இந்தியாவில் தமிழ் ஆட்சி நீங்கியது.

## வட நாடும் தமிழ் நாடாயிருந்தது

வட இந்தியா ஒரு காலத்தில் தமிழ் நாடாக இருந்தது. அண்மையில் சிந்து சம வெளிகளில் ஆங்காங்குத் தோண்டி யெடுக்கப்பட்ட நகரங்களில் ஹரப்பா, மொஹெஞ்சொ—தரோ நாடுகள் மிகப் பழமை வாய்ந்தன. அவைகளில் தென்னிந்தியரின் பழக்க வழக்கங்களும் கலைகளும் நாகரிகங்களும் சமய நிலைகளும் கிடைக்கப் பெற்றிருக்கின்றன. அந்நகரங்களைத் தமிழரே தமக்குரிய இடமாகப் பெற்றிருந்தனர் என ஆராய்ச்சியாளர் அறுதியிடுகின்றனர்.

* "மொஹெஞ்சொ—தரோவில் வாழ்ந்த மக்களும் தென்னிந்தியத் திராவிடரும் ஓர் இனத்தவரே. அவர்கள் இரு பிரிவினரும் பேசிய மொழி ஒன்றே. சிந்துவெளி மொழி திராவிடம் என்பதில் ஐயமே யில்லை. அது தமிழையே பெரிதும் ஒத்துள்ள தென்று உறுதியாகக் கூறலாம்."

இதுபோன்ற பல அறிஞர்களின் கூற்று மலிந்திருக்கின்றன. அந்நகரங்களில் காணப்படும் பொருள்கள் அனைத்தும் தமிழர் பொருள்களுடன் ஒப்புமையுடையனவாக இருக்கின்றன. தமிழர்க்கே சிறப்பாக உரிய இலிங்க வழி பாட்டிற்கேற்ற அடையாளங்கள் அந்நகரங்களிற் காணப்படுகின்றன. "ஒரு பானை சோற்றிக்கு ஒருசோறு பதம்" என்பதுபோல் வட நாடு முழுமையும் தமிழ் நாடாக இருந்தது என்பதற்கு இந்நகரங்களின் சான்றுகளே அமையும் என்று மேற்செல்வோம்.

## ஆரியர் வருகை

இந்தியா முழுமையும் தமிழ் நாடாக இருந்த காலத்தில் ஆரியர்கள், தற்காலத்தில் மகமதியர் ஆங்கிலேயர் முதலியவர்கள் போந்ததுபோல் கணவாய்களின் வழியாக வந்தவர்களே. அவர்கள் இந்தியாவில் காலெடுத்து வைத்தது கி.மு. 3,000க்குச் சற்றுப் பின்னர் தான் என்று அறிஞர்கள் கூறுகின்றனர்கள். † அவர்களின் ஆதி அகம் தென் ரஷ்யப் புற்றரை நிலப்பரப்பாகலாம் என்று காலஞ்சென்ற ச. கு. கோவிந்தசாமிப் பிள்ளை, எம். ஏ., அவர்கள் கூறுகிறார்கள். அவர்களின் தொழில் ஆடு மாடுகளை மேய்த்தல். அவை

---

* மொஹெஞ்சொ—தரோ பக். 278.

† இந்தியர் வரலாறு பக். 41.

தரும் பால் முதலியன அவர்களின் உணவுகள். அவை களின் இறைச்சிகளையும் விட்டவர் அல்லர். சிறந்த நாகரிகத்தில் தமிழர் வாழ்ந்த அக்காலத்தில் ஆரியர் கள் நாடோடிகளாகவும் நாகரிகம் அற்றவர்களாக வுமே யிருந்தார்கள். தங்கள் ஆடு மாடுகளை மேய்ப் பதற்குச் செழித்த புற்றரைகளை நாடிச் செல்வர். தற்காலத்தில் நம் நாட்டில் குறவர் குறத்தியர்கள் கூடாரங்களுடன் பல ஊர்களிலும் சென்று தங்குதல் போல அவர்கள் ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டு ஊரூராய்த் திரிந்தனர். எவ்விடத்தில் தங்கள் கால் நடைகளுக்கு உணவு செழித்துக் கிடக்கின்றதோ அவ்விடத்தில் வாரம், மாதம், ஆண்டுகளாகத் தங்கி னர். அங்ஙனம் தங்கித் தங்கி வந்தோரே இந்தியாவி லும் குடியேறியவர்கள். அங்ஙனம் குடியேறித் தங்கி யவர்கள் பல்வளமும் செழித்த சிந்து நதிக்கரைகளில் வேரூன்றலாயினர். அவர்களைக்கண்ட தமிழர்கள் ஆரியர் என்றனர். ஆரியர் என்ற சொல்லுக்குத் தாழ்ந்தவர் என்பது பொருள். அதுவே பிற்காலத் தில் பெரியவர்கள் என்ற பொருளில் வழங்கலாயிற்று. அவர்கள் மிகவும் வெண்ணிறத்தவர்களாக இருந்த னர். காலப்போக்கில் தமிழர்களுடன் கலக்கலாயி னர். தமிழர்களுடன் கலப்பதற்குப் பல போர்கள் புரிந்திருக்கவேண்டும் எனத் தெரிகிறது. தமிழர் களும் இரக்கமுடைய நெஞ்சினராதலின் அவர்களும் நாட்டில் இருக்க இடம் அளித்தனர். 'இடங் கொடுத்தால் மடம் பிடுங்குவான்' என்பது போல வும், 'ஒண்டவந்த பிடாரி ஊர்ப்பிடாரியை விரட்டிய தாம்' என்பது போலவும் தமிழர்களையே வட நாட் டகத்திருந்து விரட்டத் தொடங்கினர். இம் முறை

யில்தான் தற்காலத்தில் தமிழர் வட இந்தியாவை விட்டுத் தம்மவரான தென்னிந்தியருடனேயே தங்க வேண்டியதாயிற்று.

## ஆரியர் தமிழருடன் தொடர்பு கொள்ள மேற்கொண்ட வழிகள்

ஆரியர்கள் தமிழர்களுடன் கலந்தால் தான் வாழ முடியும் என எண்ணினார். ஏனெனின் தமிழர்கள் வாழ்ந்தநாடு செழிப்பானது. வறியன் வீட்டுப்பிள்ளை அடுத்த செல்வந்தன் வீட்டுப்பிள்ளை தின்பண்டங்கள் வைத்திருப்பதைப் பார்த்து விட்டால் அவனை விட்டுப்பிரிய மனமின்றி ஏமாற்றியாவது பிடுங்கித்தின்ன விழைவது போன்று தமிழர்களையே வஞ்சித்து வாழக் கருதினார்கள். வஞ்சித்தார்கள். வாழ்கின்றார்கள். இங்ஙனம் கலந்ததற்கு இவர்கள் மேற்கொண்ட வழிகள் பல. மூன்று ஈண்டுக் குறிக்கின்றோம்.

1. தமிழ்மொழியைப் பயின்று * அம்மொழிச் சொற்களைத் தம் மொழியில் மேற்கொள்ளல்.
2. பெண் கொடுத்தும் கொண்டும் கலத்தல்.
3. நாகரிகம் சமயம் முதலியவற்றைத் தழுவுதல்.

## தமிழ் பயிலுதல்

பிறநாட்டான் ஒருவன் தான்வந்து குடியேறிய நாட்டில் அந்நாட்டின் மொழியைப் பேசுவானாயின் அந்நாட்டான் அவனுடன் பேச மிகவும் விரும்புவன். இது மனித இயல்பு. ஒரு வெள்ளையன் தமிழ் பேசுவானாயின் நாம் விரும்பிக் கேட்கின்றோமன்றோ? அங்ஙனம் பேசுங்கால் அவனிடம் பிழைபாடுகள் பல கண்டு நகைக்கின்றோம். என்றாலும் நம்முடனே பழகுவானாயின் திருத்தமுறப் பேசப் பழக்குகின்

றேம். இம்முறையிலேயே அக்காலத் தமிழர்களிடத்தில்வந்த ஆரியர்கள் தமிழ் பேசினர். முதலில் கண்டு கேட்டு நகைத்த தமிழர் அவர்களைத் திருத்தமுறப் பேசப் பழக்கினர். அவர்களும் சிறிது சிறிதாகத் திருந்தினர். என்றாலும் இன்று வரையிலும் பேராசிரியரால் நகைச் சுவைக்கு உதாரணமாக "ஆரியர் கூறும் தமிழும்" என்று எடுத்துக் காட்டுமளவிலேயே யிருக்கின்றார்கள்.

இங்ஙனம் தமிழ் பயின்ற இவர்கள் தமிழின் இனிமை அழகு ஆற்றல் முதலிய பண்புகளைக் கண்டு அவைகளைத் தமது நாகரிகம் அற்ற ஆரியத்தில் மேற்கொள்வாராயினர். அங்ஙனம் மேற்கொண்டு சீர் திருத்திக்கொண்ட பின்னரே, ஆரிய மொழியாகிய வடமொழிக்குச் 'சமஸ்கிருதம்' என்று பெயர் வந்தது. அச்சொல்லுக்குச் சீர்திருத்தப் பட்டது என்ற பொருளையும் காண்க. அங்ஙனம் மேற்கொண்ட காலத்தில் ஆரியத்தில் தமிழ்ச் சொற்கள் பெரும்பாலும் கலப்பனவாயின. வடமொழியில் இக்காலத்தில் காணப்படும் பெரும்பாலான சொற்களுக்கு வேர்ச் சொற்கள் தமிழில் இருத்தலை அறிஞர் பலரும் ஒப்புவர். தமிழ்ச் சொற்களைக் கலந்த காலத்தில் தங்கள் மொழி, நாகரிகம், பொருட் செறிவு, பண்பு முதலியன பெற்று மிளிர்வதைக் கண்டார்கள். இதனால் மேலும் மேலும் தமிழ்ச் சொற்களைச் சேர்த்துச் சிறுபான்மை தமது சொற்களை வைத்துக் கொண்டார்கள். தமிழ்ச் சொற்களைச் சேர்த்துக் கொள்ளும் முன் தமிழ் எழுத்துக்களையும் அப்படியே மேற்கொண்டதோடன்றிச்

தொல். பொ. மெய். 1 சூ.

சில எழுத்துக்களையும் பெருக்கிக் கொண்டார்கள். எப்படிப் பெருக்கிக் கொண்டார்கள் என்பதைச் சிறிது காண்பாம் :—

| | | |
|---|---|---|
| தமிழில் உயிர் எழுத்து | .... | 12 |
| மெய் | ... .... | 18 |
| உயிர் மெய் | ... .... | 216 |
| ஆய்தம் | ... ... | 1 |
| | | 247 |

இவைகளுள் உயிருள் ரு, ரூ, லு, லூ, அம், அஹா என்று பெருக்கிக் கொண்டார்கள். மெய் எழுத்துக் களை மிகைபடுத்திக் கொண்டார்கள். தமிழ் மெய் பதினெட்டனுள் வல்லெழுத்துக்கள் க, ச, ட, த, ப, ற என்னும் ஆறும். இவ்வாறனுள் இறுதி யெழுத்தை (ஒலிக்கும் ஆற்றல் தங்கட் கின்மையின்) விட்டு மற் றையன வற்றை மிகைப் படுத்தினர். எழுத்துக்க ளின் ஒலி வேறு பாட்டால் மிகைப் படுத்திக் கொண் டார்கள். ஒரே யெழுத்து தமிழில் சிற்சில இடங்க ளில் வெவ்வே றொலியுடன் கூடி வருகின்றது. கீழ் வருவனவற்றை ஒலித்துக் காண்க.

காக்கை இறுதி 'க்' முதல் 'க்' ஐவிட வலிந் தொலிக் கின்றது.

சங்கை இறுதி 'க்' மெலிந் தொலிக்கின்றது.

வரகு இறுதி 'க்' நடு நிலையில் ஒலிக்கின்றது.

இவற்றின் வேறு பாட்டைக் கண்டவுடன் ஆரியர்கள் தமது மொழியில் கவர்க்கம் என்று நான்கு 'க' க்கள் அமைப்பா ராயினர். அன்றியும் வரகு என்பதி

லுள்ள 'க்' வேறுபடுதல் நோக்கி ஹ என்ற எழுத்தை யும் சேர்த்துக் கொண்டனர். இங்ஙனமே, ச, ட, த, ப க்களுக்கும் மிகைப் படுத்தினர். 'ச' இவ்வெழுத் தின் ஒலி வேறு பாட்டில் 'ஜ' 'ஸ' 'ஸ' என்ற எழுத் துக்களையும் அதிகப் படுத்தினர். இங்ஙனமாகவே நாளா வட்டத்தில் 'க்ஷ' போன்ற எழுத்துக்களையும் படைத்தனர். எழுத்துக்களை யிவ்வாறு பெருக்கிக் கொண்ட பின்னரே தமிழ்ச் சொற்களைப் பெரிதும் ஆரியத்தில் மேற்கொள்வா ராயினர். அப்படி மேற் கொள்ளக் கைக்கொண்ட முறைகள் மூவகையின :—

1. சொற்களைச் சிதைக்காமல் அப்படியே யேற்றல்.

2. சொற்களைச் சிதைத்து ஏற்றல்.

3. இரு பொருள் உணர்த்தும் ஒரு சொல்லை ஒரு பொரு ளுக்கு மட்டும் ஏற்று வேறு சொற் படைத்தல்.

இவற்றைச் சில எடுத்துக் காட்டுகளால் உணர லாம்.

| | தமிழ் | வடமொழி (ஆரியம்) |
|---|---|---|
| 1. | முகம் | முகம் |
| | காலம் | காலம் |
| | *மீன் | மீந் |
| | நீர் | நீர் |

இவை சொற்களைச் சிதைக்கா தேற்றன.

*There are a few cases only in which it may be doubtful whether particular words are Sanskrit or Dravidian eg. Nir, water, and Min (fish) are claimed as component parts of both languages, though I belive that both are Dravidian origin (Galdwell comparative grammar of the Dravidian languages. Introduction Page 43).

2.

| | | |
|---|---|---|
| பாலை | மாலா | ஈற்றுத்திரிபு |
| கலை | கலா | |
| சேனை | சேனா | |
| புத்தகம் | புஸ்தகம் | இடைத் திரிபு |
| மனிதன் | மனுஷ்யன் | |
| பழம் | பலம் | |
| பகுதி | ப்ரகிருதி | முதல் திரிபு |
| இமம் | ஹிமம் | |
| சலம் (வஞ்சனை) | சாலம் (ஜாலம்) | |

இவை சொற்களைச் சிதைத்து ஏற்றன.

| | | |
|---|---|---|
| இலங்கை | லங்கா | முதலுயிர் நீக்கல் |
| உலகம் | லோகம் | |
| உருவம் | ரூபம் | |

இவையும் அவையே.

3. சிவம் — சிவம்.

"......வெகுளியையும் நிறத்துருவையும் உணர்த்துகின்ற 'சிவப்பு' என்னும் சொல்லால் நிறத்தை மட்டும் குறித்துக் கடவுளைச் 'சிவம்' என்று வழங்கிப் போந்தனர் பண்டைய தமிழ் மக்கள். ஆனால் இந்நாட்டில் வந்த ஆரிய மக்கள் தமிழருடன் பழகி அவர்தங் கொள்கைகளிற் பல கற்றுக்கொண்ட காலத்தே 'சிவம்' என்னும் சொல்லை வெகுளிப் பொருட்டாக்கி உருத்திரன் என்ற பெயர் தந்து வெகுளியோடு கூடிய உருவத்தை யுடையவராகச் சிவத்தைத் தமது ஆரியப்பாட்டில் கூறுவாராயினர். "நமஸ்தே ருத்ரமந்யவ" (க. ஸ்ரீருத்ரம்) இதன் பொருள் "வணங்குகின்றேன் உருத்திரனே உமது கோபத்திற்கு" இஃது வித்வான், திரு. அடிகளாசிரியர் அவர்களால் வீரசைவப்பிரமாணம் என்ற தமது பதிப்பு நூலில் முகவுரையில் எழுதப்பட்டது'

இங்ஙனமாகத் தமிழ்ச் சொற்களைத் தமது ஆரிய மொழியில் சேர்த்துக் கொண்டனர். சேர்த்துத் தமது மொழியை மேலும் வளப்படுத்தினர். பற்பல நூல்களையும் எழுதினர். தமிழர்களிடத்தில் அவைகளைப் பரப்பினர்.

## பெண் கொடுத்தும் கொண்டும் கலத்தல்.

வட நாட்டில் பாஞ்சாலம், கோசலம், விதேகம், விஸ்வலம், மதுரை, மகதம், மாளவம் முதலியன தமிழரது இராச்சியங்கள். குடியேறிய ஆரியர்கள் நாளா வட்டத்தில் பஞ்சாப்பில் நிலைத்தனர். நிலைத்த காலத்தில் மேற்கூறிய இராச்சிய அரசர்களுடன் உறவு கொண்டனர். உதாரணமாக இரண்டு காண்பாம்.

* 1. அத்தினபுரி அரசன் திருதராட்டிரன் (தமிழ் அரசன்) காந்தாரன் என்னும் ஆரிய அரசனின் மகளை மணந்தான்.

2. ஆரியத் தசரதனின் மகன் இராமன் தமிழரசனாகிய சனகனின் மகள் சீதையை மணந்தான்.

நல்ல நாகரிகம் அடைந்து நாடும் அடைந்து அரசும் பெற்ற காலத்தில் மேற்கண்டபடி தமிழருடன் கலந்த அவர்கள் நாகரிகம் அற்றகாலத்தில், ஒண்டி வாழவந்த காலத்தில் ஏன் பெண்களைக் கொடுத்துத் தமிழர்களுடன் கலந்திருக்க மாட்டார்கள். ஆரியர் வகுத்துக்கொண்ட சாதிப் பிரிவினைகளுள் அநுலோமர், பிரதிலோமர் சங்கர சாதியார் என்ற பிரிவுகளைக்

---

* இக்கொள்கை ந. சி. கந்தையா பிள்ளையவர்கள் எழுதிய தமிழர் சரித்திரம் என்னும் நூலின் இறுதியில் உள்ள 'தமிழர் ஆரியர் கலப்பு' என்ற தலைப்பில் விளக்கப் பட்டிருக்கின்றது.

காணுமிடத்து இவர்கள் தமிழர்களுடன் கலப்பதற்கென்றே ஏற்படுத்திக் கொண்டனவாம் அவைகள் என்பது போதரும் அன்றோ? பெண்களைக் கொடுத்தது போன்றே தமிழ்ப் பெண்களையும் தாங் கொள்வாராயினர்.

## நாகரிகம் சமயங்களைத் தழுவுதல்.

எங்ஙனமாயினும் தமிழ் நாட்டில் நிலைக்க வேண்டும் என்றெண்ணிய ஆரியர் தமிழர் நாகரிகத்தைப் பின்பற்றினர். உடைவகை, அணிவகை பழக்க வழக்கங்கள் முதலியவற்றை மேற்கொண்டனர். (இக்காலத்திலும் வெள்ளையர் பெண்கள், தமிழ் நாட்டில் வந்து வாழ்வோர்கள் தமிழ் மாதர்களைப் போன்று சேலை யுடுத்தி உலாப் போதலைக் காண்கின்றோமன்றோ?) இங்ஙனமாகவே உணவு வகைகளையும் மேற்கொண்டனர்.

சிவ வணக்கமே யறியாத ஆரியர்கள் சிவ வணக்கத்தை மேற்கொண்டார்கள். முருக வழிபாடும் அப்படியே. யாக வழிபாடும் தமிழரிடையேதான் கற்றனர் என்றும் கூறலாம். தமிழர்களது உயிர்க் கொலையில்லாத யாகத்தைக்கண்ட அவர்கள் தாமும் யாகம் செய்ய முற்பட்டுத் தமது பழக்கப்படி இறைச்சிகளையும் சேர்த்து யாகத்தின் பேர்சொல்லி யுண்பாராயினர். ஆடு மாடுகளை மேய்த்துக்கொண்டு வந்த கூட்டத்தினர் யாகம் முதலிய நாகரிக மக்கள் மேற்கொள்ளக்கூடிய செயல்களை மேற்கொண் டிருந்திருக்கலாம் என எண்ணுதற்கில்லை. ஆகவே இவைபோன்றவற்றைத் தமிழரிடையேதான் அவர்கள் அறிந்திருக்க வேண்டும். (ஆரியர் யாகத்தில் உயிர்க் கொலையிருப்

பதைக் கண்டுதான் ஆரியர் வடநாடு வந்த சில நூற்றாண்டுகளின் பின் வாழ்ந்த இராவணன் போன்ற தமிழரசர்கள் ஆரிய யாகங்களை அழிப்பாராயினர். தமிழ்யாகத்தை அழித்தார்கள் அல்லர். ஆகவே நாகரிகம் சமயம் முதலியவற்றை மேற்கொண்டும் தமிழரிடையே கலந்தனர் ஆரியர்கள்.

## பகைமை.

பலவகையிலும் தமிழரோடு கலந்த ஆரியர்கள் தங்கள் கூட்டங்களைப் பல்வகையிலும் பெருக்கிக் கொண்டனர். பின்னர்த் தாம்இருந்த இடத்திலிருந்த தமிழர்களை விரட்டத் தொடங்கினர். தமிழர்கள் தற்காலத்தில் தென்னிந்தியா அளவில் அடங்கும்படிச் செய்துவிட்டனர். தமிழ் மொழிக்கும் கேடு பல விளைவிக்க முயன்றனர். மகத்திற்புக்க சனியெனத் தமிழ்க்கும் தமிழர்க்கும் ஆயினர். வடநாட்டுத் தமிழர்களைத் தம் வயமாக்கினர். தமிழ்ச் சொற்களைத் தாங்கள் கைக்கொண்டு தமது ஆரிய மொழியை வளப்படுத்திய தன்றியும் அச்சொற்களைத் தம் மொழிக்கே யுரியன என்று கூறவும் துணிந்தனர். தமிழ்ச் சொற்களைக் கைக் கொண்ட காலத்தில் அவைகளைத் தமிழ்ச் சொற்களே யென்று கூறிவந்து பின்னர்த் தமிழர்களைத் தம் வயமாக்கிய காலத்தில் அவைகளை ஆரியச் சொற்கள் என்றனர்.

"பச்சைப் புளு கெல்லாம் மெய்யாக நம்பி
பலபொருள் இழப்பார்கள் மடமைவிரும்பி"

என்ற **பாரதி தாசனுர்** வாக்கின்படி ஆரியமயமான வடநாட்டுத் தமிழர்களும் நம்பினர். அஃதன்றியும் ஆரிய மொழியையே பெரிதும் விரும்பிப் பயில்வாராயினர்.

நாளடைவில் தமிழை மறந்தனர். போக்குவரவு வசதியற்ற அக்காலத்தில் வட இந்தியர் நிலையைத் தென்னிந்தியத் தமிழர்கள் அறிய இயலாததாயிற்று. வட இந்தியாவைக் கைக்கொண்ட ஆரியர்கள் தென்னிந்தியாவையும் மனத்திருத்தினர். அவர்கள் எண்ணம் முற்றும் முற்றுப்பெருதாயிற்று. **ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்** போன்ற தமிழரசர்கள் காலத்தில் வட ஆரியர்கள் தமிழரசர்களால் துன்புற்றிருக்கின்றனர் என நாம் உணர்கிறோம். இந்நிகழ்ச்சி மிகப் பிற்காலத்தென்றால் மிக முற்காலத்தில் ஆரியர்கள் எவ்வாறு துன்புற்றிருக்க வேண்டும் எனச் சொல்ல வேண்டுவதில்லை. கி. மு. ஆண்டில் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர்தான் ஆரியர் தென்னாட்டில் குடியேறி யிருக்கவேண்டும்.

தமிழ்ச் சொற்களாலேயே ஆரிய மொழியை வளப்படுத்திக் கொண்டிருந்தும் காலப் போக்கில் ஆரியச் சொற்கள் பல தமிழில் புகுந்தன என்பாராயினர். உண்மையாகக் கூறுமிடத்துத் தமிழ் இலக்கியங்களில் ஆரியச் சொற்கள் என்று கருதப் படுவனவாக எவ்வெச் சொற்கள் காணப்படுகின்றனவோ அவைகள் யாவும் தமிழ்ச் சொற்களே யன்றி ஆரியச் சொற்கள் அல்ல. உதாரணமாக ஒன்று காண்பாம் :—

**'இலிங்கம்'** இதனை **'லிங்கம்'** என்று கூறி ஆரியச் சொல் என்பர். ஆரியர்களுக்கு இலிங்க வழிபாடே யில்லை யென்றும் அவர்கள் தமிழர்களுடன் கலந்த பின்னரே இலிங்க வழிபாட்டை மேற்கொண்டனர் என்றும் ஆராய்ச்சியின் முடிபாக அறிஞர் கூறுகின்றனர். ஆரியர் இந்தியாவிற்கு வருமுன்னரே தமிழர்கள் நாகரிகமாக வாழ்ந்த மொஹெஞ்சொதரோ

என்ற நகரமே சான்று பகருகின்றது. ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்த பின்னர் எழுதப்பட்ட இருக்கு வேதத்திலும் இலிங்க வழிபாட்டைப் பற்றிக் கூறப் படவில்லை. அதனால் இலிங்கம் என்பது தமிழ்ச் சொல்லே யென்பது தேற்றம்.

இதுகாறும் கூறியவற்றால் ஆரியர்கள் தமிழர்க்குப் பெரும் பகைவர்களாகவே இருந்து வந்திருக்கின்றனர் என்பது போதரும்.

## அகத்தியர்—தமிழ்ச்சொல்.

'இலிங்கம்' என்ற சொல் எப்படி ஆரியச் சொல் எனப்பட்டதோ அஃதேபோன்று அகத்தியர் என்ற சொல்லும் ஆரியச் சொல்லாக்கப்பட்டது. இது தூய தமிழ்ச்சொல். இது குறித்து உயர்திரு. தேவநேயப் பாவாணர் அவர்களின் கருத்தைக் காண்பாம்;—

* "அகத்தியரைச் சிலர் தமிழர் என்று கொண்டு தமிழ்க்கு அகத்திய மானமைபற்றி அகத்தியர் எனப் பட்டார் எனக் கூறுகின்றனர். இது பொருந்தப் புளுகலே யன்றி வேறன்று.

அகத்தியர் ஆரியர் என்றற்குக் காரணங்கள்.

1. அகஸ்தியன் என்பது ஓர் ஆரியப் பெயரா யிருத்தல். ஒ.நோ. Augustus, Augustine, Augusta

2. அகத்தியர் வடக்கிருந்து வந்தமை.

3. அகத்தியர் ஆரிய முனிவராக நூல்களிற் கூறப்படுதல்.

4. அகத்தியர் புதியதாய்த் தமிழ் கற்றல்."

அகத்தியர் என்ற சொல் அகஸ்தியர் என்றாக்கப் பட்டதா அன்றி அகஸ்தியர் அகத்தியர் என்றாக்கப் பட்டதா? இதுவே முதற்கண் ஆராய்தற் பாலது.

* ஒப்பியன் மொழி நூல் பக். 183. 184.

அகம் என்ற பகுதியின் அடியாகத் தோன்றியது அகத்தியர் என்பது. அர் விகுதி. 'அந்து' சாரியை. அகத்தர் என்பது பின் அகத்தியர் என்ருகி யிருக்கலாம். புலத்தியர் என்பதும் அப்படியே (அகத்தியரைப் போலவே புலத்தியரும் ஆரியரால் புலஸ்தியர் என்ருக்கப்பட்டார். நிற்க) அகத்தியர்க்கு இப்பெயர் இயற்பெயரன்று. காரணப் பெயர் என்றே கொள்ளல் வேண்டும். இயல் இசை நாடகம் என்ற முத்தமிழையும் தன்னகத்துக் கொண்டவர் என்பதே இதற்குப் பொருள். (இது போலவே புலம் உடையவன் புலத்தியன் எனப் பட்டான்) அகத்தியரைப் போல அக்காலத்தில் முத்தமிழையும் முறைப்பட ஓதியுணர்ந்து தம்மகத்தில் நிறுத்தியவர் இன்மையின் அக்கால மக்கள் இவரைச் சிறப்பிப்பான் வேண்டி அகத்தியர் என்று அழைத்தன ராதல் வேண்டும். அச்சிறப்புப் பெயரே நிலைப்ப தாயிற்று. இங்ஙனம் கொள்ளுவதே தக்க முறையன்றி அகஸ்தியர் என்ற சொல் தான் அகத்தியர் என்ருயது என்று கொள்ளுவது தவருகும். ஆரியர்களே அகத்தியர் என்ற சொல்லைத் தம தாக்கின ரன்றித் தமிழர் வட சொல்லை ஏற்றிக் கொண்டனர் அல்லர்.

இங்ஙனம் தமிழ்ச் சொற்களை யெல்லாம் வட சொற்களாக உச்சரிக்கும் இயல்பினர் ஆரியர்கள் என்பதைப் பாவாணர் அவர்களே கூறுவதை யீண்டு எடுத்துக் காட்டுவோம்.

* "6. **தென் சொல்லை வட சொல் போல் ஒலித்தல்.**

*ஒப்பியன் மொழிநூல் பக். 63.

குட்டம் முட்டி என்னும் தமிழ்ச் சொற்கள் குஷ்டம், முஷ்டி என்று வடமொழியில் வழங்குவது போல வேட்டி யென்னும் 'தமிழ்ச் சொல்லும் வேஷ்டி யென்று தவறாய் வழங்குதலும் வேங்கட' என்பது 'வெங்கட்ட' என்று வலித்தலும் காண்க.

இங்ஙனம் கூறிய அவர்கள் கூற்றுப்படியே ஆரியர்கள் அகத்தியர் என்ற சொல்லைத்தான் அகஸ்தியர் என்று கொண்டனர் என்று ஏன் கூறுதலாகாது. 'த்' 'ஸ்' ஆக ஆக்கப்படுதல் ஆரியத்தில் உண்டு என்னலாம் 'புத்தகம்'—'புஸ்தகம்' போன்ற சொற்களை ஒப்பு நோக்குக. புது+அகம் = புத்தகம். புதிய செய்திகளைத் தன்னகத்துக் கொண்டது என்பது பொருள்.

ஆரியர்கள் தமது புராணங்களில் பொய்க் கதைகள் பல புனைந்தனர் என்பதை நன்கறிந் துரைக்கும் பாவாணர் அவர்கள் அகத்தியர் ஆரியரே யென்பதற்கு மற்றைய மூன்று காரணங்களைக் காட்டுதல் பொருந்தாது. வடக்கிலிருந்து வந்த சிலர் தமிழ் அகத்தியர் பெயரைத் தாம் அகஸ்தியர் என்று திருத்தி வைத்துக் கொண்டு தமிழர்க்குக் கேடு சூழ்வதற் கென்றே வாழ்ந்தவர்களைப் பற்றிப் பின்னர் எழுதப்படும்.

# 2. தமிழ் அகத்தியர்கள்

## தமிழ் அகத்தியர் I

அகத்தியர் ஒருவர் அல்லர். நால்வருக்கு மேற் பட்டிருந்திருத்தல் வேண்டும். அவருள் தமிழ் அகத்தியர் இருவர். ஆரிய அகத்தியர் இருவர். இந்நால்வருமே சிறந்தவர்கள். பிற அகத்தியர்களும் இருந்திருக்கின்றனர். ஒவ்வொருவர் வரலாறுகளையும் முறையாகக் காண்பாம் :—

தமிழகத்தியர் I வரலாற்றைப் பற்றி விரிவாக அறிவதற்கு ஒரு சான்றும் இல்லை. ஆனால் இறையனார் களவியல் என்னும் நூலின் வாயிலாகச் சில குறிப்புக்களை யறியலாம்.

இவர் தலைச்சங்க காலத்தில் விளங்கியவர். இவர் இயற்றிய நூல் அகத்தியம். அக்காலத்தில் இவர்க்கு முன் வாழ்ந்த புலவர்கள் பலர் இயற்றிய இலக்கண இலக்கிய நூல்களும் இசை நாடக நூல்களும் விரிந்த நிலையில் கிடந்தமையால் அவற்றைத் தாம் சுருங்கிய நிலையில் முத்தமிழ் இலக்கணமாக அகத்தியத்தை யியற்றினர் அந்நூலின் அருமை நோக்கித் தலைச் சங்கத்தினர் தமக்கு இலக்கண நூலாக அமைத்துக் கொண்டனர்.

* "நாம் அறிந்த வரையில் தமிழறிஞர்களில் முந்தியவராயும், தமிழுக்குப் புத்துயிர் கொடுத்து மிகவும் கொண்டாடுதற் குரியதும் உலகத்தில் இணையில்லாததுமாகிய பேரகத்தியம் என்னும் உயரிய இலக்கண

*தமிழ் வரலாறு பிற்பாகம் முற்பகுதி பக். 5.

நூலை யியற்றி யருளியும், பலர்க்குத் தமிழைக் கற்பித்தும் பாண்டிய அரசனது உதவியைப் பெற்றுப் பெரியதோர் சங்கத்தை நிலை நாட்டித் தமிழைப் பரவச் செய்தவராயும் உள்ள மகான் அகத்திய முனிவராவர்'' என கே. எஸ். ஸ்ரீநிவாசப் பிள்ளை யவர்கள் கூறினார்கள்.

* "தலைச் சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என மூவகைச் சங்கம் இரீஇயினார் பாண்டியர்கள். அவருள் தலைச் சங்கம் இருந்தார் அகத்தியனாரும், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருக வேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழவனும் என இத்தொடக்கத்தார் ஐந்நூற்று நாற்பத் தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத் தொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களால் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும், களரியாவிரையும் என இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்க மிருந்தா ரென்ப. அவர்களைச் சங்கமிரீஇயினார் காய்சினவழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத் தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங் கேறினார் எழுவர் பாண்டியர் என்ப. அவர் சங்க மிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை யென்ப. அவர்க்கு நூல் அகத்தியம்.''

இது நக்கீரர் கூற்று. இக்கூற்றினைக் கொண்டு நோக்குமிடத்து அகத்தியர் தலைச் சங்கத்திருந்தவர் என்பதும் அவர் இயற்றிய நூலாகிய அகத்தியமே அக்காலப் புலவராற் போற்றப்பட்ட தென்பதும் பெறப்படும். அன்றியும் அகத்தியர் அகத்தியத்தை

*இறையனார் அகப்பொருள் பாயிரம்.

யியற்றிய பின்னரே சங்கம் நிறுவப்பட்டது என்ப தையும் அறியலாம். எங்ஙனமெனின் "அவர்களாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும் முது நாரையும் முதுகுருகும் களரியாவிரையும் என இத் தொடகத்தன". என்று காணப்படுகின்றதேயன்றி அகத்தியம் பாடப்பட்டதாகக் காணப்படவில்லை. "அவருக்கு நூல் அகத்தியம் என்ப" எனத் தலைச் சங்கத்தார்க்கு நூலாக அகத்தியம் கூறப்பட்டதே யன்றி முதுநாரை முதலியன கூறப்படவில்லை. (முது நாரை முதுகுருகு என்பன இயல் இசை நாடகத்துள் எதன்பாற்பட்டன என்றோ இலக்கண நூல் அல்லது இலக்கிய நூல் என்றோ துணிவதற்கில்லை) இக்கார ணத்தால் பலவாகச் சிதைந்து கிடந்த நூல்களை அகத்தியர் ஒழுங்கு படுத்தி 'அகத்தியம்' என்று ஒரு நூல் இயற்றி மக்களுக்கு உதவ, மக்கள் மகிழ்ந்து அதன் சிறப்புக்கண்டு போற்றிய பின்னரே அகத்தி யர் காய்சின வழுதியின் முயற்சித்துணைகொண்டு சங்கத்தை நிறுவி யிருக்கவேண்டும் என எண்ணலாம். புலவர்களும் சங்கத்துப் பயிலும் இலக்கண நூலாக அகத்தியத்தை மேற்கொண்டனராகலாம். முது நாரை முதலியன சங்கப் புலவர்களால் இயற்றப்பட்டு அவ்வக் காலங்களில் அரங்கேறியனவாகும். இத் தலைச் சங்கம் தழைத்தது கடல்கொண்ட மதுரையில்.

இறையனார் களவியலில்,

"அந்தணர்க்காகி அகத்தியன் தானுரை செய்த மும்மைச் செந்தமிழ்க் காவலன் தென்னம் பொருப்பன்" எனவரும்

மேற்கோட் செய்யுளைக்கொண்டு அகத்தியர் (வட நாட்டிலிருந்து) தம்மொடுவந்த பார்ப்பனர்களுக்காக

இலக்கணத்தை (அகத்தியம்) யியற்றினார் எனக் கூறு வாரும் உளர். அவர்கூற்று அகத்திய நூலாசிரியரை வடநாட்டகத்தியர் எனக் கொண்டமையால் நேர்ந்த பிழையாகும்.

தலைச்சங்கத்தில் விளங்கிவந்த புலவருள் அகத்தியரின் மாணவர்களும் இருந்திருக்கலாம். அவர்களின் பெயர்கள் நாம் அறியக்கூடவில்லை.

## தமிழ் அகத்தியர் 2.

இவ்வகத்தியர் இடைச்சங்கத்தை நிறுவியவ ராவர். இவர் ஒரு நூலும் இயற்றினவரல்லர். ஆனால் தமது முன்னவரான அகத்தியர் இயற்றிய அகத்தியத்தை நன்கு பயின்றிருந்தமையால் (இயற்பெயர் மறைய) அகத்தியர் என்று தமிழ்ப் புலவர்களாலும் மக்களாலும் அழைக்கப்பட்டவராவர். இவரது மாணவர் தொல்காப்பியம் இயற்றிய தொல் காப்பியர்.

*இனி இடைச்சங்கம் இருந்தார் **அகத்தியனாரும் தொல்காப்பியனாரும்** இருந்தையூர்க் கருங்கோழியும், மோசியும் வெள்ளூர்க் காப்பியனும், சிறுபாண்டரங்கனும், திரையன் மாறனும், துவரைக்கோனும் கீரந்தையும் என இத் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினார் என்ப. அவர்களால் பாடப்பட்டன **கலியும், குருகும், வெண்டாளியும், வியாழ மாலை**யகவலும் என இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் **அகத்தியமும், தொல்காப்பியமும், மாபுராணமும், இசை நுணுக்கமும், பூதபுராணமும்** என இவை யென்ப. அவர்

*இறையனார் அகப்பொருள் பாயிரம்.

மூவாயிரத்து எழுநூற்றியாண்டு சங்கமிருந்தார் என்ப. அவரைச் சங்கமிரீஇயினார் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவர் சங்க மிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்தென்ப. அக்காலத்துப்போலும் பாண்டிய நாட்டைக் கடல்கொண்டது.

இந் நக்கீரர் வாக்கிலிருந்து இடைச்சங்க காலத்தில் அகத்தியர் ஒருவர் வீற்றிருந்தார் என உணரலாம். சிலர் தலைச் சங்கத்திலிருந்த அகத்தியரே இடைச் சங்கத்தும் இருந்தார் என்பர். அது பொருந்தாது. தலைச் சங்கத்தின் ஆண்டு 4440 என்று கூறப்படுகிறது. இவ்வாண்டின் பெருக்கத்தைப் பற்றி அறிஞர் பலர் பற்பலவாறு மாறுபடுகின்றனர்; இது பற்றிச் சூரிய நாராயண சாத்திரியார் அவர்கள் கூறுவனவற்றைக் காண்பாம்.

*இக் கூற்றுக்களை யாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து தலைச்சங்கத்தை ஒவ்வொரு பாண்டியனும் ஏறக்குறைய ஐம்பதாண்டுகளாக நடாத்த அது நடந்து வந்திருத்தல் வேண்டும் என்பதும், இடைச் சங்கத்தை ஒவ்வொரு பாண்டியனும் ஏறக்குறைய அறுபத்துமூன் றறுபத்து மூன்றாண்டுகளாக நடாத்த அது நடந்து வந்திருத்தல் வேண்டும் என்பதும் போதருகின்றன. இச்சங்கங்கள் இரண்டும் நீடித்த காலம் நடந்து வந்திருக்கவேண்டும் என்பதிலும், பல நூல்கள் இயற்றப்பட்டன என்பதிலும், பாவலர் பலர் சங்கத்தை யொட்டி வாழ்ந்தனர் என்பதிலும், சங்கம் இரண்டும் முறையே யிருந்த மதுரையும்,

*தமிழ் மொழியின் வரலாறு பக் 109-110.

கபாடபுரமும் கடல் கொள்ளப் பட்டன என்பதிலும் ஐயப்பாடில்லை யென்னலாம் மற்றுப் பாண்டியராசர்கள் முறையே ஐம்பதாண்டும் அறுபத்து மூன்றுண்டு மாத ஆண்டு வந்தன ரென்றுரைத்தல் ஐயுறற் பாலதே. ஆயினும் பாண்டியர் எண்பத்தொன்பதின் மரும் பாண்டியர் ஐம்பத்தொன்பதின்மரும் ஒரே தொடர்ச்சியாக ஆண்டு வந்தன ரென்று கருதாது நடுவில் இடையீடுபட்டு அரசின்றிக் கழிந்த ஆண்டுகளும் இவ்வாண்டுகளுடன் கூட்டிக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும் என்று கருதுக. இவ்வாறு தலைச் சங்கம் இருந்த நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றி யாண்டில் இடையீடுபட்டுக் கழிந்தன எத்துணை யாண்டுகளோ? இடைச்சங்கம் இருந்த மூவாயிரத் தெழுநூற்றி யாண்டில் இடையீடுபட்டுக் கழிந்தன எத்துணையோ? இவற்றிற்கும் ஒருவாறு உத்தேச வகையால் தக்க கணக்கிட்டுக் கொள்ளின் மேற்கூறிய பாண்டியர் எண்பத் தொன்பதின்மரும் பாண்டியர் ஐம்பத்தொன்பதின்மரும் ஆண்ட காலத்தின் அளவு குறைந்து நம்புதற் பாலதாகும் என்க. இத்துணை உய்த்துணர மாட்டாத சிலர் வேறுபடக் கூறுவர்".

இக்கூற்றால் நாம் தலைச்சங்கத்திற்குக் கூறப்பட்ட ஆண்டுகளும் இடைச் சங்கத்திற்குக் கூறப்பட்ட ஆண்டுகளும் தவறானவையல்ல வென்றே கொள்ளலாம். கொள்ளுமிடத்துத் தலைச் சங்கத்திருந்த அகத்தியனாரே இடைச் சங்கத்தும் இருந்தார் என்றால் அகத்தியர் 4440 ஆண்டுகட்குமேல் இருந்திருக்க வேண்டும் அன்றோ? இது எள்ளளவும் நம்புதற்கியலாதது. அன்றியும் தலைச்சங்கத்து ஆண்டு 4440 என்பதனை ஓராண்டு என்பது இக்காலத்துக் கணக்

குப்படி 12 மாதங்கள் கொண்ட அளவில் இல்லாமல் இரண்டு மூன்று மாதங்கள் குறைந்ததாக வைத்துக் கணக்கிடினும் 3200 ஆண்டுகளேனும் தலைச்சங்கம் நீடித்திருக்க வேண்டும் அன்றோ? அத்துணைக் காலமாக அகத்தியர் இருந்தார் என்றால் எங்ஙனம் பொருந்தும்?

சிலர் தலைச்சங்கத்தின் தொடக்கத்தில் அகத்தியர் இருந்திலர். இறுதியிலேயே யிருந்தார். மதுரை கடல் வாய்ப்பட்டதும் தப்பியோடிய மக்களுள் அகத்தியரும் ஒருவர். அவர் கபாட புரத்தை யடைந்து பல ஆண்டுகள் சென்றதும் இடைச்சங்கத்தை நிறுவினார் என்று கூறலாம். இதுவும் ஏற்கக் கூடியதன்று. "அவருள் தலைச்சங்கம் இருந்தார் அகத்தியனாரும்" என அகத்தியரை முதற்கண் வைத்திருத்தலாலும், சங்க காலத்தில் இயற்றப்பட்டதாக முதுநாரை முதலியன கூறப்பட்டிருத்தல் போல் அகத்தியம் கூறப்படாமையானும், தலைச்சங்கத்திற்கு அகத்தியம் ஒன்றே நூல் என்றமையானும் ஏற்கக் கூடாததாகவே இருக்கின்றது. இறுதிக் காலத்திலிருந்தவராயின் அகத்தியத்திற்கு முன்னர்த் தலைச்சங்கத்திற்கு ஒருநூல் இருந்திருக்க வேண்டுமன்றோ? அப்படி ஒரு நூல் இருந்ததாகக் கூறாமையால் இந்நூல் தொடக்க முதல் அவர்க்கு நூலாக இருந்திருக்கின்றதென்பது புலனாகும். ஆகவே தலைச்சங்கத்து அகத்தியர் வேறு. இடைச்சங்கத்து அகத்தியர் வேறு என்று உறுதியாகத் துணியலாம். இனி இடைச்சங்கத்து அகத்தியரைத் தமிழகத்தியர் II என்றே குறிப்பிடுவோம்.

தமிழ் அகத்தியர் II மாணவர் தொல்காப்பியர். இவருடன் இவர் வடநாடு சென்று திரும்பியவராக

மகாமகோபாத்யாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர்

வேண்டும். வடநாடு சென்று வந்த பின்னரே தொல்காப்பியர் தொல்காப்பியம் இயற்றினவராவர். தொல்காப்பியம் இயற்றியபின்னரே இடைச் சங்கமும் நிறுவப்பட்டிருக்க வேண்டும். வடசொற்கள் தமிழில் வந்து வழங்கும் முறை கூறியது கொண்டு இவர்கள் வடநாடு சென்று வந்தவர்கள் எனக் கூறலாம்.

"வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"
"சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்"

என்னும் சூத்திரங்களைக் காண்க. இங்ஙனம் வடசொற்கள் தமிழில் வழங்க வேண்டிய இன்றியமையாமை தோன்றியதற்குக் காரணம் தாம் வடநாடு சென்றுவந்ததாகவே யிருக்க வேண்டும். தொல்காப்பியர் காலத்தில் வடநாட்டில் பெரும்பாகம் ஆரியர் வயப்பட்டன வாதல் வேண்டும். தமிழரும் ஆரியமயமாயினர். தமிழர் ஆரிய மயமாவதைத் தடுப்பான் வேண்டியோ அல்லது உலகம் சுற்றுதல் வேண்டியோ அகத்தியர் II தொல்காப்பியருடன் வடநாடு சென்றிருக்கலாம். அங்ஙனம் சென்று மீண்ட போது ஆரிய வரலாற்றைப்பற்றித் தென்னாட்டுத் தமிழரிடையே விரித்துரைக்குங்கால் ஆரியப் பெயர்கள் கூறவேண்டியதாயிருந்திருக்கும். அதனால் அவற்றைத் தமிழில் கூறுங்கால் தமிழ்ப்பண்பின் இசை கெடுவதன்றிக் கேட்கவும் அருவருப்பாயிருத்தலை நோக்கிச் சில இலக்கணவரம்புடன் பேசியிருப்பர். அதையே தமது இலக்கண நூலிலும் புகுத்துவராயினர். இவர்காட்டிய வழியே இன்று தமிழ் மொழிக்கும் தமிழ் நாட்டிற்கும் இடையூருயிற்று. ஆனல் அவர் ஆரிய மொழியின் கண் காணப்படும் சில பெயர்களை மட்டும் விதந்து இலக்

கணம் கூறினுரேயன்றிச் சிவஞான முனிவர், வியாக்கியான ஆசிரியர்கள் போன்ற வடமொழிப் பற்றுள்ள பிற்காலத் தமிழ்நூல் உரையாசிரியர்களைப் போல வினைச் சொற்களை யெல்லாம் புகுத்த இலக்கணம் கூறினர் அல்லர். ஆகவே தொல்காப்பியர் வடநாடு சென்று வந்தபின் இலக்கணம் இயற்றினர் என்று கொள்வதுடன் அகத்தியத்தின் விரிவு கண்டு அதனிற் சுருங்கிய நூல் ஒன்று இயற்ற வேண்டும் என்று உட்கொண்டு இத் தொல்காப்பியத்தை யியற்றினர் என்றும் கொள்ளுதல் வேண்டும்.

இனி தமிழகத்தியர் II வடநாடுசென்று வந்தமைக்குரிய சான்றுகள் காண்பாம் :—

1. அகத்தியர் வடநாட்டிலிருந்து வந்தார் என்றுகூறும் வழக்கு. இவ்வழக்கு ஆரிய அகத்தியர்கள் வடநாட்டிலின்றும் வந்ததைக் குறிக்குமேயன்றி வேறன்று. அது பின்னர் விளக்கப்படும்.

2. * "வான்மீகி இராமாயணத்தால் விந்திய மலைக்குத் தென்பால் பஞ்சவடி (நாசிக்) அடுத்து இம் முனிவர் (அகத்தியர்) இருந்த தவச்சாலை உள்ள தென்று கேட்கப்படுகின்றது. (ஆரணிய 11, 42) மேற் கூறிய இராமாயணம் கிஷ்கிந்தாகாண்டத்தில் தென் கடல் ஓரத்து மலையபருவதத்தையடுத்து இம்முனிவர் தவச்சாலை யுள்ள தென்றும் அறியப்படுகின்றது. (வான். இரா. 5-41: 15-16) அந்த மலயமலையின் சிகரத்திலே ஆதித்தனுக்குச் சமானமான மிகுந்த ஒளியையுடைய முனிசிரேஷ்டரான அகத்தியரைக் காண்பீர்கள்' என்பதனுல் இஃதறியலாம். இவ்விரு தவச்சாலைகளிலும் கூறப்படும் அகத்தியர் ஒருவரோ இருவரோ

எனத் துணியலாகாதபடி ஐயம் நிகழ்கின்றது" என. ரா. இராகவய்யங்காரவர்கள் கூறுவர்.

† * உயர்திரு. பி. டி. சீநிவாசய்யங்கார் அவர்கள் பின்னர்க்கூறப்பட்டசெய்தி இடைச் செருகல் என்று கூறுவர். அதாவது அகத்தியர்க்குப் பிற்பட்டவர்களுள் ஒருவர் பாடிச் சேர்த்திருக்கவேண்டும் என்பர்.

முதல் ஐயங்கார் அவர்கள் ஐயுற்ற அகத்தியர் இருவரே. தமிழகத்தியர், வடநாடு சென்ற காலத்தில் தாம் தங்குவதற்கு ஆங்காங்கு குடிசைகள் அமைத்துக்கொண்டதுபோன்று பஞ்சவடியிலும் அமைத்துக்கொண்டார். தாம் தென்னாட்டுக்கு மீளும்போது தமதுபெயர் விளங்க ஆரியருள் ஒருவரைத் தமக்குப் பதில் அங்கு நிறுவினர். அவரதுவழியில் வந்தவரே இராமாயணத்தில் குறிக்கப்படும் அகத்தியர். நமது தமிழகத்தியர். II இருப்பிடம் கபாடபுரம் என்பது இறையனார் களவியலில் இடைச்சங்கத்திற்கு இடம் கபாடபுரம் என்று கூறப்பட்டதிலிருந்து அறிந்தது. இவர் கபாடபுரத்திலிருந்து வடநாடு செல்லுங்கால் பொதிய மலையில் தங்கியகாலத்தில் ஆங்கும் ஒரு குடிசை அமைத்தனர். ஆங்கும் தம்பெயர் விளங்க ஒரு தமிழரை நிறுவினர் அவரது பரம்பரையினரே மலயத்து அகத்தியராவர். ஆனால் வடநாட்டு அகத்தியர் தென்னாடு வருதற்குமுன் பொதிய மலையகத்தி

†Here we see Agastya sprited away, by the poet, as Sita was by Ravana from pancavati and dropped on the top of the Malaya hill. Hence this must have been inserted by the later poet who lived after the Agastya had proceeded further south than the Agastya of Rama's time and settled in the Tamil country (History of the Tamils Page. 55.)

யர் மறைந்திருக்கலாம். பின் வட நாட்டகத்தியர் II போந்து பொதியமலையில் தங்கியிருந்தனர். அவரையே சுக்கிரீவன் குறித்தனன் எனக் கொள்ளலாம்.

தமிழ் அகத்தியர் II வடநாடு மட்டுமல்ல. கீழ்க் கடற்புற நாடுகளுக்கும் சென்று வந்தவர் எனத் தெரிகின்றது. கம்போடியா, பலித்தீவு முதலிய இடங்களில் இவரது வடிவமும் பெயரும் காணப்படுகின்றனவாம்.

இவற்றால் தமிழ்க் கொடி நாட்ட இவர் ஆங்காங்கு சென்றிருக்கின்றார் என்று உணரலாம். இங்ஙனமாக வடநாடு சென்று திரும்பிய பின்னர் தொல்காப்பியர் தொல்காப்பியம் இயற்றினார் என்று முன்னமே கூறினோம். தொல்காப்பியம் இயற்றிய பின்னரே ஆசிரியர் அகத்தியனாரும் மாணவர் தொல்காப்பியனாரும் சேர்ந்து பாண்டியன் வெண்டேர்ச் செழியனின் துணைகொண்டு இடைச் சங்கத்தை நிறுவினர் என எண்ணலாம்.

## மாணவர்.

தமிழ் அகத்தியர் II மாணவர் தொல்காப்பியர் முதலிய பலர். ஆனால் தொல்காப்பியரே சிறந்தவரும் நமக்குத் தெரிந்தவரும் ஆவர். பிறர் பெயர் தெரிந்தில. சிலர் பன்னிருவர் என்பர். அவர்கள் **தொல்காப்பியர், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வையாபிகள், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவிநயன், காக்கை பாடினி, நற்றத்தன், வாமனன்** என்பாராவர். (இப் பன்னிருவருள் முதல்வர் நீங்கலனையவர்கள் வட ஆரிய அகத்தியரின் மாணவர்கள் என்பதும் தொல்காப்பியனார் என்பவர் திரணதூமாக்

இனியார் என்ற ஆரியர் என்பதும் பின்னர் விளக்கப்படும்).

தொல்காப்பியப் பாயிரம் பனம்பாரனாரால் இயற்றப்பட்டது. அதனுள் "அதங்கோட் டாசாற்கரில் தபத் தெரிந்து" என்ற அடி காணப்படுகின்றது. தொல்காப்பியர் அதங்கோட் டாசான் கேட்பத் தொல்காப்பியம் கூறினர் என்றிருத்தலின் தொல்காப்பியரும் அதங்கோட் டாசானும் ஒரு காலத்தவர். அதங் கோட்டாசானுடன் சேர்த் தெண்ணப்படும் பனம்பாரனார் முதலிய பதின்மரும் தொல்காப்பியர் காலத்தவரே. ஆகவே அகத்தியர் மாணவர் பன்னிருவர் என்பர். இதனைச் சிறிது ஆராய்வாம்.

தொல்காப்பியருடன் பனம்பாரனார் போன்ற புலவர்கள் இருந்திருப்பார்களானால் இடைச் சங்கப் புலவர்களைப் பற்றிக் கூறுங்கால் பதினொருவருள் ஒருவர் பெயரையேனும் கூறியிருக்க வேண்டும். அங்ஙனம் நக்கீரரால் கூறப்படாமையின் பனம்பாரனார் முதலியோர் மாணவரல்லர் என்பது போதரும். அன்றியும் அப்பன்னிருவரும் சேர்ந்து இயற்றிய தாகக் கூறப்படும். பன்னிருபடலம் என்னும் இலக்கண நூலேனும் இடைச் சங்கத்தில் பாடப்பட்டதாகவும் கண்டிலேம். இனிப் பாயிரத்தைப் பற்றி ந. சி. கந்தையாப் பிள்ளையவர்கள் கூறுவனவற்றைக் காண்பாம்.

* "கடவுள் வணக்கமும் பாயிரமும் கூறுதல் தொல்காப்பியர் காலத்து வழக்கு இல்லை எனத் தெரிகிறது. தொல்காப்பியத்தில் பாயிரங் கூறவேண்டிய

* தமிழர் சரித்திரம் பக். 138. 139.

தின அவசியத்தைப் பற்றி யெங்காவது கூறப் படவில்லை. இறையனார் களவியலுரையில்

"ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவ லன்றே"

என்னும் சூத்திரம் மேற்கோளாகக் காட்டப் பட்டுள்ளது.

பாயிரம் நூலுக்கு இன்றியமையாதது என்னும் கொள்கை ஏற்பட்ட காலத்தில் எவரோ ஒருவர் கேள்வி வழக்கிற் கிடைத்த வரலாறுகளைத் திரட்டிப் பாயிரம் செய்தாராகல் வேண்டும். பாயிரம் செய்யும் வழக்கு சங்க காலத் திருந்ததாயின் சங்கத் தொகை நூல்கள் ஒவ்வொன்றற்கும் அவற்றைத் தொகுத்த ஆசிரியர்கள் கடவுள் வாழ்த்தும் பாயிரமும் செய்திருப்பார்கள். பிற்காலத் தெழுந்த உரைகளுக்குக் கூடச் சிறப்புப் பாயிரங்கள் எழுதப்பட்டிருத்தல் கவனிக்கத்தக்கது. கடவுள் வாழ்த்தும் பாயிரமும் இல்லாமல் இருப்பதே பத்துப்பாட்டு எட்டுத் தொகை முதலிய நூல்கள் சங்க காலத்திற் றெகுக்கப்பட்டனவாதலை விளக்கும். குறுந்தொகையின் 52ம் பாடலைச் செய்த புலவர் பனம்பாரனாராகக் காணப்படுகின்றனர். தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் செய்தவர் பிறர் ஒருவராகலாம்.'

இக்கூற்றை நாம் நோக்கும் காலத்தில் தொல் காப்பியர் காலத்துப் பாயிரம் இயற்றப்பட்டிலது என்பதும், மிகப் பிற்காலத்தில் வந்த ஒருவர் இயற்றியிருக்கலாம் என்பதும் விளங்கும். ஆகவே தொல் காப்பியர் ஒருவரே அகத்தியர் II மாணவர், மற்றை

யோர் பெயர் தெரிந்திலது; பன்னிருவர் என்பார் கூற்று ஏற்புடைத்தன்று என்பது பெறப்படும்.

* "இனி, தேவ இருடியாகிய குறுமுனியாற் கேட்ட மாணுக்கர் பன்னிருவருள் சிகண்டி யென்னும் அருந்தவமுனி இடைச் சங்கத்து அநாகுலன் என்னும் தெய்வப் பாண்டியன் தேரோடு விசும்பு செல்வோன் திலோத்தமை யென்னும் தெய்வ மகளைக் கண்டு தேரிற் கூடின விடத்துச் சனித்தானைத் தேவரும் முனிவரும் சரியா நிற்கத் தோன்றினமையிற் சாரகுமாரன் என, அப்பெயர் பெற்ற குமரன் இசையறிவித்தற்குச் செய்த இசை நுணுக்கமும்" இது அடியார்க்கு நல்லாரின் கூற்று. இதனுல் அகத்தியர் மாணவருள் சிகண்டி யென்பவரும் ஒருவர் என்பதும், அவர் இசை நுணுக்கம் என்னும் நூல் இயற்றியவர் என்பதும் பெறப்படுகின்றது. இசை நுணுக்கம் இடைச் சங்க காலத்தில் பாடப்பட்டதாகக் களவியலுரைப் பாயிரங் கூறுகின்றது. ஆனுல் நச்சினர்க்கினியர் 'முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி' என்ற தொல்காப்பியப் பாயிர அடிக்கு விசேட உரை கூறுங்கால் "முந்துநூல் அகத்தியமும் மாபுராணமும் பூதபுராணமும் இசை நுணுக்கமும்" என்று இசை நுணுக்கம் தொல்காப்பியத்திற்கு முந்துநூலாகக் கூறினர். இடைச் சங்க காலத்தில் எழுந்த இசை நுணுக்கம் இடைச் சங்கத்தை நிறுவிய தொல்காப்பியர்க்கு முந்துநூல் என்றல் சாலாது. ஆதலின் தொல்காப்பியரைப் போல் இவரும் ஒரு மாணவராக அகத்தியர்க்கு அமர்ந்திருக்கலாம். அல்லது அடியார்க்கு நல்லார் காது வழியிற் கேட்ட கதையாகவும் இருக்க

* சிலப்பதிகார உரைப்பாயிரம்.

லாம். அகத்தியர் II மாணவர் என்பதாலும் ஒரு தவறும் இல்லை. ஆனால் அடியார்க்கு நல்லார் அகத்தியர் மாணவர் பன்னிருவர் என்றதுமட்டும் இவ்வகத்தியர்க்குப் பொருத்தமில்லை.

### வட எல்லை.

பாயிரம் இயற்றிய ஆசிரியர் மிகப் பிற்காலத்தவர் என எண்ணக்கிடப்பதால் அகத்தியர் II காலத்தில் தமிழ் நாட்டின் எல்லையும் பாயிரத்தில் கண்டாங்கு வடக்கில் வேங்கடமாக இருந்திராது என எண்ணலாம். வேங்கடத்திற்கும் அப்பாற்பட்டதாகவே கொள்ளலாம். வேங்கடம் வட எல்லையாகும்படி வட ஆரியர்களின் சூழ்ச்சியாற் போந்த அகத்தியர் காலத்திற்றான் பாயிரம் இயற்றப் பட்டதாகலின் பாயிரத்தில் வட வேங்கடம் எல்லையாகக் காணப்படுகின்றது.

## 3. கடல்கோள்

### கபாடபுரம்.

இனி வடநாட்டு ஆரிய அகத்தியர்களைப் பற்றியெழுதப் புகுமுன் அவர்கள் தென்னாட்டிற்கு வந்த காலம் மிகப் பிற்பட்டதாகலின் அதற்குரிய கால ஆராய்ச்சியை மேற்கொள்வாம்.

பழந் தமிழ் நாடாகிய இலெமூரியாக் கண்டம் பன்னூறாயிரம் யாண்டுகட்கு முன்னர் சிறிது சிறிதாகக் கடல் வாய்ப்பட்டுக் கொண்டே வந்தது என்பது முன்னரே கூறப்பட்டது. பாண்டியர் தலைச் சங்கத்தை மதுரையில் நிறுவிய காலத்திற்கு முன்னரே இலெமூரியா கடல்வாய்ப்பட்டு எஞ்சியிருந்தது.

காலப் போக்கில் அம்மதுரையும் கடல் வாய்ப்பட்டது என்பதை "அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்து கடல் கொள்ளப்பட்ட மதுரை யென்ப" என்ற நக்கீரர் வாக்கால் அறியலாம். இதன் காலம் ஆரியர் இந்திய நாட்டிற் குடியேறுவதற்கு முற்பட்டிருக்க வேண்டும். காலத்தால் முற்பட்டனவாகக் கூறப்படும் பாரதம் இராமாயணம் ஆகிய நூல்களினும் இம்மதுரையைப் பற்றிக் கூறப்படவில்லை.

இதற்கடுத்ததாக நிகழ்ந்த கடல்கோள் கபாட புரக் கடல்கோளாகும். "அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத் தென்ப. அக்காலத்துப் போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது" என்று நக்கீரர் கூறியது காண்க.

* திரு. ரா. இராகவய்யங்கார் அவர்கள் இக்கடல் கோள்கள் பற்றிக் கூறுவனவற்றைக் காண்பாம்:—

"முதற்சங்க மிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரையெனக் கூறுதலால் முதற் சங்க மென்று ஒன்றுண்டென்றும் அச்சங்கம் முடிந் தது ஒரு கடல்கோளால் என்றும் அறிகின்றோம். அக்களவியலுரைகாரரே இடைச்சங்கத்தைப் பற்றிக் கூறியவிடத்து "அகத்தியனார் தொல்காப்பியர் முதலி யோர் அச்சங்க மிருந்தா ரென்றும் அவரைச் சங்கமிரீ இயினார் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திரு மாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் என்ப என்றும், அவர் சங்க மிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத் தென்ப, அக்காலத்துப்போலும் பாண்டிய நாட்டைக் கடல் கொண்டது என்றும் உரைத்தார். இதனால்

* தமிழ் வரலாறு பக்.

முதற்சங்க வரலாற்றிற் குறித்த கடல்கோள் நிகழ்ந்த காலம் இடைச் சங்கத் திறுதியிலென்று காட்டிய வாறு தெளியலாம்.''

அய்யங்கார் அவர்கள் தலைச்சங்க மதுரையும் இடைச் சங்கக் கபாடபுரமும் ஒரே கடல்கோளால் அழிந்தன எனக் கூறுகின்றனர். இது பொருந்துவ தாகத் தெரியவில்லை. 'அவர் சங்க மிருந்து தமி ழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை யென்ப', 'அவர் சங்க மிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத் தென்ப. அக்காலத்துப் போலும் பாண்டிய நாட் டைக் கடல் கொண்டது' என நக்கீரர் ஈரிடத்தும் கடல்கோள் குறித்தது கொண்டு தலைச்சங்க மதுரை கடல் கொள்ளப்பட்ட பின்னரே இடைச் சங்கக் கபாடபுரமும் கடல் கொள்ளப்பட்டது என்று கோடலே பொருந்தும். அம்மதுரை கடல் வாய்ப் படவில்லை யென்றால் இடைச் சங்கத்தைக் கபாட புரத்திற்கு மாற்றுவதன் இன்றியமையாமை யென் னையோ? மதுரை கடல் வாய்ப்பட அதனால் தலைச் சங்கம் கலைந்ததனால்தான் இடைச் சங்கம் என்று ஒன்று தோன்றியிருக்க வேண்டும். தலைச் சங்கத் தின் இறுதியரசனுக்குப் பின்னர்ப் பாண்டிய நாடு அரசின்றிப் பல்லாண்டுகள் துன்புற்றிருக்க வேண்டும்; போற்றுவாரற்றுப் புலவர்கள் சங்கத்தைக் கலைத் திருக்க வேண்டும்; அதனாலேயே பின் அரசன் தோன் றிய பின்னர் இடைச் சங்கம் நிறுவப்பட்டது என்று கொள்ளுவதும் பொருத்தமில்லை. ஏன் எனின் அர சன் இன்றி மதுரை அல்லலுற மக்கள் தாழ்த்திரார் கள். உடனே வேறு அரசனை நியமித்திருப்பர்

அன்றோ? ஆகவே மதுரையைக் கடல் கொண்ட பின்னர்தான் இடைச் சங்கம் நிறுவப்பட்டிருத்தல் வேண்டும்.

தமிழ் நூல்களிற் காணப்படும் கடல்கோள் கபாடபுரக் கடல்கோளே யாகும்.

> வடிவேலெறிந்த வான்பகை பொறாது
> பஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக்
> குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள
> (சிலப். காடு. 18-20.)

மலிதிரையூர்ந்து தன் மண்கடல் வெளவலின்.....
........வாடாச்சீர்த் தென்னவன் (கலி. 104, 1—4)
என வருவன காண்க.

### கபாடபுரத்தைச் சூழ்ந்த நாடுகள்.

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்" (சிலப். 8—1) இவ்வடிக்கு அடியார்க்கு நல்லார் உரை கூறுமிடத்துக் கூறிய நாடுகள் யாவும் கபாடபுரத்தைச் சுற்றி யிருந்தனவாகும். அவர் கூறுவன வருமாறு:—

"தென்பாலி முகத்திற்கு வட வெல்லையாகிய பஃறுளி யென்னும் ஆற்றிற்கும் குமரியாற்றிற்கும் இடையே எழுநூற்றுக் காவத ஆறும், இவற்றின் நீர்மலிவான் என மலிந்த ஏழ்தெங்க நாடும், ஏழ் மதுரை நாடும், ஏழ் முன்பாலை நாடும், பின் ஏழ்பாலை நாடும், ஏழ் குன்ற நாடும், ஏழ் குணகாரை நாடும், ஏழ் குறும்பனை நாடும், என்னும் இந்நாற்பத்தொன்பது நாடும் குமரிக்கொல்லம் முதலிய பன்மலை நாடும், காடும், நதியும் பதியும் தடநீர்க்குமரி வடபெருங் கோட்டின்காறும் கடல் கொண்டது."

இதிலிருந்து பஃறுளியாறும் அதன் வடக்கிருந்த குமரியாறும் கடல்வாய்ப்பட்டன என்றுணர்கின்றோம். குமரியின் வடகரை வரை கடல் கொண்டமையால் தற்காலத்துள்ள கன்னியாகுமரியும் குமரியென்றே அழைக்கப்பட்டது.

இதுகாறும் கூறியவாற்றால் மதுரைக் கடல்கோள் ஒன்றும் கபாடபுரக் கடல்கோள் ஒன்றும் ஆக இரண்டு கடல்கோள்கள் நிகழ்ந்தன என்று கொள்ளலாம்.

## கபாடபுரக் கடல்கோட் காலம்.

இனி இக்கபாடபுரக் கடல் கோட் காலத்தை நோக்குவாம். இதுபற்றி ரா. இராகவையங்கார் அவர்கள் கொள்கையே (கால அளவில் மட்டும்) எமக்கும் உடன்பாடாதலின் அவர் கூற்றையே ஈண்டுத் தருகின்றோம்.

* "வானரர்களே! அப்பால் பொன்மயமானதும் முத்துமணிகளால் அலங்கரிக்கப் பெற்றதும், திப்பியமானதும் தகுதியோடு கூடியதுமாகிய பாண்டியர் கபாடத்தைக் காண்பீர்".

என வருதல் காணலாம். இதனால் இவ்விராமாயண காலத்துக் கபாடபுரம் கடல் கோளால் அழியாது மிகவும் சிறந்த நிலையில் பாண்டியர் தலைநகராக விளங்குதல் துணியப்படும்.

வியாசபாரதம் துரோண பருவத்தில் ஸம்சத்தகவதச் சருக்கத்து (23 அத்தியாயம்)

---

* தமிழ் வரலாறு பக். 36-39.

"கேசவனாலே அரசனான தன் பிதாவும் யுத்தத்திற் கொல்லப்பட்டு பிறகு பாண்டியாகளுடைய கபாடபுரமும் பிளக்கப்பட்டு உறவினர்களும் தங்கள் தங்கள் ஸ்தானத்தை விட்டு ஓடிப்போன அமயத்தில் பீஷ்மரிடத்திலிருந்தும், அவ்வாறே துரோணரிடத்தினின்றும், பரசுராமனிடத்தி னின்றும் கிருபாச்சாரியரிடத்தினின்றும் அஸ்திரங்களைப் பெற்று அந்த அஸ்திரங்களாலே ருக்மி கர்ணன் அர்ச்சுனன் அச்சுதன் இவர்களோடு ஒப்புமையைப் பெற்றுத் துவாரகையை நாசம் பண்ணுவதற்கும் பூமி முழுதையும் ஜயிப்பதற்கும் விரும்பினவனும் கற்றறிந்தவர்களான சினேகிதர்களால் நன்மையைக் கருதி அவ்வித முயற்சியி லிருந்து தடுக்கப்பட்டுத் தொடர்ச்சியான வயிரத்தை விட்டுத் தன்னிராஜ்யத்தை யாண்டு வருகின்றவனும் பலசாலியுமான சாகரத்வஜ பாண்டியன் சந்திரகிரஹணங்கள் போன்ற நிறமுள்ளவைகளும் வைடூர்ய மிழைத்த வரிப்புக்களால் மூடப்பட்டவைகளுமான குதிரைகளோடு பராக்கிரமம் என்கின்ற பொருளைக் கைப்பற்றித் திவ்யமான தனுவை நாண் ஒலி செய்து கொண்டு துரோணரை எதிர்த்து வந்தான். பித்தளை போன்ற நிறமுடைய குதிரைகள் பாண்டியனைப் பின் தொடர்ந்து வருகின்ற லட்சத்து நாற்பதினாயிரம் சிறந்த தேராளிகளைத் தாங்கின" (ம. வீ. இரா. மொழி பெயர்ப்பு) என வருதலான் இக்கபாடபுரமும் பாண்டியரும் சிராமமூர்த்தி காலமுதல் பஞ்சபாண்டவர் காலத்தும் சிறந்து உயர் நிலையில் விளங்கியவாறு தெரியலாம். தமிழ் உரையாளர் குறித்த பாண்டியர் பழைய தலை நகராகிய கபாடபுரம் என்பது உண்மையில் இருந்த தென்பதற்கு இவ்விரண்டு பெரிய இதி

காசங்களும் தக்க சான்றுதல் நன்கறியலாம். வியாச பாரதம் பல பல இடைச் செருகல் பெற்று இப்போதுள்ள முறையில் நிறைவேறியது கி. பி. மூன்றாம் நூற்றாண்டென்று இக்கால ஆராய்ச்சியாளர் (Winternitz) துணிவர். கிறிஸ்து பிறந்த பின் பாண்டிய நாட்டுக் கடல்கோள் எந்நூலானும் கேட்கப் படாமையின் கடல் கோளால் அழிந்ததென்று உரைகாரர் கூறிய கபாடபுரம் நன்னிலையில் இருந்த காலம் கிறிஸ்து பிறப்பதற்கு முற்பட்டதேயாம் என்று துணியலாம். கபாடபுரம் அழிந்ததற்குக் காரணமான கடல்கோளைப் பற்றிப் பின்னர்க் கூறப்படுதலான் இதன் உண்மை யுணரலாம். இராமாயண காலத்தை டாக்டர் பந்தர்கர் கி மு. எழுநூற்றுக்குப் பின் ஆகாது என்றும், விண்டர்னிட்ஸ் கி. மு. முன்னூற்றுக்குப் பின் ஆகாதென்றும் கூறுவர். இவருள் டாக்டர் விண்டர்னிட்ஸ் என்பவர் டாக்டர் பந்தர்கர் தீர்மானத்தை நன்கு ஆராய்ந்த பின்னரும் இம்முடிவுக்கு வருதலான் அவரது துணிபே தேர்ந்து வரையறுத்ததாக வைத்துக் கொள்ளலாம். இங்ஙனம் வைத்துக் கொண்டால் பாண்டியர் கபாடபுரம் கடல் கோளால் அழிந்தது கி. மு. முன்னூற்றுக்குப் பின்பேயாம் என்பது தெளியலாம். இஃது இன்னும் ஒரு வகையானும் துணியப்படும். அலெக்ஸாந்தருக்குப் பின் செல்யூகஸ் நிகேடர் என்னும் யவன வேந்தனாற் றூதுபோந்து பாடலிபுரத்தில் சந்திரகுப்த சக்கரவர்த்தியிடம் நெடுங்காலம் தங்கியிருந்த மெகஸ்தனிஸ் என்பவர் கி.மு. முன்னூற்றைந்தாம் ஆண்டினராவர். அவர் காலத்துக்கு முன்பே சந்திரகுப்தனை அரியணை யேற்றியவர் அர்த்த சாஸ்திரம் செய்த கௌடில்யர் எனப் பெயரிய சாணக்கியரா

வர். அவர் கி. மு. முன்னூற்றைறந்துக்குப் பிற்பட்டவரே யாகார் என்பது நன்கு துணியப்படுவதாகும். அவர் தம் அர்த்த சாஸ்திரத்தில் (Book II Chap.) முத்துக்களின் பெயர்கள் கூறுமிடத்துப் பாண்டிய கவாடம் என ஓர் முத்தின் வகையை எடுத்துக் காட்டுகின்றார். இம்முத்து 'தென் கடல் முத்து' எனப் பழந்தமிழ் நூல்கள் கூறும் பாண்டியர் கபாடபுரத்துக் கடலில் எடுத்துள்ள முத்தேயாம் என்பது தெள்ளிது. பாண்டியர் தென் கடலில் முத்தெடுக்கப்பட்டு அக்கடற்கரையை யடுத்துள்ள கபாடபுரத்தே விலை கொள்ளப்படு மாதலால் 'பாண்டிய கவாடகம்' எனப் பெயர் பெற்றதெனத் தெரியலாம். 'தண்கடற் பிறந்த முத்திரைம்' எனப் பாண்டியனை அகப்பாட்டிற் கூறுதலான இம்முத்துப் பாண்டியர் முத்தே யாதல் தெள்ளிது...........................................

இவற்றால் கபாடபுரம் அழிந்ததும்...................... கி. மு. 305க்குப் பின் ஏதோ ஒரு காலமே யாகும் என்றும் அதற்கு நெடிது முன்னுகா தென்றும் நன்கு துணியப்பட்டதாகும்."

அய்யங்கார் அவர்களின் கூற்றின்படி இடைச் சங்கத்திற்குத் தலைநகராக இருந்த கபாடபுரத்தின் அழிவு கி. மு. 305க்குப் பின் அல்ல என்று கொள்ளுவோமாஞல் அச்சங்கம் நிறுவப்பட்ட காலம் (நக்கீரர் கூற்றுப்படி 3700 யாண்டென்றல்) கி.மு. 4000 எனக் கொள்ளலாம். நக்கீரர் கூறிய யாண்டினைக் குறைத்துக் கூற வேண்டின் கி. மு. 2800க்கு மேற்பட்டது எனக் கொள்ளலாம். ஆக தமிழ் அகத்தியர் II கி.மு. 2800க்கு மேற்பட்ட காலத்தினர் என்னலாம். தமிழ்

அகத்தியர் I கி. மு. 6000க்கு முற்பட்டவர் என்னலாம்.

தமிழகத்தியர் II காலத்தில் ஆரியர்கள் வட இந்தியாவில் நிலைக்கத் தொடங்கி இரண்டொரு நூற்றுண்டுகளாகி யிருக்கலாம். அவ்வாரியர்களால் தமிழர்கள் ஆரியராகின்றமை கேட்டு அந்நிலை யுணர்ந்துவர இவர் தொல்காப்பியருடன் வடநாடு சென்றிருக்கலாம்.

# 4. ஆரிய அகத்தியர்கள்

## சூழ்ச்சி.

ஆரிய அகத்தியர் தென்னாட்டிற்கு வருமுன்னர் வடநாட்டில் வதிந்தார். தென்னாட்டுத் தமிழ் அகத்தியர் வடநாடு சென்ற காலத்தில் அவரது பெரும் புகழும் கண்டு அவரது பெயரைப் புனைந்த ஒருவர் அல்லது அவரால் தாம் தங்கிய தவச்சீலை யொன்றில் நிறுத்திய ஒருவர் பரம்பரையில் வந்த ஒருவர் பலராலும் அகத்தியர் என்று கூறப்பட்டு வந்தனர். அவரே பின்னர் அவ்வகத்தியர் என்ற பெயருடன் தென்னுடு வந்தவராவர். இக்காலத்திலும் வித்துவான், மு. வரதராசனுர் எம் ஓ. எல். அவர்களைத் திரு. வி. க. அவர்கள் 'தமிழ் நாட்டுப் பெர்னுட்ஷா' என்று கூறுதல் காணத்தக்கது. இங்ஙனமாகவே வரதராசனுர் அவர்கள் தமிழர்களால்பெர்னுட்ஷா என்றுகூறப்படுவார்களானல் பிற்காலத்தில் வருவோர் பெர்னுட்ஷா தமிழரே யென்பராயின் எவ்வளவு பொருத்தமோ அவ்வளவு பொருத்தந்தான் தமிழ் நாட்டு அகத்தியரை வடநாட்டகத்தியர் என்பதும். ஆகவே வடநாட்டகத்தியர் தென்னுட்டகத்தியர் பெயரைப்

புனைந்து பின்னர் தென்னாடு போந்தனர் என்று கொள்வதே முறை. அங்ஙனம் தென்னாடு போந்த அகத்தியர் ஒருவரல்லர். இருவர் என்று தெரிகிறது. இது பின்னர் ஆராயப்படும். வடநாட்டகத்தியர்களைப் பற்றிக் கட்டிய கதைகள் பல. நடந்தன சில. ஆரியர் கள் தம்மை யுயர்த்திக் கொள்ளச் செய்த சூழ்ச்சிகள் பல. அவற்றுள் தலை சிறந்தது வேதத்தைச் சூத்திரர் பயிலுதல் கூடாது என்றது. தமிழர்களை அவர்கள் சூத்திரர் என்றனர். வேதத்தைச் சூத்திரர் பயிலுதல் கூடாது என்றனர். அதற்கேற்ப வேதம் எழுதாக் கிளவி யென்றாக்கித் தம் மரபினர்க்கே செவி வாயிலா கப் பயிற்றியும் வந்தனர். அதனால் அவர்களால் குறிப்பிடப்படும் பிற வருணத்தாரும் ஓதுதற் கிய லாததாயிற்று. வேதம் எழுதிப் படிக்கக்கூடியதாயின் தமிழர் உடனே எழுதிப் படித்து அதனிடத்துள்ள ஊழல்களைக் கண்டு கொள்ளக் கூடுமன்றோ? இங்ங னம் கூறிப் பல்லாண்டுகள் பல தலைமுறைகள் மாறின. அதன் பின்னரே வேதம் சிறந்ததென்று சிறிது சிறி தாக வெளியிட்டனர். அவர்கள் வெளியிட்ட காலம் ஆரியர் கூறுவன யாவும் வேதவாக்கு அல்லது தேவ வாக்கு என்று சொல்லியும் நம்பியும் வந்த கால மாகும். அதனால் அவர்கள் வேதத்தினைப் பரப்பத் தொடங்கினர். வேதம் இறைவன் உரைத்தது என்றனர். கடவுளிடத்து நம்பிக்கையும் ஆழ்ந்த பற்றுதலும் கொண்ட தமிழர் நம்பினர். அதனால் பலர் ஆரிய மயமாயினர். தம்மைத் தாமே யிழிவு படுத்திக் கொண்டனர். இங்ஙனம் வடநாடு முழு மையும் ஆரிய மயமாயிற்று. பின்னர் தென்னாட்டி லும் கேடுவிளைப்பான் முற்பட்டனர். அதன் விளைவு

கள் தாம் ஆரிய அகத்தியர்கள் தென்னாடு போந்ததும் ஆரியர் மிகுதியாகக் குடியேறியதும் ஆம்.

## தென்னாடு போந்த காரணம்.

ஆரிய அகத்தியர்கள் தென்னாடு போந்தமைக்குக் காரணம் மூன்று காணப்படுகின்றன.

1. இமயமலை யரசனிடம் சென்று சிவனார் பார்வதியை மணந்த காலத் தேவரெல்லாம் கூடிச் சேர இருந்தமையின் தென்திசை தாழ்ந்ததாக அதனைச் சமப்படுத்துவான் வேண்டிச் சிவனார், அகத்தியரை நோக்கித் தென்றிசை சென்று பொதியிலில் இருக்க என அவர் தென்னாடு போந்தார்.

2. ஒருகால் விந்தயமலை மேருமலையுடன் போட்டியிட்டு உயர்ந்ததாக அதன் கர்வத்தை யடக்க வேண்டும் என்னும் எண்ணத்துடன் சிவபெருமானிடம் விடைபெற்று அகத்தியர் தென்னாடு போந்தார்.

3. நைமிசாரணிய முனிவர்கள் தம்மை யிகழ்ந்தார்களாக அவர்களுடன் மாறுபட்டு 'நாம் தென்னாடு சென்று தமிழறிந்து நும்மை வெல்லுவோம்' என்று கூறித் தென்னாடு போந்தார் அகத்தியர்.

இம்மூத்திற வரலாறுகளுள் எது முதற்கண் நிகழ்ந்தது என்று குறித்தற்கில்லை.

முதல் வரலாற்றினை யூன்றி நோக்கின் மறைவாக உள்ள ஓர் உண்மை புலப்படும். தென்திசை யுயர்ந்த தென்பது தென்னாடு பல வளங்களாலும் கல்விகேள்விகளாலும் வீரம் முதலியவற்றாலும் சிறந்துயர்ந்த நிலையையே குறிக்கும். இதனைக் கேள்வியுற்ற ஆரியர் (இமய அரசன் மகள் மணத்திற் கூடியவர்கள்) கூட்டத்துள் ஒருவர் தென்னாடு நம் நாட்டினும் உயர்

வுற்றது அதனை யெப்படி யேனும் கீழ்ப்படுத்துதல் வேண்டும். நம்மால் வென்று கீழ்ப்படுத்த இயலாது. சூழ்ச்சி கொண்டுதான் கீழ்ப்படுத்த முடியும். அங்ஙனம் கீழ்ப்படுத்த வல்லவர் தென்னாட்டானின் பெயர் பூண்டவராகிய இவ்வகஸ்தியரே செல்லத் தகுதியுடையார். ஆதலின் இவர் செல்லின் நன்று என்றனர். அனைவரும் ஆம் ஆம் என்றனர். அவர்கள் கருத்துப்படியே ஆரிய அகத்தியர் I தென்னாடு நோக்கிப் புறப்பட்டார். இதுவே ஆரிய அகத்தியர் I தென்னாடு வரக் காரணம். பின் இரண்டு வரலாறுகளும் பின்னர் விளக்கப்படும்.

## ஆரிய அகத்தியர் பிறப்புக் கதைகள்

ஆரிய அகத்தியர்களின் பிறப்பினைப்பற்றி 'அபிதான சிந்தாமணி' ஆசிரியர் குறித்தவற்றை அப்படியே யீண்டுக் குறிக்கின்றேம்.

*தாரகன் முதலிய அரக்கர் உலகை வருத்த அவர்களை நிவர்த்திக்க இந்திரன், அக்நி, வாயு முதலியவர்களுடன் கூடிப் பூமியில் வந்தனன். அதைக்கண்டு அசுரர் கடலில் ஒளித்தனர். ஒளித்த அசுரர் தேவர்களை வருத்த உபாயம் தேடுகையில் அக்நி அவர்களுடைய துராலோசனையை யறியாமல் அசுரர் கடலிற் பாய்ந்து ஒளித்தாராதலின் வருத்தலாகாதென முயற்சியின்றி யிருந்தனன். பின்னர் அசுரர் காலாவதியிற் பூமியில் வந்து தேவர் மக்கள் நாகர் இருடிகள் முதலியவர்களை வருத்த, இந்திரன் மருத்துக்களோடு கூடிய அக்நியைப் பார்த்து நீ சும்மா விருந்தமையால் இத்துன்பம் விளைந்தது. ஆகையால் கடலிலுள்ள

*அபிதான சிந்தாமணி பக். 1, 2.

நீரை வறட்டின் அசுரர் அகப்பட்டு நம்மாலழிவர் என அக்நி, இந்திரனைப் பார்த்து அசுரர் பொருட்டுக் கடல் நீரை வறளச்செய்தால் சலசரங்கள் அழியும் என்று கூற, இந்திரன் கோபித்து 'நீ என் சொல்லை மறுத்தனையாதலால் வாயுவுடன் கூடிப் பூமியில் போய்க் கும்பத்திற் பிறந்து கடல் நீரெல்லாம் குடிக்க என்றனன். பிறகு தேவசரீரம் கொண்ட அக்நி மருத்துக்களுடன் கூடிப் பூமியில் விழுந்து அகத்தியனாயினன். எவ்வாறெனில், பூர்வம் விஷ்ணுமூர்த்தி தருமன் குமரனாய்க் கந்தமாதன பருவதத்தில் தவம் செய்கையில் அத்தவத்தைக் கெடுக்க இந்திரன் அப்சரசுக்களையனுப்ப, அத்தபோதனர் சலிக்காமல் தம் தொடையினின்றும் அதிரூபலாவண்யத்துடன் ஒரு பெண்ணைச் சிருட்டித்து ஊர்வசியெனப் பெயரிட்டனர். அந்த ஊர்வசியை மித்ரன் மணந்து அவளோடு கூடியிருக்கையில் வருணன் அவளை விரும்பினன். அதற்கு அவள் புன்னகையுடன் என்னையொருவன் மணந்திருக்கையில் அந்நியன் விரும்பலாமோ? என, வருணன் அவளைப்பார்த்து ஆயின், அம்மித்திரனுடன் நீ கூடியிருக்கையில் உன்னெண்ணம் மாத்திரம் என்னிடத்தில் வைக்க என அதற்கு ஒப்புக்கொண்டு மித்திரனுடன் கலந்திருந்தனள். இதனை ஞானதிருஷ்டியால் அறிந்த மித்திரன் ஊர்வசியைப் பார்த்து நீ வேறு எண்ணத்துடன் என்னிடமிருந்தனையாதலால் பூமியில் மனுஷ்ய பிறவியடைந்து புரூரவன் தேவியாக எனச் சாபமிட்டனன்.

இவ்வகைப்பட்ட ஊர்வசியின் மோகத்தால் மித்ர வருணருக்கு வெளிப்பட்ட ரேதசு ஒரு கும்பத்திலடை



மகாமகோபாத்தியாய டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

பட அதிலிருந்து 'நிமி' பிறந்தனன். அந்த நிமி அநேக பெண்களுடன் கூடி விளையாடுகையில் வசிட்ட முனி வர் வர அவரை யவன் மரியாதை செய்யாததினால் அவர் கோபித்து நீ தேகமில்லாதவனாக எனச் சபித் தனர். அச்சாபம் சகியாத நிமி வசிட்டரையும் அவ் வாறு தேகமில்லாதிருக்கச் சபித்தனன். இவ்வகை ஒருவருக்கொருவர் சாபமேற்று நிமி பிரமனிடத்துப் போக பிரமன் நிமியை நேத்திரத்தில் வசிக்கச் செய் தனன். அது காரணமாக நிமிஷம் உண்டாயிற்று. பிறகு நிமி சாபத்தால் தேகமிழந்த வசிட்டர் மித்ர வருணர் வீரியமுள்ள கும்பத்திருந்து முதலினும் இரண்டாவது சதுர்ப்புஜத்துடன் கமண்டலங் கொண்டவராய் அகத்தியரும் பிறந்து தவமியற்றித் தாரகாசுரன் முதலியவர்களைக் கொல்லுதல் வேண் டிச் சமுத்திர பானம் செய்து இரண்டாவது மிருத் யுவை நியமித்துக் கடலிற் பிறந்த காலகூட விஷத்தை வியர்த்தமாக்கி யிருக்கையில் இவரிடம் திரிமூர்த்தி கள் வந்து உனக்கென்ன வரம் வேண்டும் என்ன 25000000000 கணக்குள்ள சிருஷ்டி கர்த்தாக்கள் மாறுமளவும் தக்ஷிண பதத்தில் ஆகாச வீதியில் இருக்க வரங்கேட்டுப் பெற்றனர் (மச்சபுராணம்)

2. பிரமதேவன் உருப்பசியின் நடனத்தைக் கண்டு தன் வீரியத்தைவிட அதிலிருந்து அகத்தியர் பிறந்தனர். (காவிரிப்புராணம்)

மேற்கூறிய இரண்டு கதைகளையும் படிக்குங் காலத்தில் நகைப்புத் தோன்றுகின்றதே யன்றி வேறென்ன தோன்றுகின்றது? ஆனால் இக்கதை களைப் புனைந்தவர்களின் ஆற்றலும் நம்பியவர்களின்

அறிவின் கீழ்நிலையும் புலப்படுகின்றன. ஒரு பெண்ணுடன் கலவாமல் ஆடவனின் விந்திலிருந்தே ஒரு பிறவி யுண்டாகும் என்றால் எவ்வளவு தூரம் பொய் யென்பதைக் கூறவேண்டுவதில்லை. இத்தகைய பொய்க் கதைகள் புனைவதற் கென்றே தேவர்கள் நினைத்த அமயத்தில் நினைத்தவற்றைச் செய்து முடிக்கும் ஆற்றலினரென்றும், மாயமாய் மறைதல் வானத்திற் பறத்தல் போன்ற இயலாத செயல்களையும் செய்வர் என்றும் அறிவுக்குப் பொருத்தமில்லாதனவற்றைப் புளுகிக் கொண்டார்கள் என்பதில் என்ன வியப்பு? ஓர் ஆரியனுக்கும் ஓர் ஆரியப் பெண்ணிற்கும் தோன்றிய அசல் ஆரியனை இங்ஙனம் இழிவு படுத்திக் கூறிவிட்டனர். ஆனால் அவர்கள் உயர்வாகக் கூறிவிட்டதாக இறுமாந்தனர். அக்காலத்தில் தம் வயப்பட்ட தமிழரிடையே சொல்லிவந்தனர். ஆனால் சிற்சில இலக்கியங்களில் ஆரியரைப் பற்றிய கட்டுக்கதைகள் காணப்படினும் அவற்றில் சிற்சில உண்மைகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை ஆங்காங்கு எடுத்துக் காட்டுவேம்.

## ஆரிய அகத்தியரும் இருவர்.

ஆரிய அகத்தியரும் இருவராவர் ஒருவர் பாரதத்தால் அறியப்படுபவர் மற்றொருவர் இராமாயணத்தால் அறியப்படுபவர். இவர்களைப் பாரத அகத்தியர் என்றும் இராமாயண அகத்தியர் என்றும் குறிப்பிடுவோம். பாரத இராமாயண நிகழ்ச்சிகளுள் முற்பட்டது எது என்று இன்னும் ஆராய்ச்சியாளரும் ஒத்த முடிபிற்கு வந்திலர்.

* டாக்டர் கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் பாரதப் போர் நிகழ்ந்த காலம் கி. மு. 1500—1000 என்பர். இராமாயணம் நிகழ்ந்த காலம் கி. மு. 1000—750 என்பர்.

அய்யங்கார் அவர்கள் கூற்றினைக் கொள்வதற்கும் சான்றுண்டு. இராமாயணத்திற் கூறப்படும் இராவணன் சாம வேதத்திற்கு இசை வகுத்தான் என்று கூறப்படுகின்றது. ஒழுங்கின்றிக் கிடந்த வேதத்தை இருக்கு, யசுர், சாமம் என வகுத்து வைத்தவர் வியாசர். அவ்வியாசரே பாரதத்தை யெழுதியவர். அவர் பாரதம் நடைபெறுங் காலத்திலேயே வாழ்ந்தவர் எனவும் கூறப்படுகின்றார். ஆதலின் வியாசரால் பிரிக்கப்பட்ட சாமவேதத்திற்கு இராவணன் இசை வகுத்தான் என்பதால் பாரதப் போருக்குப் பின்னரே இராமாயணப் போர் நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

சிலர் இராமாயணமே முன்னர் நிகழ்ந்தது. ஆனால் அப்போர்களைப் பற்றிய நூல்கள் மட்டும் கால வகையில் மாறுபட்டன. அதாவது பாரதநூல் முன்னரும் இராமாயண நூல் பின்னரும் எழுதப்பட்டன என்பர். இவர்கள் இங்ஙனம் கூறுமிடத்து மேற்கூறிய இராவணன் சாமவேதத்திற்கு இசைவகுத்தான் என்றதனோடு மாறுபடக் காணும் அன்றோ எனின் அவ்விரு நூல்களினும் இடைச் செருகல்கள் பல செருகப்பட்டிருக்கின்றன என்பர். உண்மையியிலேயே காலத்தொடு பொருந்தாத நிகழ்ச்சிகள் பல

*The inter tribal wars typified in the Mahabarata took place in the period between 1500 and 1000 B. C. While the events of Ramayana should be placed between 1000 and 750 B. C. (Ancient India Page. 3)

வும் அவைகளில் காணக் கிடத்தலின் அவர்கள் கூற்றும் ஒருவாறு ஒப்புதற்பாலதே. எனினும் பாரத காலமே முற்பட்டதாகலாம் என்பது எமது துணிபு. நூல்களுள் மிக முற்பட்டது வேத நூல் என்பர். அவ் வேத காலமே மிக முற்பட்ட காலமும் ஆகும். அவ் வேதத்திற்கு கி.மு. 1200க்குமேல் எனக் காலம் வரையறுத்துள்ளனர். அவ்வேதத்தை யொழுங்கு படுத்தியவர் வியாசர். ஒழுங்குபடுத்திய பின்னரே வேதம் சிறந்ததாக மக்களால் பெரிதும் போற்றப்பட்டது. பன்னூல்களாலும் நான்மறை என்று புகலப்படுதல் காணலாம். (அதர்வம் மிகப் பிற்காலத்தது) வேதம் வகுத்தவர் வியாசர் ஆதலாலும் இராமாயணத்திலும் வேத வகுப்புக்கள் கூறப்பட் டிருத்தலாலும் பாரதமே முற்பட்டதென்று கூறலாம். அப்பாரதத்திற்கு இரண்டு மூன்று நூற்றாண்டுகட்குப் பிற்பட்டதே இராமாயணம் என்னலாம்.

ஆகவே இப்பாரத அகத்தியர் ஒருவர் இராமாயண அகத்தியர் ஒருவர் எனக் கொள்ளுதலில் ஐயம் வேண்டுவதில்லை. வேதத்திற் காணப்படும் அகத்தியர் பாடல்களையும் பாரத அகத்தியரே பாடிச் செருகியிருக்கலாம். வேதம் ஒரே காலத்தில் பாடப்பட்டதன்று; பற்பலர் பற்பல காலங்களிற் பாடிச் செருகிப் பெருக்கப்பட்டதேயாம். அவருள் ஒருவர் பாரத அகத்தியரும். இனி அவ்விருவரின் வரலாறுகளை நோக்குவோம்.

## பாரத அகத்தியர்

இவ்வகத்தியர் தமிழகத்தியர் II வடநாடு சென்று திரும்பிப் பல்லாண்டுகள் கபாடபுரத்திருந்து சங்கம்

நிறுவித் தமிழாராய்ந்து மறைந்த பின்னர் பன்னூறாண்டுகள் கழித்து வந்தவராவர். தமிழர் ஒழுக்க முறைகளைக் கையாண்டவர். இவர் வரலாற்றை நச்சினார்க்கினியர் தொல்காப்பியப் பாயிர உரையில் எழுதுவதைக் கொண்டு நாம் உணரலாம்:—

"தேவரெல்லோருங் கூடி யாஞ்சேர விருத்தலின் மேருத் தாழ்ந்து தென்றிசை யுயர்ந்தது. இதற்கு அகத்தியனாரே ஆண்டிருத்தற் குரியர் என்று அவரை வேண்டிக்கொள்ள, அவரும் தென்றிசைக்கண் போதுகின்றவர் கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு, பின்னர் யமதக்கினி யாருழைச் சென்று அவர் மகனார் திரணதூமாக்கினியாரை வாங்கிக்கொண்டு, புலத்தியனாருழைச் சென்று அவருடன் பிறந்த குமரியார் உலோபாமுத்திரையாரை அவர் கொடுப்ப நீரேற்று இரீஇப்பெயர்ந்து, துவராபதிப் போந்து நெடுமுடி யண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண் கோடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து காடு கெடுத்து நாடாக்கிப் பொதியின்கண் ணிருந்து, இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கித் திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி, நீ சென்று குமரியாரைக் கொண்டு வருக எனக் கூற அவரும் எம்பெருமாட்டியை யெங்ஙனம் கொண்டு வருவல் என்றார்க்கு 'முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளம் அகல நின்று கொண்டு வருக என', அவரும் கொண்டு வருவழி வையை நீர் கடுகிக் குமரியாரை யீர்த்துக் கொண்டு போகத் தொல்காப்பியனார் கட்டளை யிறந்து சென்று ஓர் வெதிர்ங்கோலை முறித்து நீட்ட அதுபற்றி யேறி

ஞர். அது குற்றமென்று அகத்தியனார் குமரியாரையும் தொல்காப்பியனாரையும் 'சுவர்க்கம் புகாப்பிர்' எனச் சபித்தார். 'யாங்கள் ஒரு குற்றமும் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையால் எம்பெருமானும் சுவர்க்கம் புகாப்பிர்' என அவர் அகத்தியனாரைச் சபித்தார்".

இனி இக்கதையின் விரிவை நோக்குவோம். இமயமலைக்கரசன் இமவான் * பர்வதராசன் என்று வடமொழிப் பெயராகவும் கூறப்படுபவன். அவன் மகள் பார்வதி. அவளுக்கும் கந்தபுராணம் குறிக்கும் சிவபெருமானுக்கும் திருமணம் நிகழும் காலத்தில் பல தேச மக்களும் திரண்டனர். எக்காரணத்தாலோ தென்னாட்டுத் தமிழரசர்கள் செல்லவில்லை. திருமண நிகழ்ச்சிக்குப் பின்னர் அவர்கள் தத்தம் நாடு முதலியவற்றைப்பற்றி உரையாடலாயினர். அது காலை செந்தமிழ்த் தென்னாட்டைப் பற்றியும் உரையாடல் நிகழ்ந்தது. தென்னாடு பலவகையிலும் உயர்நிலையடைந்திருந்தது அவர்கட்குத் தெற்றென விளங்கிற்று. அதன் உயர்வை யெங்ஙனமேனும் தாழ்த்துதற்குக் கருதிவிட்டனர். அதற்குத் தகுதியுடையவர் யாவர் எனக்கலந்தனர். தமிழ் அகத்தியர் II வடநாட்டில் நிறுவிய தவச்சாலையில் அவர் வழியினரும் அவரது பெயரையே ஒரெழுத்து மாறுபாட்டுடன் அகஸ்தியர் எனத் தாங்கியவரும் ஆன ஒரு மணமாகாத அறிஞரைத் தேர்ந்தெடுத்தனர். அவரே தென்னாடு சென்று அதனைக் கீழ்ப்படுத்துதல் வேண்டும் என்

* பர்வதன் - மலைக்குரியவன். பருமை யென்ற தமிழ்ச் சொல்லடியாகப் பர்வதம் என்ற வடசொல் உருப்பெற்றது.

றும் ஆணையிட்டனர். அவ்வாணை பர்வதராசன் மருக ஞர் (சிவபெருமானுர்) ஆணை யென்றனர்.

நடுவு நில்லா திவ் வுலகஞ் சரிந்து
கெடுகின்ற தெம்பெருமா னென்ன வீசன்
நடுவுள அங்கி அகத்திய நீபோய்
முடுகிய வையத்து முன்னி ரென்ருனே (திருமந்திரம்)

எனத் திருமூலரும் பிற்காலத்தில் இதைக் குறிப்பா ராயினர். ஆணைக் கடங்கிய அகத்தியர் நன்றெனப் புறப்பட்டனர். நேரே கங்கையை யடைந்து நீராடி னர். தாம் மீண்டும் வட நாட்டுக்கு மீளுவோம் என்ற நம்பிக்கை யிழந்தனராகவும் இருக்கலாம். கங்கை யைப் பிரியமில்லா அகத்தியர் அதன் நீரினைச் சிறிது கமண்டலத்துள் அடைத்தனராகலாம். பின்னர் யமதக்கினியார் என்ற பெரியாரிடம் விருந்தினராக அமர்ந்தனர். அகத்தியரின் அறிவினைக்கண்ட யமதக் கினியார் தமது மகனுர் திரண தூமாக்கினியாரை அவர்க்கு மாணவராக்கினர். அகத்தியரும் தமக்குத் துணையா வார் என உட்கொண்டு திரண தூமாக்கினியாரை யேற்றனர். அவருடன் தெற்கு நோக்கிப் புறப்பட்ட னர். இடைவழியில் பல அறிஞர்கள், முனிவர்கள் இவரை நோக்கித் திருமணம் புரிந்து செல்க என இவ ரும் இயைந்தனர். உடனே விதர்ப்பநாடு நோக்கிச் சென்றனர். விதர்ப்ப அரசனுக்குப் புலத்தியன் என்ற ஆணும் * உலோபாமுத்திரை யென்ற பெண்ணும் மக்க

* உலோபா முத்திரை யாகத்தினின்றும் பிறந்தார் என்றல் கட்டுக்கதையே. ஒருவேளை யாகம் இயற்றிய பின்னர் பிறந்தி ருக்கலாம். காவிரிப்புராணம் கவேரன் என்பவனின் மகள் உலோபா முத்திரை யென்றும் அவரையே அகத்தியர் மணந் தார் என்றும் கூறுகின்றது.

ளாவார். புலத்தியனின் இசைவு கேட்டு அரசனும் தன் மகள் உலோபா முத்திரையை அகத்தியர்க்கு மணஞ்செய்து கொடுத்தான். சின்னுள் அங்குத் தங்கி உலோபா முத்திரையாரை விட்டுத் திரண தூமாக்கினியாருடன் புறப்பட்டனர். பின்னர்த் துவாரகைக்குச் சென்று கண்ணனிடம் வேளிர் என்ற தமிழர் மரபினைச் சார்ந்த தலைவர்கள் பலரைத் துணைக்கு வேண்டினர். கண்ணனுகிய ஆரியமயப்பட்ட தமிழரசனும் வேளிர் அரசர் பதினெண்மரையும் அவர்கட்குரிய வேளிர் தலைவர்களையும் அனுப்பினன்.

"நீயே,

> வடபால் முனிவரன் தடவினுள் தோன்றிச்
> செம்புனைந் தியற்றிய சேணெடும் புரிசை
> யுவரா வீகைத் துவரை யாண்டு
> நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
> வேளிருள் வேளே" (புறம். 201)

என இவ்வேளிர் வழியினனுகிய இருங்கோ வேளைக் கபிலர் பாடியது காண்க. பெருங்கூட்டத்துடன் வரும் அகத்தியர் விந்த மலையை யடைந்தனர். விந்தம் ஒரே காடடர்ந்திருந்தது. கடத்தற் கியலாததாயும் இருந்தது. உடனே தன்னுடன் வரும் வேளிர் துணைகொண்டு காட்டினை யழித்தார். வழியினை உண்டாக்கினுர். விந்த மலையின்மேல் ஏறி அதனைக் கடந்தார். இந்நிகழ்ச்சியைத்தான் புராணங்கள் அகத்தியர் விந்தத்தின் கர்வத்தை அடக்கியதாகக் கூறும். கந்தபுராணம் விந்தத்தையடக்கியதையும் சிவனுர் ஆணைப்படி தென்னுடு போந்ததையும் வெவ்வேருகக்கூறு கின்றது. பின்னர் தென்னுடு போந்து தமி

முகத்தியர் நிறுவிய * பொதிகையின் தவச்சாலையை யடைந்தனர். அவ்விடத்தையே தம திருப்பிடமாக் கினார். முருகவேள் அருளாலோ சிவனார் அருளாலோ அல்லது அவர்கள் பெயர்களைக் கொண்ட புலவர்க ளாலோ தமிழை நன்கு கற்றனர். தமிழின் இனி

---

* இப் பொதியமலை ஆரிய அகத்தியர்க்கே பெரிதும் இட மாக அமைந்தது. தமிழ் அகத்தியர் IIக்கு நிலைத்த இடமாக இருந்திருக்க முடியாது. அவரது தலைமையிடம் கபாடபுரம். ஆனால் வடநாடு சென்ற காலத்தில் ஆங்காங்கு தவச்சாலைகள் தாம் அமைத்துச் சென்றது போலப் பொதிய மலையிலும் பன் னாள் தங்கியிருந்து சென்றிருக்க வேண்டும். அவர் தங்கியிருந்த இடம் பெரிதும் போற்றப்பட்டிருக்க வேண்டும். அதனால் பின் வந்த ஆரிய அகத்தியர் I அவ்விடத்தையே தமக்கும் இருப்பிட மாக்கினர். இக்காலத்திற் கண்ட இலக்கியங்கள் யாவும் கடைச் சங்க காலத்தைச் சார்ந்தன ஆதலின் ஆரிய அகத்தியரையும் அவரது பொதியமலையையும் சிறப்பிப்பன ஆயின. ஆரிய அகத் தியரைப்பற்றி அவர் மறைந்த பிற்காலத்தில் ஆரியர்கள் தெய் வத் தன்மையுடையவர் என்று புனைந்த பின்னர் அந்நூல்கள் எழுந்தன ஆதலின் அங்ஙனம் சிறப்பிப்பனவாயின.

"முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி" (நக்கீரர்).

"பொதியில் முனிவன் புரைவரக் கீறி
மிதுன மடைய" (பரிபாடல். 11. வரி 11, 12)

(ஈண்டு முனிவன் என்றது அகத்திய மீன் என்னும் நாளினை. அகத்தியன் என்றமையின் பொதியில் முனி என்றார்.)

"மாதவமுனிவன் மலைவலங் கொண்டு" (சிலப். அடை. 14)

"மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத் தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்" (புறப். வெ. மாலை. பாயிரம்)

(தென்மலை—பொதியமலை)

இங்ஙனம் வருவன கண்டு கொள்க.

மையை யுணர்ந்தனர். தமிழ் நாட்டில் பல இடங்களிலும் சுற்றி ஆங்காங்கு இறைவனை வழிபட்டனர். இவரது வழிபாட்டினைப் பற்றிப் புராணங்கள் தத்தமக் கேற்றவாறு புகன்றன. தமிழ் நாட்டில் இவர் அகத்தியம் தொல்காப்பியம் முதலிய நூல்களைக் கற்றனர். வல்லுநராயினர். தாம் கொண்ட பெயருக்கேற்ப அகத்தியத்தில் சிறந்த புலமை யெய்தினர். திரணதூமாக்கினியார் தொல்காப்பியத்தில் சிறந்த புலமை யெய்தினர். அதனால் தமிழ்மக்கள் இவ்விருவரையும் அகத்தியர் தொல்காப்பியர் என்பாராயினர். இக்காலத்தில் அகத்தியர் † மாணவராகப் பலர் அமர்ந்தனர். அவர்களுள் திரணதூமாக்கினியாரை நீக்கிப் பதினொருவர் சிறந்தனர். அவர்களுள் காக்கை பாடினி யென்பார் பெண் புலவர். இப்பதினொருவருள் ஆரியர் யாவர் என அறிதற்கில்லை. இப்பதினொருவரும் திரணதூமாக்கினியாரும் சேர்ந்து பன்னிரு படலம் என்னும் நூலை யியற்றினர். ஆதலின் இப்பன்னிருவரே அகத்தியர் மாணவர் என வழங்கலாயினர். அகத்தியர் மாணவர் பன்னிருவர் எனக் கூறும் முதல் நூல் மிகப் பிற்காலத்ததாகிய புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரமே யாகும்.

> "மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
> தென்மலை யிருந்த சீர்சால் முனிவரன்
> தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த
> துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதல்
> பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
> பன்னிரு படலமும்"

என்றது காண்க. தென்னாட்டைத் தாழ்த்த வேண்

† இவர்கள் பெயர் முன்னரே கூறப்பட்டது.

டும் என்று வந்த பாரத அகத்தியர் அல்லது ஆரிய அகத்தியர் I தமிழ் மொழியில் சீர்குலைத்தற் குரிய செயல்களை மேற்கொண்டிலர். ஆனால் திரணதூமாக்கினியார் அவ்வேலையில் முனைந்திருக்கலாம். தொல்காப்பியத்தில் முன்னுக்குப் பின்னாகப் பல சூத்திரங்கள் உள. தொல்காப்பியரும் இங்ஙனம் கூறுவரா என்றெண்ணக் கூடிய சூத்திரங்கள் பல உள. மரபியற் சூத்திரங்கள் பல இடைச் செருகல்களே என்பது பல அறிஞர்கள் (தேவநேயப் பாவாணர் போன்றார்) கொள்கை. அவ்விடைச் செருகல் வேலையைத் திரணதூமாக்கினியாரே மேற்கொண்டிருக்க வேண்டும். இடைச் செருகல்களுடனேயே அவர் தம் மாணவர்கட்கும் பயிற்றியிருக்க வேண்டும். அகத்தியனாரும் இதற்கு ஒத்து மத்தளம் அடித்திருக்கலாம். மாணவர் பதின்னொருவரும் பிறரும் இடைச் செருகல்களையும் தொல்காப்பியச் சூத்திரங்களே யென்றெண்ணிப் பாடங் கேட்டிருப்பர். சட்டி, சமக்கு முதலிய சகர முதன்மொழிச் சொற்கள் வழக்கில் இருந்திருக்கவும் 'ச்' எழுத்து அ ஐ ஔ என்ற எழுத்துக்களோடு மொழிக்கு முதலில் வராது என்று

"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அ ஐ ஔ வெனும் மூன்றலங் கடையே"

என்று சூத்திரம் செய்தனர் தொல்காப்பியர் எனின் எங்ஙனம் பொருந்தும்? இங்ஙனமாகச் சொற்களில் தம்து எண்ணங்களை நிறைவேற்றிக் கொள்வதைவிட வழக்கத்தில் தமது நாகரிகங்களையும் பெரிதும் புகுத்துவாராயினர். ஆரிய மணமுறைகளை மெதுவாகக் கூறினர். தமிழ் நாட்டுக் களவு மணம் ஆரியக் கந்தர்வ மணத்தோடு ஒத்தது என்றனர்.

"அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது
அந்தணர் அருமறை மன்றல் எட்டனுள்
கந்தர்வ வழக்கம் என்மனார் புலவர்" (இ. களவியல் 1.)

என இறையனார் அகப்பொருள் சூத்திரம் கூறுமள விற்கு வந்து விட்டது அவர்கள் புகுத்திய முறை. தமிழ் நாட்டுக்களவு மணத்திற்கும் ஆரியக் கந்தருவ மணத்திற்கும் ஒப்புமை சிறு பகுதியே யுள்ளது. அதாவது ஒருவனும் ஒருத்தியும் இதுவரையிலும் காணாராய்த் தற்செயலாய் ஒரு பொழிலகத்து எதிர்ப் பட்டுத் தம்முள் ஒத்த உணர்வினராகிப் புணர்தல் என்ற ஓரளவே ஒப்புமை. ஆனால் தமிழர் களவு மணத்திற்கும் கந்தர்வத்திற்கும் வேற்றுமை மிக வுண்டு. அங்ஙனம் புணர்ந்த தமிழ்க்காதலர்கள் எக் காலத்திலும் ஒருவரை யொருவர் பிரியார்கள். ஆனால் கந்தர்வர்களோ முதல் நாட் புணர்ந்து பிரிந்தவர்கள் இறுதிவரையிலும் ஒத்தவராக மாட்டார்கள். புணர்ந்து பிரிந்த அப்பொழுதே மீண்டும் ஒரு பொழி லகத்து அவள் ஒருவனை யெதிர்ப்படினும் புணர்வள். அவன் வேறொருத்தியை யெதிர்ப்படினும் புணர்வன். இது கந்தர்வ வழக்கம். மித்திரனோடு மணந்த ஊர் வசி வருணனையும் எண்ணினாள் என்ற கட்டுக் கதை யையும் காண்க. பிறன் மனைவி யென்றும் எண்ணா மல் ஊர்வசியை நினைத்த வருணனைச் சிறந்த தலை மகன் என்று எங்ஙனம் கொள்வது. இங்ஙனமாக ஒழுக்கம் என்பதே அற்ற ஆரியர் மணங்களுள் ஒன் றான கந்தருவத்தோடு இனிய தமிழ்க் களவு மணம் எவ்வகையில் ஒப்புமையாகும்.

"தானே யவளே தமியர் காணக்
காமப் புணர்ச்சி யிருவயின் ஒத்தல்" (கள. 2)

என்று ஓரளவில் ஒப்புமை காட்டினர். நக்கிரனாரும் இதனை யுணர்ந்தே 'ஒப்புமையாவது ஒருபுடை யொத்தல்' எனக் கூறினர். இங்ஙனம் தமிழர்களிடையே தங்கள் நாகரிகங்களைக் கூறியும் புகுத்தியும் வந்தது தமிழர்கள் தங்களை நன்கு மதித்தொழுகிய காலத்திலாகும். அன்றைத் தமிழர் அகத்தியர் வாய் மொழியாவும் வாய்மொழியே யெனக் கொண்டனர். அதனால் சிறிதளவு தமது கொள்கையை நிறைவேற்றினர். மக்கள் மதிப்பிற்குரிய ஒருவர் கூறும் மொழி வாய்மொழி யென்றே மக்கள் கொள்வர். அதனால் 'யாகாவாராயினும் நாகாக்க' என்று வள்ளுவர் வாக்குப்படிப் பெரியோர்கள் என்பார் சொற்களை அளந்தே கூறுவார்கள். சொல்லில் தவறுபடுவார்களாயின் மக்களும் அச்சொல்லை யேற்றுத் தீய கருத்துக்கொண்டு செயலில் இறங்குவார்களன்றோ? ஈண்டு ஓர் உதாரணம் அதற்குத் தருகின்றோம்:—

1947-ஜூலை-16-ந் தேதியன்று சிறப்பாக இந்திய மக்களால் பொதுவாக உலகமக்களால் **மகாத்மா** என்று கருதப்படும் **காந்தியடிகளார்** அவர்கள் தவறான வார்த்தை யொன்று கூறினார்கள். அதாவது:—

"தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் ஆகிய நான்கு திராவிட பாஷைகளைப் பேசும் ஜனங்கள் அடங்கிய தென் இந்தியா இதர பாகங்களிலிருந்து எதற்காகப் பிரிந்து போகவேண்டும். அதிக சமஸ்கிருத கலப்பினால் இந்த பாஷைகள் செழிப்படையவில்லையா? நான் இந்த நான்கு பிரதேசங்களிலும் சுற்றியிருக்கிறேன். இதர மாகாணங்களுக்கும் இவற்றிற்கும் ஒருவித்தியாசங்கூட எனக்குப்புலப்படவில்லை.

விந்தய மலைக்குத் தெற்கே வசிப்பவர்கள் ஆரியர்கள் அல்ல என்றும் வடக்கே வசிப்பவர்கள் ஆரியர்கள் என்றும் கருதுவது வெறும் மாயை. ஒரு காலத்தில் அவர்கள் எப்படியிருந்திருப்பினும் காஷ்மீரத்தி லிருந்து கன்யா குமரிவரை ஒரே ஜாதியினர் வசிக் கின்றனர் என்று கூறும் அளவுக்கு இப்போது கலப்பு ஏற்பட்டு விட்டது.''

(சுதேசமித்திரன் 18-7-1947 பக். 1. பத்தி. 6)

இது பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசப்பட்டது. இக்கூற்று அவரது மனதிற்கே பொருந்தாதது. ஆரி யர் தமிழர் என்ற பூசலைத் தடுப்பதற்கு இப்பொய் யைக் கூறவேண்டியதில்லை. பாமர மக்கள் காந்தி யார் கூற்று உண்மையென்றுதானே நம்பும். பிற உலக அறிஞர் கூட்டமும் உண்மையென்று நம்பு மல்லவா? ஆனால் ஆராய்ச்சி வல்ல உலக அறிஞர் களும் உண்மைத் தமிழறிஞர்களும் மட்டுமே காந்தி யார் கூற்றுக் கபடமான பொய்க் கூற்று என உணர் வர். பெரும்பாலான பாமர மக்கள் மகாத்மாவே கூறி விட்டாரே என்று மனம் மாறுபடுபவரே. இத்தகைய பொய்க்கூற்றுகளை மகாத்மாவாக இருந்தாலும் காந்தி யார் கூறியது தவறுதல் தான். அவரது அந்தராத்து மாவுக்கும் இது ஏற்றதல்ல. அதிக சமஸ்கிருதக் கலப் பினால் செழிப்படைந்த பாஷை தமிழல்ல என்பதை அவர் உணரவில்லை போலும். உணர்த்தவும் அவ ரைச் சார்ந்த மக்கள் இல்லை. தெலுங்கு முதலியன செழித்திருக்கின்றன. இன்றைய நிலையிலும் வட சொற்களை நீக்கி தனித்தியங்கும் ஆற்றல் தமிழுக் குண்டு என்பதை பிஷப் கால்டுவேல் கூறுவதை

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

யேனும் காந்தியார் கவனிக்கட்டும். ஆரியர் ஆரியர் அல்லாதவர் என்று பிரிப்பது மாயை யென்கின்றார். காஷ்மீரம் முதல் குமரிவரை ஒரே சாதியினர் என்று கருதுமளவுக்குக் கலப்பு ஏற்பட்டு விட்டதாம். இவரும் ஆரியமயமான தமிழரே நாம் என உணரவில்லை போலும். ஆரியமயமான இவர் வாலற்றநரி மற்றைய நரிகளைப் பார்த்துக் கூறியதுபோல் கூறிவிட்டார். இவர் கூறியதுபோலவே தான் தமிழ் மக்களால் மதிக்கப்பட்ட ஆரிய அகத்தியரும் அக்காலத்தில் தமிழ் மக்களை ஏமாற்றினார்.

இனி நச்சினார்க்கினியர் இறுதியில் கூறிய சாபத்தினை நோக்குவோம். அகத்தியர் பொதிகையி லிருந்து கொண்டு விதர்ப்ப நாட்டிலிருந்த தமது மனைவி உலோபா முத்திரையாரைத் திரணதூமாக்கினியார் அழைத்து வரும்படி ஏவினர். ஏவிய அளவில் திரணதூமாக்கினியாரை நம்பினரென்றே கொள்ள வேண்டும். ஆனால் அவர் சென்று அழைத்து வரும்போது வையைநதி உலோபாமுத்திரையாரை ஈர்த்துச் செல்ல தமக்கு அகத்தியரால் விதிக்கப்பட்ட நாற்கோல் நீளம் அகல நிற்றல் வேண்டும் என்பதை எங்ஙனம் கடைப்பிடிக்க முடியும்? உடனே அவர் ஒருமூங்கிற் கோல் கொடுத்துக் கரை யேற்றினர். இதில் குற்றந்தான் என்னை? கையைப் பிடித்தே கரையேற்றினும் தவறில்லையே. இதற்காக அகத்தியர் இருவரையுமே சுவர்க்கம் புகாப்பிர் என்றது அறிவுடைமையோ? அச்சாபந்தான் குற்றமற்றவரை யெங்ஙனஞ்சாரும்? உடனே திரணதூமாக்கினியாரும் குற்றமற்ற எங்களைச் சபித்தமையால் நீரும் சுவர்க்கம் புகாப்பிர் என்று சபித்தனராம். குருவினைச் சபிக்கத் தெரிந்த

மாணவனுக்கு ஆற்றின் நீரை அடித்துச் செல்லாத படி சபிக்கத் தெரியவில்லை போலும். என்னே! என்னே!! * இக்கதையைப் பயனற்ற கட்டுக்கதை யென்பர் பி. டி. சீநிவாசய்யங்காரவர்கள். "இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்க"னார் என நச்சினார்க்கினியர் கூறுவது இவ்வகத்தியர்க்குப் பொருந்துவதில்லை. அது இராமாயண அகத்தியர்க்கே பொருந்தும். அகத்தியர் ஒருவரே யெனக் கொண்டமையால் நேர்ந்த பிழையாகும் இது.

## இராமாயண அகத்தியர்

வட நாட்டிலுள்ள ஒரு காட்டகத்துப் பல ஆரிய முனிவர்கள் தவத்தை மேற்கொண்டிருந்தனர். அவர்களுள் ஆரிய அகத்தியர் II அல்லது இராமாயண அகத்தியரும் ஒருவராவர். இவர் மற்றையோரை விட ஆற்றல் குறைந்தவராக விளங்கினர். அதனால் மற்றைய முனிவர்கட்கும் இவர்க்கும் அடிக்கடிப் பிணக்கு நிகழ்ந்தது. அவர்களையடக்க வழியறியாத அகத்தியர் அதற்குத் தக்கவழி யென்று ஒன்றெண்ணுவாராயினர். தமது தவத்தின் வலிமையை யதிகப்படுத்தி அவர்களையடக்க எண்ணினர். அதற்குத் தகுந்த இடம் தென்னாடேயெனக் கொண்டனர். உடனே தமது எதிரிகளை நோக்கி "நான் தென்னாடு சென்று தமிழ் கற்று நுங்களையடக்குகின்றேன்".

---

*The worst myth is what Naccinarkkinyar tells us in his commentary on the prefatory ode to the Tolkappiyam called Payiram that Agathiyanar asked his disciple. Tranadhumagni to escort the master's wife, Lobamudra from Vidarbba to Podiya hill. (History of the Tamils Page 224)

என வஞ்சினம்கூறி நீங்கினர். தென்னாடு போது கின்றவர் கங்கையில் நீராடிக் கங்கை நீரிற் சிறிது கமண்டலத்திலும் நிரப்பினர். பாரத அகத்தியரைப் போலத் தாமும் பொதிய மலையை யிருப்பிடமாகக் கொண்டனர். முருகனிடம் நிறைந்த அன்பு வைத்தனர். முருகன் திருவருட்டுணையால் தமிழை நன்கு ஓதி யுணர்ந்தனர். தமிழின் இனிமையை நோக்கித் தமிழ் தமிழ் (இனிமை, இனிமை) எனக் கதறினர். அகத்தியத்திலும் வல்லுநராயினர். பயிர்க்கும் பயிற்றும் ஆற்றலும் வாய்ந்து ஆசிரியராகவும் விளங்கினர். ஆனால் இவரது மாணவர்கள் யாதொரு நூலும் இயற்றிலராதலின் இவர்களது பெயர்கள் எவ்விடத்தும் காணப்பட்டிலது. இவரும் பல சிவன் கோயில்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டனர். சிவவழிபாட்டினர். மருத்துவ முறைகளும் தெரிந்தனர். இவர் குறைந்தது 100 அல்லது 150 ஆண்டுகளேனும் வாழ்ந்திருக்கலாம். தென்னாட்டில் அக்காலத்தில் ஆட்சி செய்த பல அரசர்களைக் கண்டிருக்கின்றார் எனத் தெரிகின்றது. தூங்கெயிலெறிந்த தொடித் தோட்செம்பியனை இந்திரனைக் குறித்து விழாக் கொள்ளும்படித் தூண்டியிருக்கின்றார்.

"உலகந் திரியா ஓங்குயர் விழுச்சீர்ப்
பலர்புகழ் மூதூர்ப் பண்புமேம் படீஇய
ஓங்குயர் மலையத் தருந்தவ னுரைப்பத்
தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன்
விண்ணவர் தலைவனை வணங்கி முன்னின்று
மண்ணகத் தென்றன் வான்பதி தன்னுள்
மேலோர் விழையும் விழாக்கோள் எடுத்த

நாலேழ் நாளினும் நன்கினி துறைகென
அமரர் தலைவன் ஆங்கது நேர்ந்தது''
(மணிமேகலை. விழ. 1—9)

என்பது மணிமேகலை. காந்தமன் என்ற சோழ அரசன் காலத்தில் அரச பரம்பரையை அழித்து வந்த பரசுராமன் சோழநாட்டை யடைந்தனன். சோழன் தலைநகர் காவிரிப்பூம் பட்டினம். அதற்குப் புகார் என்பதும் ஒரு பெயர். பரசுராமன் புகாரை யடைவதை அப்புகார்த் தெய்வம் காந்தனுக்கு உணர்த்தியது. உடனே காந்தமன் தன் அரியணையில் தனக்கு அரசமகளிடம் தோன்று ஒருவனைக் ககந்தன் என்ற பெயருடையவனை அரசனுக்கித் தான் வருமளவும் அரசுபுரியும்படிக் கூறி அகத்தியரைப் புகலடைந்தனன். பின்னர்ப் பரசுராமன் போந்து ககந்தன் சிறந்த அரசமகனுக்குப் பிறந்தவன் அல்லன் என்பது தெரிந்து வாளா சென்றனன்.

''மன்மருங் கறுத்த மழுவாள் நெடியோன்
தன்முன் தோன்றல் தகாதொளி நீயெனக்
கன்னி யேவலிற் காந்த மன்னவன்
இந்நகர் காப்போர் யாரென நினைஇ
நாவலந் தண்பொழில் நண்ணூர் நடுக்குறக்
காவற் கணிகை தனக்காங் காதலன்
இகழ்ந்தோர்க் காயினும் எஞ்சுத லில்லோன்
ககந்தனும் எனக் காதலிற் கூஉய்
அரசா ளுரிமை நின்பா லின்மையின்
பரசு ராமனின் பால்வந் தணுகான்
அமர முனிவன் அகத்தியன் தனாது
துயர்நீங்கு கிளவியின் யான்தோன் றளவும்''
(மணி. சிறை செய்காதை)

என்பது மணிமேகலை. சரண்புக்க காந்தமனைப் பாது காத்தனர். அன்றியும் அவன் காலத்தில் காவிரி நீர் வற்றி வற்கடத்தை உண்டாக்கியது. அதுகாலை அவன் இவரை யணுகிக் காவிரி பெருக்கெடுத்தோடும் படிச் செய்ய வேண்டும் என வேண்டினன். உடனே இவர் தமது கமண்டலத்திற் கொண்டுவந்த கங்கை நீரைக் காவிரியாற்றிற் றெளித்தனர். இவரது தவ வலிமையினாலோ அல்லது 'காக்கை குந்தப் பனம் பழம் விழ்ந்தது' என்ற முதுமொழிப்படியோ காவிரி பெருக்கெடுத் தோடியது. இதனால் இவர் காவிரி யைக் கொணர்ந்தவர் என்று அழைக்கப்பட்டார்.

"செங்கதிர்ச் செல்வன் திருக்குலம் விளக்கும்
கஞ்ச வேட்கையிற் காந்தமன் வேண்ட
அமர முனிவன் அகத்தியன் தனாது
கரகம் கவிழ்த்த காவிரிப் பாவை"
(மணி. பதிகம். 9—12)

என மணிமேகலைப் பதிகம் கூறுகின்றது.

இவர் சோழர்களிடம் நட்பு பூண்ட தோடமை யாது பாண்டியர்களிடம் புரோகிதராகவும் அமர்ந் திருக்கின்றார். இவர் அரச செல்வாக் கடைந்ததால் அரசர் பெயர் முதலியன வடமொழியில் அமையத் தொடங்கின என்னலாம்.

* "லண்டன் பொருட் காட்சிச் சாலையிலுள்ள வேள்விக்குடிச் சின்னமனூர்ச் செப்பேடுகளில் அகத் தியரால் பட்டாபிஷேகம் செய்யப்படும் பாண்டிய வம்சத்தில் மாறவர்மன் அவதரித்தான் எனவும்

* தமிழ் வரலாறு பக். 204

"பொருவருஞ்சீர் அகத்தியனைப் புரோகிதனாகப் பெற்றது................பாண்டியர் திருக்குலம்" எனவும்,

"தென்வரை மிசைக் கும்போத்பவனது தீந்தமிழ்

எனவும் வருவதால் இவ்வகத்தியர் பாண்டியர் குலத்திற்குப் புரோகிதர் எனவும் தமிழாசிரியர் எனவும் (புரோகிதர் வடமொழியிற் சடங்குகளை விதிப்படிக் கூறி நடத்துபவன்) அறியப்படும். இதற்கேற்பவே இறையனார் களவியலுரை மேற்கோளிற் கண்ட பாண்டிக் கோவையிலும்

"பண்டகத்தியன் வாய் உரைதரு தீந்தமிழ் கேட்டேனுசிதன் எனப் பாண்டியனைக் கூறுதல் காண்க."

என இராகவய்யங்காரவர்கள் கூறுவர். இவ்வகத்தியர் ஆரிய யாகங்கள் பல புரிந்திருக்கவேண்டும். தமிழ் யாகத்தினைத் தமிழர்களிடையே நிலவொதுபடிச் செய்ய முற்பட்டனரென நினைக்கவேண்டி யிருக்கின்றது. இவர் ஆரிய யாகத்தை மிகுதியும் புகுத்துகின்ற காலத்தில் அதாவது இவரது பிற்காலத்தில் இலங்கையில் இராவணனது அரசு ஓங்கத் தொடங்கியது. அவன் பல தமிழரசர்களையும் தன் கீழ்ப்படுத்தி வட இந்திய ஆரிய அரசர்களையும் தன்னடிப்படுத்த முற்பட்டனன். இவ்வரசனுக்கு எதிரிகள் ஆரியர்களேயன்றித் தமிழர்களல்லர். இராமாயணத்தில் எவ்விடத்திலும் ஆரியரை அன்றித் தேவரைத் தவிரப் பகைவர்களாக வேறெவரையும் கூறவில்லை. ஆரியரது உயிர்க்கொலையோடு கூடிய யாகங்களை அழித்தனன். அழிக்கும்படியும் ஆட்களை யேவினன். அவர்களுள் சிலர் அகத்தியரின் சூழ்ச்சியால் உயிர்

இழந்தோர்களும் உளர். இதனைத் தான் நச்சினார்க் கினியர் "இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கின" தாகக் கூறுகிறார். இராவணனுக்கு விதிக்கப்பட்ட பல்லாயிரக் கணக்கான யாண்டுகளும் பத்து தலை களும் கட்டுக்கதைகளே. இவ்வகத்தியர் இராவண னால் தமது யாகத்திற்கு இடையூறு விளைக்கப்படுவ தால் தமிழகத்தைவிட்டு வடக்கு நோக்குவாராயினர். இராவணனின் ஆட்களால் இடையூறு நேர்வதைத் தடுக்க வில் முதலியவற்றைக் கைக்கொண்டனர். இவர் முனிவர் நிலையில் இருப்பினும் கொலைத் தொழி லுக்கும் அஞ்சிற்றிலர். தென்னாட்டில் தமக்குச் செல்வாக் கில்லையென்று தெரிந்ததும் வடநாட்டின ரிடம் மனம் திரும்பியது. நாட்டுப் பற்றும் வளரத் தொடங்கியது. தென்னாட்டில் இவர் வாழ்ந்த காலத் தில் ஆரியச் சொற்களையும் நாகரிகங்களையும் புகுத் தாயினர். ஆனால் அவை அவர் எதிர்பார்த்தபடிப் புகுத்த முடியவில்லை. காரணம் இராவணன் இவ ரையும் இவரைச் சார்ந்தோரையும் துன்புறுத்தியதே. இவரது தீய எண்ணத்திற்கு ஓர் உதாரணம் தருவாம்.

இவர் திருக்குற்றாலத்திற்கு இறை வணக்கத்தின் பொருட்டுச் சென்றார். அக்கோயில் திருமால் கோயில். திருமாலடியார்கள் இவரது சிவவேடங் கண்டு உட்புக விட மறுத்தனர். இவர் திருமாலடி யார் வேடங்கொண்டு உள்ளே சென்று திருமாலைச் சிவபெருமான் என்றெண்ணி வழிபட்டதோடன்றி யும்திருமாலுருவத்தினையும் சிவலிங்க உருவமாக்கினர். இது திருக்குற்றாலத் தலபுராணத்திற் கண்டது. இது கட்டுக்கதை யென்றும் கூறிவிடலாம் எனினும் இவர்

சென்று தமது வேடத்தில் மறைத்து வைத்திருந்த சில கருவிகளைக்கொண்டு திருமாலடியார்களை ஏமாற்றிச் சிவபெருமான் உருவமாக ஆக்கியிருக்கவேண்டும். திருப்பதிமலை முருகன் பெருமாளாக ஆயினது போல இருக்கலாம். இதனால் இவரது தீய எண்ணம் புலப்படும் அன்றோ? இராவணனால் விரட்டப்பட்ட இவர் வடநாடு நோக்கிச் செல்லுங்காலத்தில் இடையில் ஒரு தண்டகாரணியத்தில் தங்கினர். அதுகாலை இராமன் வடநாட்டிலிருந்து இராவணனை வெல்லுவான் வேண்டி வந்தனன். அகத்தியரும் அவனைச் சென்று கண்டு தம் கையிலுள்ள வில் முதலியவற்றைக் கொடுத்து அவற்றை யெய்யும் வகைகளையும் தெரிவித்தனர். வில் வாள் போரில் சிறந்த இராமனுக்கு அகத்தியர் தாம் வைத்திருந்த வில்லும் அம்பும் தந்து எய்யும் வகைகளையும் உணர்த்தினரென்றால் அகத்தியர் வைத்திருந்த வில் அம்புகள் ஆரியர் வில் அம்புகளைக் காட்டிலும் ஆற்றல் வாய்ந்தனவும் பயன்படுத்தும் முறை மாறுபட்டனவும் ஆக இருந்திருக்க வேண்டும் என்பது புலப்படுகின்றதன்றோ? தமிழ் நாட்டானை—தமிழ் நாட்டுப் பேரரசனை—ஆரியப் பகைஞனை—கடவுளுக்கும் ஒப்பாகாத முறையில் பசுக்கொலை புரிந்து செய்யப்படும் ஆரிய யாகங்களை அழித்த அருந்திறலினனை—ஆரியர்பால் தமிழர் நாகரிகத்திற்குப் பங்கம் விளைக்கும் காரணமாகப் பகைகொண்டவனை வெல்வான் வேண்டி இராமன் தென்னாடு போந்தான். வந்தவனுக்குத் துணை புரிந்தார் அகத்தியர். இனம் இனத்தைத் தானே நாடும். இராவணனின் நிலைகள் பலவற்றை யெடுத்துரைத்தனர். இவர் போன்ற

ஆரிய முனிவர்களின் துணைகொண்டும் இராமன் இராவணனைச் சூழ்ச்சியால் வென்று திரும்பினன். இராமன் இலங்கை செல்லுங் காலத்திலும் திரும்புங் காலத்திலும் மதுரை இராமேச்சுரம் முதலிய இடங் களுக்குச் சென்று சிவ வழிபா டியற்றிய காலங்களில் துணையிருந்த அகத்தியர் இவரே.

"தென்னருந் துப்பிற் றென்னவற் பெயரிய
தொன்முது கடவுள்" (40—41 அடி.)

என்னும் மதுரைக் காஞ்சியடிகளுக்கு "இராவண னைத் தமிழ் நாடாளாதபடி போக்கின கிட்டுதற்கரிய வலியினையுடைய பழமை முதிர்ந்த அகத்தியன்" என நச்சினர்க்கினியர் உரை கூறியுள்ளார். * இவ் வுரையை ஒத்ததே "இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து இராக்கதரை ஆங்கு இயங்காமை விலக்கி" என்று தொல்காப்பியப் பாயிரத்துட் கூறியதும் ஆம். "தென்னுட்டை யாண்டு குடிகளைத் துன் புறுத்தி வந்த இராவணனை அகத்தியர் பொதியின்

*மேற்கூறிய நச்சினர்க்கினியர் உரையைப் பி. டி. சீநி வாசய்யங்காரவர்கள் மறுப்பது பொருத்தமே.

······but the commentator's explanation is very much worse. He makes 'Tennavan' refer to Ravana and interprets kadavul, God, as Agastya twisting as he does often the order of the words to suit his interpretation, and says that Agastya removed Ravana, from the lordship over the Tamil Country. He quotes as his authority "the scholiast on Tolkappiyam Viz Ilamburanar who says that Agastya bound Ravana by his music." Naccinarkkiniyar's interpretation is outrageously bad and Maduraikkanji does not refer to Agastya at all. (History of the Tamils Page. 221.)

மலை யுருகும்படி இசைபாடி இலங்கைக்குப் போக்கினர் என்பது பண்டை வரலாறு" இது இராவணனைத் தமிழ் நாட்டை யாளாதபடிப் போக்கின என்பதற்குக் கீழ்க் குறிப்பாக உ. வே. சாமிநாதய்யர் எழுதியது. *

இவற்றை நாம் உள்ளூர நோக்குவோமானால் இவ்வகத்தியர் பொதியிலில் இருக்குங் காலத்தில் இராவணன் போந்து துன்புறுத்தினன் எனவும் அவர் இவர் சூழ்ச்சியால் அதாவது இராவணன் இசை விருப்பத்தினன் ஆதலின் அவன் மனம் மாறும் படியான இசையினைக் கொண்டு யாழ் இசைத்தலால் அவன் மனத்தை மாற்றினர் என்றும், இசைக் குருகிய அவன் இவரை பொதிகையிலிருக்கும் வரை ஒன்றும் செய்யாது விட்டனன் என்றும் புலப்படும்.

இவர் இராமன் இராவணனை வென்று மீண்ட பின்னர்ப் பல காலம் இருந்து வடநாட்டிலேயே உயிர்விட்டவராகலாம்.

## 5. ஆரியப்பாணினி கால அகத்தியர் யார்?

வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வரைப்பிங் கிதன்பெருமை யாவரே கணித்தறிவார்.

இக்காஞ்சிப் புராணப்பாடல் அரனார் பாணினிக்கு வடமொழியைக் கூறினார் என்றும் அதற்கிணையாகத் தென்மொழியை அகத்தியனார்க்குக் கூறினாரென்றும் கூறுகின்றது. இதனால் இருவரும் ஒரே காலத்தவர் என்றும் கொள்ளக் கிடக்கின்றது.

* பத்துப்பாட்டு மூன்றாம் பதிப்பு பக். 342.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

* "எழியன் முறைய தெதிர்முக வேற்றுமை
வேறெனை விளம்பான் பெயரது விகாரமென்
றோதிய புலவனும் உளன்ஒரு வகையான்
இந்திரன் எட்டாம் வேற்றுமை யென்றனன்"

இது பேரகத்தியச் சூத்திரம் என்று வழங்கப்படுகின்றது. இச் சூத்திரத்தில் பாணினியையும் இந்திரனையும் கூறியுள்ளதாகப் பிரயோக விவேக நூலுடையார் கூறுகின்றனர். † பெயரது விகாரமென்றோதிய புலவனும் உளன் என்றது பாணினியை யெனக் கொண்டனர். அவர் கூற்றின்படி நோக்குவோமானால் இந்திரனும் பாணினியும் அகத்தியனுக்கு முற்பட்டவர்கள் என்றன்றோ போதரும்? உயர்திரு. ரா. இராகவய்யங்காரவர்கள் 'உளன்' என்ற சொல்லைக் கண்டு பாணினி அகத்தியர் காலத்தில் இருந்ததாகக் கொள்ளலாம் என்பர். ¶

*இச்சூத்திரத்தை எற்கும் எவ்வகைப் பெயர்க்கும் ஈறாய் என்ற நன்னூற் சூத்திர உரையில் மயிலைநாதரும் சங்கர நமச்சிவாயரும் தொல். சொல வேற்றுமை யியலிலுள்ள "அதனினியறல்" என்னும் சூத்திர வுரையில் சேனாவரையரும் எடுத்தாண்டுள்ளார்கள்.

†நீர்கொண்ட சென்னி மகேச்சுரன் பாணினி நீள்கடல்சூழ்
பார்கொண்ட கீர்த்தி வரருசி ஞான பதஞ்சலிபூந்
தார்கொண்ட வாணவர் கோன் பாரதியிவர் தாள்வணங்கி
யேர்கொண்ட சொற்பிர யோகவிவேகம் இயம்புவனே" (பா. 1)

"எழியன்முறைய தெதிர்முகவேற்றுமை—வேறெனை விளம்பான் பெயரது விகாரமென்றோதிய புலவனும் உளனொரு வகையான்—இந்திரன் எட்டாம் வேற்றுமை யென்றனன்" என அகத்தியத்தின் கண்ணும், "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" எனத் தொல்காப்பியப்பாயிரத்தின் கண்ணும் வருதலின் இவர்கட்கு முதனூல் பாணினீயமும் ஐந்திரமுமாம் என்க.

¶ தமிழ் வரலாறு பக்கம். 200.

சிவஞான முனிவர் அவர்கள் இற்றைக்கு 200 ஆண்டுகட்கு முற்பட்டவர் அவரது காலம் நம்பிக்கை நம்பிக்கையென்றலைந்தகாலம் இலக்கண இலக்கிய ஆராய்ச்சிக்காலம் வரலாற்றாராய்ச்சிக்காலம் அன்று. ஆதலின் அவர்பாடிய காஞ்சிப்புராணப் பாடலை நாம் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளுதற்கில்லை. பின்னதாகிய அகத்தியச் சூத்திரத்தையே யெடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

ஐந்திரம், பாணினீயம்.

"ஓதியன் புலவனும் உளன் ஒருவகையால்—இந்திரன் எட்டாம் வேற்றுமை யென்றனன்" எனக் கூறியதனால் அகத்தியர் இருவரைக் குறிப்பிட்டாரென்று தெரிகின்றது. உளன் என்றதால் சமகாலப் புலவரையே குறிப்பிட்டாரென்றும் கொள்ளலாம். 'இந்திரன் எட்டாம் வேற்றுமை யென்றனன்' என்றதால் தமக்கு முற்பட்ட புலவராக ஒருவரையே குறிப்பிட்டார் என்றுங் கொள்ளலாம். முதற்கண் குறிப்பிட்ட புலவர் பாணினி. இப்பாணினி என்பவர் வடமொழியிலக்கணம் செய்த பாணினியா அன்றிப் பாணினியெனப் பெயருடைய தமிழ்ப்புலவரா? இது ஐயத்திற்கிடமாக உளது. பாணினி தமிழ்ப் புலவர் என்பதே எமது துணிபு. அவர் இசை வல்லுநராக இருக்கலாம். அப்பெயர் 'பண்' என்பதனடியாகத் தோன்றியதாகும். பண்ணினை யினிமையாகப்பாடும் ஆற்றலினராகலின் இவரைப் பாணினி என்றனர் மக்கள். இவர் இயல் நூலிலும் வல்லுநராக இருந்து இயல் நூலும் இயற்றினராவர். அந்நூல் கிடைக்கப்பெற்றிலேம். இவரைப்போன்றே யிந்திரன் என்ற தமிழ்ப் புலவரும் ஐந்திரம் என்ற நூலினை யியற்றினர். பாணி

னியால் இயற்றப்பட்டது பாணினீயம் என்றும் இந்தி
ரனால் இயற்றப்பட்டது ஐந்திரம் என்றும் பெயர்
பெற்றன; அகத்தியனாரால் இயற்றப்பட்டது அகத்தி
யம் என்றும் தொல்காப்பியனாரால் இயற்றப்பட்டது
தொல்காப்பியம் என்றும் பின்னர் பெற்றதுபோல
என்க. பெரும்பாலான சொற்களை ஆரியர் தமிழ்
நாட்டினின்றும் பெற்றனராதலின் வடமொழி யிலக்
கணத்தைப் பிற்காலத்திற் செய்தவரும் பாணினிப்
பெயரையே மேற்கொண்டார். இவர் மிகப் பிற்கா
லத்தவர். தமிழ்ப் பாணினியின் நூல் மறைந்து
படவே வடமொழிப் பாணினியின் புகழ் ஓங்கலா
யிற்று. ஆகவே தலைச்சங்க காலத்திற்கு முன்னர் இந்
திரன் என்னும் புலவரும் தமிழகத்தியர் I காலத்தில்
பாணினி யென்னும் புலவரும் இருந்தனர் என்பது
புலப்படும். பாணினி தமிழகத்தியர் I காலத்தவர்
எனின் தலைச் சங்கப் புலவர்களுள் ஒருவராகக் கூறப்
படாமைக்குக் காரணம் என்னை யெனின், தமிழகத்தி
யர் I தமக்கு முன்னூல்கள் பலவும் நிரல்பட இன்மை
யால் அவற்றினும் சிறந்ததாக ஒரு நூல் இயற்ற
உளங்கொண்டு அகத்தியத்தை யியற்றினராவர்.
இவர் அகத்தியத்தை யியற்றிய பின்னரே தலைச்
சங்கம் நிறுவப்பட்டது. அகத்தியரின் இடைக்காலத்
தில் பாணினியார் காலம் சென்றிருக்கலாம். அவர்
மறைந்த பல ஆண்டுகளுக்குப் பின்னரே தலைச்சங்கம்
நிறுவப்பட்டிருக்க வேண்டும். அதனாலேயே தலைச்
சங்கப் புலவர்களுள் ஒருவராகப் பாணினி கூறப்
பட்டிலர்.

இவற்றால் பாணினீயம் ஐந்திரம் என்பன தமிழ்
நூல்கள் என்பதும் அவற்றை யியற்றிய பாணினி இந்

திரன் என்பவர்கள் தமிழ்ப் புலவர்கள் என்பதும் தமிழகத்தியர் I காலத்தும் முன்னரும் வாழ்ந்தவர்கள் என்பதும் பெறப்படும்.

இதுபற்றி ரா. இராகவய்யங்கார் கூற்றைக் காண்பாம்.

*........அவர் (பிரயோக விவேக நூலுடையார்) கருத்துப்படி நோக்கின் இத்தமிழ் இலக்கணம் செய்த அகத்தியனார் அகத்தியர் வழியிற் பாணினிக்குப் பிற்பட்டவராவர்.

அவ்வய்யங்கார் ஆராய்ச்சி முடிவிற் கூறுவது வருமாறு:—

† "........இவற்றால் வேதகால அகத்தியர் இராமாயணகால அகத்தியர், பாரதகால அகத்தியர் எனப் பலராதல் தெளியலாம். இவ்வழியில் பாணினீய காலத்தவராய்த் தமிழுணர்ந்தவராய்த் தமிழ் இலக்கணமும் செய்த அகத்தியர் ஒருவர் உண்டு என்பது தான் இயைவதாகும்."

இக்கூற்றுப்படி நோக்கின் தமிழிலக்கணஞ்செய்த அகத்தியர் நான்காம் அகத்தியர் என்றும் அவரது காலம் பாணினி காலம் என்றும் பெறப்படுகின்றது. ஆனால் இது முதற்கண் கூறியதோடு மாறுபடுகின்றது. முதலில் பாணினிக்குப் பிற்பட்டவர் எனக் கூறப்பட்டது. பின்னர் பாணினி காலத்தவர் எனக் கூறப்பட்டது.

‡ வடநூல் வியாகரணங்களை முறைப்பட நிறுவுமிடத்து யாஸ்கர், பாணினி, காத்யாயனராகிய வரருசி மாபாடியகாரராகிய பதஞ்சலி என வரிசைப் படுத்துவது வழக்காக உள்ளதாகலின் முத்தமிழ் இலக்

* தமிழ் வரலாறு பக். 199. † பக். 214.

‡ தமிழ் வரலாறு பக்கம். 203.

கணம் செய்த அகத்தியர் வழியில்வந்த அகத்தியனார் காலம் பாணினிக்கும் கார்த்தியாயனர்க்கும் இடைப் பட்டதேயாகும் என்று துணிவது பொருத்தமாம்.''

இக்கூற்றும் முற்கூற்றையே ஒத்திருக்கின்றது. முத்தமிழ் இலக்கணம் செய்த அகத்தியனார் வழியில் வந்த அகத்தியனார் என இவரால் குறிப்பிடப்பட்ட வர்யாவர்? முத்தமிழ் இலக்கணம் செய்தவர்யாவர்? இரண்டாவது கொள்கைப்படி நான்காம் அகத்தியர் இலக்கணம் செய்ததாகத் தெரிகிறது. பாணினிக்கும் கார்த்தியாயனர்க்கும் இடைப்பட்ட அகத்தியர் என் றலின் அவர் ஐந்தாம் அகத்தியராகின்றார். ஆகவே முன்னுக்குப் பின் முரணாக இருத்தலின் இதனை ஒப் புக் கொள்ளுதற்கில்லை.

இனி வடமொழிப் பாணினி காலத்தில் ஒரு அகத் தியர் விளங்கியவராவர். அவரையே சிவஞான முனி வர் குறித்தனர். அவ்வகத்தியர் இராமாயண அகத் தியராக இருக்கலாம். 'நைமிசாரணியத்திலிருந்த முனிவருடன் மாறுபட்டுத் தென்னாடு போந்தார் அகத்தியர்' என்று முன்னர்க்கூறப்பட்டது. நைமிசா ரணிய முனிவருள் பாணினியும் ஒருவராகலாம். இவர் தென்னாடுபோந்த பின்னர் பாணினியைவிடச் சிறந்த ஆற்றலுடையவராகத் திகழ்ந்திருக்கலாம். பாணினி யார் வடநாட்டகத்திலேயே தங்கியவராகலின் தென் னாட்டில் புகழ்பெற்றிலர். அவர் தென்னாட்டைப் பற்றியே ஒன்றும் அறிந்திலர் என்று அறிஞர் கருது கின்றனர் †

† From this D. R. Bhandarkar infers that the names of southern countries were not known to Panini. (P. T. Srinivasa Iyyangar. History of the Tamils Page. 123).

# 6. அகத்தியம்

தமிழ் அகத்தியர் I இயற்றிய அகத்தியம் மறைந்துபட்டது. ஆனால் உரையாசிரியர்களால் சிற்சில சூத்திரங்கள் மட்டும் எடுத்தாளப் பட்டிருக்கின்றன. அவைகள் தாமும் உண்மையிலேயே தமிழ் அகத்தியர் I அவர்களால்தான் இயற்றப்பட்டனவோ என்னவோ? உரையாசிரியர்கள் எடுத்தாளுவதால் அவற்றை நாம் அகத்தியச் சூத்திரங்களாகக் கொள்ளுகின்றோம். அகத்தியம் மறைந்ததற்குக் காரணம் தொல்காப்பியமே யென்னலாம். அகத்தியம் இயற்றப்படுவதற்கு முன்னர் தமிழ் ஐந்திரம் பாணினீயம் முதலிய இலக்கணங்கள் அக்காலத்தில் இல்லின அவைகள் இலக்கணங்களை ஒழுங்குமுறையில் கூறாமையின் ஒழுங்குமுறையில் எழுந்தது அகத்தியம். அகத்தியம் அவற்றினும் சிறந்ததாக மக்கள் புலவர்கள் கருதினமையின் அகத்தியம் பெரிதும் பயிலப்படுவதாயிற்று. தலைச்சங்கத்தார்க்குப் பிறநூல்களின்றி அகத்தியமே இலக்கண நூலாக அமைந்தது கொண்டு நன்கு உணரலாம். ஆக அகத்தியத்தின் சிறப்பே ஐந்திரம் முதலியவற்றை மறையச்செய்தது. இடைச்சங்க காலத் தொல்காப்பியர் அகத்தியத்தினும் சுருங்கியதாகவும் எளிமையாகவும் தொல்காப்பியத்தை யியற்றவே மக்கள் தொல்காப்பியத்தையே பெரிதும் விரும்பிக் கற்பாராயினர். அதன் சிறப்பே அகத்தியம் மறைதற்குக் காரணமாக அமைந்தது. ஒன்றன் சிறப்பால் ஒன்று மறைதல் இயற்கை. இக்காலத்தினுங் கூடப் பவணந்தியாரின் நன்னூல் பயிலப்படுவதுபோலத் தொல்காப்பியம் பயிலப்படாமை நன்குணரலாம்.

மேல் நாட்டவரான கால்டுவெல் அவர்கள் நன்னூலளவிலேயே இலக்கணத்தை யுணர்ந்ததும் இதற்கொரு சான்று. ஆகவே பின்னர்வந்த தொல்காப்பியத்தின் சிறப்பே அகத்தியத்தை மறையச் செய்தது என்று முடிவு கட்டலாம்.

இவ்வகத்தியம் முத்தமிழ் இலக்கண நூலாகும். சில இயற்றமிழ் இலக்கணச் சூத்திரங்கள் மட்டும் உரையாசிரியர்களால் எடுத்தாளப்பட்டன. இசை நாடக இலக்கணச் சூத்திரங்கள் கிடைக்கப் பெற்றிலம். ஆனால் அடியார்க்கு நல்லார் அவர்கள் சிலப்பதிகாரம் அந்திமாலைச் சிறப்புச் செய் காதையில் உரை மேற் கோளாகக் காட்டிய பாடல் ஒன்றுண்டு. அது அகத்தியனார் இசைத்தமிழ் இலக்கணம் செய்தார் என்பதை விளக்கும்.

“ தக்கராக நோதிறங் காந்தார பஞ்சமமே
தூக்கங் கழிசோம ராகமே—மிக்கதிறற்
காந்தார மென்றைந்தும் பாலைத்திறமென்றார்
பூந்தார் அகத்தியனார் போந்து.”

இவ்வெண்பாவான் அதனை உணர்க. கூத்திலக்கணம் செய்தார் என்பதனை,

“ அவைதாம்,
சாந்திக் கூத்தும் விநோதக் கூத்தும் என்
றாய்ந்துற வகுத்தனன் அகத்தியன் றனே ”
“ எழுவகைக் கூத்தும் இழிகுலத் தோரை
யாட வகுத்தனன் அகத்தியன் றனே ”

என்பன போன்ற மேற்கோள்களால் உணரலாம்.

பேரகத்தியம் சிற்றகத்தியம் என இரண்டகத்தியம் உள போலக் கூறப்படுகின்றது. இரண்டகத்தி

யங்கள் இருந்தன இல்லை. தமிழ் அகத்தியர் I செய்த அகத்தியம் ஒன்றே. அகத்தியத்தின் பெருமை நோக்கி அதனைப் பேரகத்தியம் என்று வழங்கியிருக்கலாம். செஞ்ஞாயிறு என்றாற்போல. பின்வந்தவர்கள் சிற்றகத்தியமும் ஒன்றுண்டெனக் கொண்டுவிட்டனர். அகத்தியம் ஒரு நூலே. இரண்டல்ல என்பதுதான் அறிஞர்களின் கொள்கை.

இனி அகத்தியச் சூத்திரங்களை நோக்குவாம். ச. பவானந்தம் பிள்ளை அவர்கள், எம். ஆர். ஏ. எஸ்; (லண்டன்) எப். ஆர். எச். எஸ்; (லண்டன்) பேரகத்தியத் திரட்டு என்று ஒரு நூல் பதிப்பித்துள்ளார்கள். அது 183-சூத்திரங்களைக் கொண்டது. அவையனைத்தும் தமிழகத்தியர் I பாடியன அல்ல என உறுதியாகக் கூறலாம். உரையாசிரியர்கள் மேற்கொண்ட சில சூத்திரங்கள் தவிர மற்றையனவற்றைப் பிறர் பாடியன என்றே கருதலாம். உரையாசிரியர்கள் சூத்திரங்களிலும் ஐயப்பாடுண்டு. ஒருவேளை தமிழ் மொழிக்கு ஊறு செய்வான் வந்த ஆரிய அகத்தியர் I உண்மை அகத்தியச் சூத்திரங்களை நீக்கித் தாம் சில வடசொற் கலப்புடன் சூத்திரங்களை யியற்றிச் செருகியிருக்கலாம். வடமொழிப் படலம் என ஒரு படலம் 141 முதல் 164 சூத்திரங்கள் வரையுள்ளது. இப்படலம் இடைச்செருகலே யன்றி வேறன்று.

"அநாதி யொலியெழுத் தாதிவடி வெழுத்தே" (சூ. 3)
"இரேகை வரிபொறி யிலேகை அக்கரப் பெயர்" (4)
"ஐம்பாற் சுட்டும் வினவுத் தாரமுமாம்" (19)
"உடலுடம் பொற்றல் ஊமை வியஞ்சனம் மெய்" (27)
"வலிவன்மை வன்கணம் பரிசம்வல் லினப்பெயர்" (31)

"ஆதன் அநாதியு முதானனு தியுமா
நாத முரங் கண்டந் தலையிட முற்றும்
பல்விதழ் நாமுக் கணமைந் தொழிலால்
எல்லா வெழுத்தும் பிறக்கும் என்ப" (61)

"மயக்கம் புணர்ச்சி சங்கமம் சையோகம்
கூடல் கலத்தல் புல்லலொரு பொருட்சொலே" (89)

இச் சூத்திரங்களில் மிக்க வடசொற்கள் காணப்படு கின்றன. பேரகத்தியத் திரட்டிற் காணப்படும் சூத்திரங்களை யுற்று நோக்கினவர்களுக்கு அவை களைத் தொல்காப்பியச் சூத்திரங்களையும் நன்னூற் சூத்திரங்களையும் மனதில் வைத்துப் பிற்காலத்தவர் ஒருவரால் இயற்றப்பட்டன என்பது புலப்படும்.

1. "அ இ உ எ ஒக் குறிலாகும்" (பேரகத்தியம் 12)
"அவற்றுள்,
அ இ உ எ ஒக் குறிலைந்தே" (நன்னூல் 64)
2. "ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடிலாகும்." (பே. அ. 14)
"ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில்" (நன். 65)
3. "அ இ உ அம் மூன்றும் சுட்டிற் சுட்டே"
(பே. அ. 16)
" அ இ உ அம் மூன்றும் தனிவரிற் சுட்டே"
(நன். 66)
"அ இ உ அம் மூன்றும் சுட்டு" (தொல்காப்பியம் 31)
4. "வல்லெழுத் தாவன கசட தபற" (பே. அ. 30)
"வல்லினம் கசட தபற என ஆறு" (நன். 68)
"வல்லெழுத் தென்ப கசட தபற" (தொல். 19)
5. "மெல்லெழுத்தாவன ஙஞண நமன" (பே. அ. 32)
"மெல்லினம் ங ஞ ண ந ம ன என ஆறே"
(நன். 69)
"மெல்லெழுத் தென்ப ங ஞ ண ந ம ன"
(தொல். 20)

6. "இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள"
(பே. ஆ. 34)

"இடையினம் ய ர ல வ ழ ள என ஆறே" (நன். 70)
"இடையெழுத் தென்ப ய ர ல வ ழ ள" (தொல் 21)

7. "ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம்
குறிலிணை குறிற்கீழ் இடைகடை யளபெழும்"
(பே. அ. 42)

"ங ஞ ண ந ம ன வ ய ல ள ஆய்தம்
அளபாங் குறிலிணை குறிற்கீழ் இடைகடை
மிகலே யவற்றின் குறியாம் வேறே" (நன். 92)

8. "இடு குறி காரணம் பொதுச்சிறப் பெய்தும்"
(பே. அ. 56)

"இடு குறி காரணப் பெயர் பொதுச் சிறப்பின"
(நன். 62)

9. "உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிந் தியலும்"
(பே. அ. 65)

"உ ஊ ஒ ஓ ஔ இதழ் குவிவே" (நன். 78)

10 "கண்ணிமை கைந்நொடி யளவே மாத்திரை"
(பே. அ. 45)

"கண்ணிமை நொடியென அவ்வே மாத்திரை
நுண்ணிதி னுணர்ந்தோர் கண்ட வாறே"
(தொல். 7)

இங்ஙனமாகப் பல சூத்திரங்கள் ஒத்திருக்கின்றன. இனி உரையாசிரியர்கள் அகத்தியச் சூத்திரங்களாக எடுத்தாண்டவை வருமாறு:—

**இளம்பூரணர்.** (தொல்காப்பியம்).

* "அராகந் தாமே நான்கா யொரோ வொன்று
வீதலு முடைய மூவிரண் டடியே"

* "இரடி யாகும் இழிபுக் கெல்லை"

* "தாவே யெருத்தம் அராகம் கொச்சகம்
அடக்கியல் வகையோ டைந்துறுப் புடைத்தே"

* "கொச்சக வகையின் எண்ணொடு விராஅய்
அடக்கிய லின்றி யடங்கவும் பெறுமே"
(தொல். செய். 107)

* "இருவயின் ஒத்தும் ஒவ்வா வியலினும்
தெரியிழை மகளிரொடு மைந்த ரிடைவரூஉம்
கலிப்பே யாயினும் புலப்பே யாயினும்
ஒழுந்திணை மரபின் அறிவுவரத் தோன்றிப்
பொலிவொடு புணர்ந்த பொருட்டுற முடையது
கலியெனப் படூஉங் காட்சித் தாகும்"
(தொல். செய். 126)

நன்னூல் உரையாசிரியர்கள் எடுத்தாண்டவை வருமாறு.

## மயிலை நாதர்.

* "பெயரினும் வினையினும்மொழிமுத லடங்கும்"
(நன். 130)

* "கன்னித் தென்கரைக் கடற்பழந் தீவம்
சிங்களங் கொல்லங் கூவிள மென்னும்
எல்லையின் புறத்தவும் ஈழம் பல்லவம்
கன்னடம் வடுகு கலிங்கந் தெலிங்கம்
கொங்கணம் துளுவம் குடகம் குன்னம்
என்பன குடபால் இருபுறச் சையத்து
உடனுறைபு பழகும் தமிழ்திரி நிலங்களும்
முடியுடை மூவரும் இடுநில வாட்சி
யரசுமேம் பட்ட குறுநிலக் குடிகள்
பதின்மரு முடனிருப் பிருவரும் படைத்த
பன்னிரு திசையிற் சொன்னய முடையவும்" (நன் 227)

* "கண்டுபான் மயங்கு மையக் கிளவி
நின்றோர் வருவோர் என்றுசொன் னிகழக்
காணு வையமும் பல்லோர் படர்க்கை" (நன் 377)

* "உலக வழக்கமும் ஒருமுக் காலமும்
நிலைபெற வுணர்தரும் மறைநெறி யானு" (நன் 381)

* "அசைநிலை யிரண்டினும் பொருள்மொழி மூன்றினும்
நிலைபெற வுணர்தரும் முதுமறை நெறியான்" (நன் 381)

### சங்கர நமச்சிவாயர்.

"வயிர வூசியும் மயன்வினை யிரும்பும்
செயிரறு பொன்னைச் செம்மைசெய் யாணியும்
தமக்கமை கருவியும் தாமா மவைபோல்
உரைத்திற முணர்த்தலும் உரையது தொழிலே" (நன் 265)

### மயிலைநாதர் & சங்கர நமச்சிவாயர்.

"பலவின் இயைந்தவும் ஒன்றெனப் படுமே
அடிசில் புத்தகம் சேனை யமைந்த
கதவ மாலை கம்பல மனைய" (நன் 259—260.) †

"ஏழியன் முறைய தெதிர்முக வேற்றுமை
வேறெனக் கிளப்பான் பெயரது விகாரமென்
றோதிய புலவனும் உளனொரு வகையான்
இந்திரன் எட்டாம் வேற்றுமை யென்றனன்"
(நன் 290—291)

இச்சூத்திரத்தை "அதனினியறல்" என்ற தொல்காப்பிய வேற்றுமை யியற் சூத்திரத்தின்கீழ்ச் சேனாவரையரும் எடுத்தாண்டுள்ளார்.

* "வினைநிலை யுரைத்தலும் வினாவிற் கேற்றலும்
பெயர்கொள வருதலும் பெயர்ப்பய னிலையே"
(நன் 294—295)

* "ஆலு மானும் ஓடும் ஒடுவும்
சாலும் மூன்றும் வேற்றுமைத் தனுவே
செய்வோன் காரணம் செயத்தகு கருவி
யெய்திய தொழின்முதல் இயைபுடன் அதன்பொருள்"
(நன் 296—297)

---

† நன்னூல் சங்கர நமச்சிவாயர் உரையில் 'முன்னோர் மொழி பொருளே' என்ற வெண்பா ஒன்று பாயிரத்தில் அதிகமாகக் காணப்படுவதால் எண்ணிக்கை யொன்று அதிகமாயிற்று.

"ஆறு னுருபே யதுவா தவ்வும்
வேறொன் றுரியதைத் தனக்குரி யதையென
இருபாற் கிழமையின் மருவுற வருமே
ஐம்பா லுரிமையும் அதன்றற் கிழமை" (நன் 299-300)

இதிலுள்ள ஈற்றடியைச் சங்கரநமச்சிவாயர் விட்டனர்.

"மற்றுச்சொல் நோக்கா மரபின அனைத்தும்
முற்றி நிற்பன முற்றியன் மொழியே" (நன் 322-323)
"காலமும் வினையும் தோன்றிப் பால் தோன்றாது
பெயர்கொள் ளும்மது பெயரெச் சம்மே" (நன் 339-340)
"காலமும் வினையும் தோன்றிப் பால் தோன்றாது
வினைகொள் ளும்மது வினையெச் சம்மே" (நன் 341-342)
"காலமொடு கருத வரினு மாரை
மேலைக் கிளவியொடு வேறுபா டின்றே" (நன் 326-327)

*இக்குறி யிடப்பட்டனயாவும் பவாநந்தம் பிள்ளையவர்கள் திரட்டி வெளியிட்ட பேரகத்தியத் திரட்டில் காணப்படாதனவாம்.

மயிலைநாதருக்குப் பிற்பட்டவர் சங்கர நமச்சிவாயர். மயிலைநாதர் ஆண்ட சூத்திரங்கள் பெரும்பாலும் சங்கர நமச்சிவாயராலும் ஆளப்பட்டன. சில சூத்திரங்கள் விடுபட்டன. காரணம் என்னையோ? மயிலைநாதர் ஆளாத சூத்திரம் ஒன்று சங்கர நமச்சிவாயரால் ஆளப்பட்டது. "கன்னித் தென்கரை" என்ற சூத்திரம் மிகப் பிற்காலத்து வந்த ஆரிய அகத்தியர் I சேர்த்ததாக இருக்கலாம். தமிழகத்தியர் I காலத்தில் சிங்களம் முதலியன தீவமாக இருந்தன அல்ல. "பலவின் இயைந்தவும் என்ற சூத்திரத்தில் புத்தகம் முதலிய வடசொற்கள் காணப்படுதலின் அகத்தியம் இயற்றப்படுங் காலத்திலேயே தமிழில் வட

சொற்கள் கலந்தன என்பர் சிலர். புத்தகம் முதலி யன தமிழ்ச் சொற்களே யன்றி வடசொற்கள் அல்ல. வடசொற்கள் மிகுதியும் மலிந்த சூத்திரங்கள் இடைச் செருகல்களாம். அகத்தியம் இயற்றப்படுங் காலத்தில் வடசொற்கள் தமிழிற் கலந்தன என்பது சற்றும் பொருந்தாது என்பது அகத்தியத்தின் காலத்தை யுணர்வார்க்குப் புலனாகும்.

# 7. அகத்தியர் தமிழைத் தோற்றுவித்தவரா ?

சிலர் அகத்தியர் வடநாட்டி லிருந்து வந்த பின் னர்த் தமிழைத் தோற்றுவித்தா ரென்றும், சிலர் சிவ பெருமான் * வடநாட்டி லிருந்து வந்த அகத்தியர்க் குத் தமிழை அறிவுறுத்த அதன் பின்னர் அகத்தி யரே தமிழர்களுக்கு அறிவுறுத்தினர் என்றும் கூறுவர்.

அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங் கம்பு யாதன்
முகத்தினில் வாழுமந்த மொய்குழ லருளினாலே
பகைத்தெதிர் பொருத செய்வப் பாரத கதையின் முந்நீர்ச்
செகத்தினில் விருத்த யாப்பால் செய்கெனச் செய்த தன்றே
(பாரதம்)

உழக்குமறை நாவினு முயர்ந்துலகை மோதும்
வழக்கினு மதிக்கவி யினும்மரபி னாடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கண்
தழற்புரை சுழற்கடவுள் தந்ததமிழ் தந்தான்.
(கம்ப. ஆரணி. அகத். 41)

இவ்விரண்டு பாடல்களையும் மேற்கோளாகக் கொள்வர். இவர்கள் அகத்தியரை வடநாட்டி லிருந் தும் வந்தவர் என்கின்றனர். அகத்தியர் வருவதற்கு

* முருகனையும் கூறுவர்.

முன்னர்த் தமிழர்கள் ஊமையர்களாக இருந்தனர் போலும். இவர்கள் கூற்றுக்கள் யாவும் பொய்யே யென்பது மேலே யாம் கூறியிருப்பனவற்றால் நன்கு விளங்கா நிற்கும். அறிஞர்களது கொள்கையும் அகத்தியரே சிவபெருமானோ தமிழைத் தோற்றுவித்தவர்கள் அல்லர் என்பதுவே.† "தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ் தந்தான்" என்ற கம்பர் வாக்கை மேற்கொண்டவர்கள் அவர் வாக்காகிய மற்றொரு பாடலையும் காண்பாராக.

> நின்றவனை வந்தநெடி யோனடி பணிந்தான்
> அன்றவனு மன்பொடு தழீஇயழுத கண்ணான்
> நன்றுவர வென்றுபல நல்லுரை பகர்ந்தான்
> என்றுமுள தென்றமிழ் இயம்பியிசை கொண்டான்"
> (கம்ப. ஆரணி. அகத். 47)

இதில் "என்றுமுள தென்தமிழ்" என்றது கூர்ந்து நோக்கற்பாலது. "தழற்புரை சுடர்க்கடவுள் தந்த தமிழ்" என்றது சிவபெருமானார் அகத்தியர்க்கு தமிழ் மொழியை அறிவுறுத்தியதையும் "தமிழ் தந்தான்" என்றது அகத்தியன் தன் மாணவர்க்குத் தானாசிரியனாகி அறிவுறுத்தியதையும் குறிப்பன வாகும் எனக் கொள்ளலாம்.

இனிப் பல ஆராய்ச்சி அறிஞர்களின் கருத்துக்களை யீண்டுத் தொகுத்துக் கூறின் நன்றென்று அவற்றைக் கூறுகின்றோம். ஆனால் அவர்களில் பலர் அகத்

† This Tamil legend says that he learnt Tamil from Siva or Subramanya and taught the language to the Tamil people who were, I suppose, dumb till Agastya appeared in their midst..............all this is pure myth. P. T. Srinivasa Iyyangar. (History of the Tamils Page 218—219).

தியரை ஆரியர் என்றே கொண்டவர்கள் என்பதை யும் நினைவிற் கொள்ளுதல் வேண்டும்.

"சிலர் அகத்தியரன்றோ தமிழ் மொழியை உண் டாக்கினூர் என்று நினைக்கலாம். சிலர் வட மொழி யும் தமிழ் மொழியும் சிவபெருமானூ லல்லவோ தோன்றின என்று எண்ணலாம். கடவுள் மொழிகளை உண்டாக்கினூர் என்று கூறுவதை விட மொழிகள் கடவுளர்களை உண்டாக்கின என்று கூறுவது சாலப் பொருந்தும். புராணேதிகாசங்கள் பாடினேர் மக்கள் மனத்தகத்துப் பத்திப் பயிர் விளைப்பான் எல்லாம் கட வுளால் தான் உண்டாயிற்று என்று கூறுவர். அவர் கள் அங்ஙனம் கூறுர்களெனின் அவர்கள் பாடும் புரா ணக் குவியல்கள் பயனிலவாய் ஒழியும்". (தமிழும் தமிழரும் பக். 100)

"தமிழ்". செல்வகேசவராய முதலியார், எம்.ஏ., அவர்கள், அகத்தியர் செய்த காரியம்:—ஏதோ ஒரு காரணத்தால் தென்னூட்டினை யடைந்தவர் தமிழ் வல்ல சான்றின ரிடத்து அதனை ஓதி யுணர்ந்தார் என் பதே எமக்குத் துணிபு. அகத்தியர் தமிழைத் தாமே படைத்தாரென்பது எவ்வாற்றானும் பொருந்தாது. ஒரு பாஷையை ஒருவர் உண்டாக்கினூ ரென்பது பாஷா தத்துவ சாத்திர முடிபுக்கு முற்றும் முரண்பா டாகும். கடவுட்டன்மை ஒருவற் கேற்றி அவன் தானூகவே ஒரு பாஷையைச் சிருஷ்டித்து இலக்கியங் களையும் உண்டாக்கிப் பலரும் பயிலச் செய்தான் என் பது பிரகுர்தி விரோதமான அசம்பாவிதமேயாகும். "இலக்கியம் கண்டதற்கிலக்கணம் இயம்பல்" பன் னூட்டிலுள்ள பாவலர்க்கும் நாவலர்க்கும் உடன்பாடா

யிருப்ப அகத்தியர் தாமே இலக்கியம் கற்பித்து இலக்கணமும் இயற்றினாரென்பது பொருந்துமா? அகத்தியர் காலத்துக்கு முன்னரே தமிழில் இலக்கியங்கள் இல்லாவிட்டால்

"இலக்கிய மின்றி யிலக்கண மின்றே
எள்ளின் றாகில் எண்ணெயு மின்றே
எள்ளினின் றெண்ணெய் யெடுப்பது போலவே
இலக்கியத் தினின் றெடுபடும் இலக்கணம்"

எனப் பேரகத்தியம் கூறுவதாகக் கூறுவது என்னும்? அகத்தியர் தென்னாடடைவதற்கு முன்னரே அங்கே தமிழ் வழங்கியிருந்த தென்பதும் அந்நாளில் அதனை வழங்கினோர் அநாரியரான வேறு மனிதர் என்றும் இராமாயணத்தில் இராமர் கூறிய தட்சிண வரலாற்றிலும் ஸ்காந்த புராணத்திலும் பெறப்படும்."

ஞா. சா. துரைசாமிப் பிள்ளையவர்கள் 'தமிழ் இலக்கியம்' என்ற தமது நூலிற் கூறுவது:—

"பாஷை யென்பது மானிடவர்க்கத்தின் கூட்டுறவின் பயனாய்க் காலக்கிரமத்தில் உற்பத்தியாகிப் பல நூற்றாண்டுகளாக வளர்ந்து மனிதர் நாகரீகம் அறிவு முதலியவற்றில் தேருந்தோறும் உடன் விருத்தியாகிக் கொண்டேபோவது. அன்றியும் பாஷை யெப்போதும் ஒன்றுபோல் இருப்பதுமன்று. புதியன புகுதலும் பழையன கழிதலும் பாஷைகளியற்கை. இங்ஙனமாகவும் பாஷையும் அதன் இலக்கணமும் ஒரே காலத்தில் தானே யுண்டாயின எனக் கூறல் எத்துணை விபரீதம்?"

வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் அவர்கள் "தமிழ் மொழியின் வரலாறு" என்னும் நூலிற் கூறுவது :—

தமிழ்ப் பாஷையின் தோற்ற விஷயமாக யாம் மேற்கூறிப்போந்தன அனைத்தும் * எவ்வாறு கருதப் படினும் படுக கருத்துக்கள் தன் முயற்சியானெழும் ஒலிகளின் சம்பந்தமாகவே வெளிப்படுகின்ற இயல்பி லின்றுமே பாஷைகளுண்டாதலியலும் என்பது யாவ ரும் மறுக்கமுடியாததோர் பாஷைநூலுண்மை. இவ் வுண்மையை யொட்டியே தமிழ்ப்பாஷையின் தோற் றமும் ஏற்பட்டிருத்தல் மிகவும் கவனிக்கற்பாலதே. ஈதிவ்வாறாக தமிழ் நூலாசிரியர் † பலரும், இக்காலத் தினும் ஆங்கிலநூற் பயிற்சியில்லாத நண்பருட் சில ரும் தமிழ் மொழியும் வடமொழியும் தேவபாஷைக ளென்றும் இவ்விரண்டு முறையே அகத்தியனார்க்கும் பாணினியார்க்கும் சிவபெருமானால் உபதேசிக்கப்பட் டன என்றும் கூறுகிற்பர்.''

உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் கூற்று:—

''இவர் (அகத்தியர்) வருவதற்கு முன்னரே இந் நாட்டிலிருந்த தமிழையும் அதனிலக்கணத்தையும் இவர் தந்தாரென்று கூறியிருப்பது உபசாரவழக்கு'' (சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும்.)

மேற்கூறிய அறிஞர்கள் யாவரும் வடநாட்டகத் திருந்துபோந்த அகத்தியர் தமிழைத்தோற்றுவித்தனர் என்ற கொள்கையை மறுத்திருக்கின்றார்களே யன்றித் தமிழகத்தியர்கள் இருந்திருக்கின்றார்கள் என்பதை அவர்கள் கருதியவர்களாகத் தெரியவில்லை. எப்படியா

* மொழி தோன்றுவது போறல்வகை, சுவைவகை, அறி குறிவகை ஆகிய முத்திறத்தானுமாம் என்று கூறி அவற்றை யுதாரணங்களுடன் நன்கு விளக்கிக் கூறியுள்ளார்கள்.

† இக்காலத் தமிழ் நூலாசிரியர்கள் அவ்வாறு கூறுர்கள்.

யினும் அகத்தியர் தமிழைத் தோற்றுவிக்கவில்லை யென்பதும் கடவுளர்களும் தோற்றுவிக்கவில்லை யென்பதும் வெள்ளிடைமலை.

"தமிழ் மொழியிலே யார் என்ன செய்தபோதி லும் கேள்விமுறையில்லை. அவரவர் தத்தமக்குத் தோன்றியவாறும் வாய்க்குவந்தவாறும் எழுதுகின்ற னர். இவ்வாறு செல்லவிடுதலுங் கேடே. தமிழ் இலக்கண முடையார் முற்புகுந்து இதனைச் சிறிது அடக்கியாளலும் வேண்டும் என்று சூரியநாராயண சாத்திரியார் கூறுவதுபோலவே கண்டவர்கள் கண்ட படி அகத்தியரைப்பற்றிப் புனைந்து விட்டனர். "கண் மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப்போக" வேண்டும் என்று பெரியோர் கூறியது இக்காலத்துப் பலித்துத் தான் வருகின்றது. புராணங்களின் கதைகளை ஆரா யுங்காலம் இது. தமிழின் உயர்வையுணருங்காலம் இது. எங்கும் தமிழ் எங்கும் தமிழர் என்ற பேச்சு நிலவுங்காலம் இது. ஒவ்வொரு நாட்டினரும் தமிழ் மொழியின் பழமையையும் அதுவே உலகமொழிக்குத் தாய்மொழி—முதன்மை மொழியாகும் என்பதையும் உணர்ந்துகூறும் காலம் இது. வடநாட்டினர்—அதி லும் வடநாட்டு ஆரியர்கள் எவ்வளவுதூரம் தமிழின் பெருமையை உணராமலும் மதிக்காமலும் இருந்தார் களோ அவ்வளவும் உணரவும் மதிக்கவும் செய்விக் கும் காலம் இது. மொஹெஞ்சே—தரோ, ஹரப்பா நாடுகளைத் தோண்டுங் காலத்தில் தமது நாட்டின் மொழி, கலை, நாகரிகம் முதலியவற்றின் பழமைகள் வெளிப்படும் என்று கனவுகண்ட வடநாட்டினர் மூக் கில் விரல்வைத்து வியக்கும் அளவில் கிணறு வெட் டப் பூதம் புறப்பட்டதுபோல் தமிழ் நாட்டினரின்

மொழி, கலை, நாகரிகம் முதலியவற்றின் பழமை புலப்பட்டது. வியந்தனர் வடநாட்டினர். விளக்கினர் வெளிநாட்டினர். களித்தனர் கன்னித் தமிழ் நாட்டினர்.

இனி அவலோகிதன் என்ற புத்தமதத்தினரிடம் தமிழ் அறிந்தனர் அகத்தியர் என்ற கொள்கையும் நிலவுகின்றது.

"ஆயுங் குணத்தவ லோகிதன் பக்க லகத்தியன் கேட்
டேயும் புவனிக் கியம்பிய தண்டமி ழீங்குரைக்க
நீயும் உளையோ எனிற்கரு டன்சென்ற நீள்விசும்பில் [யே.
ஈயும் பறக்கும் இதற்கென்கொ லோசொல்லும் ஏந்திழை
(வீரசோழியம் பாயிரம் 2)

என்ற புத்த மித்திரனாரின் வாக்கைக் காண்க. இக்கொள்கையை ரா. இராகவய்யங்காரவர்கள் மறுப்பர். "அசோகச் சக்கரவர்த்தி காலம் வரையில் அதாவது கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர் 274 ஆண்டுவரையில் தமிழ் வேந்தருள்ள தென்பக்கத்துப் பௌத்த மதக் கொள்கைகள் புக்கன அல்ல என்பது அவ்வசோக சாசனத்தால் (கொர்நார்க்கல்வெட்டு) அறியக் கிடத்தலான் சீராமமூர்த்தி காலத்துள்ள வைதீகரான அகத்தியர் வரலாற்றொடு அஃதியையாமை தெளியலாம் (தமிழ் வரலாறு).

பொதுவாக ஒவ்வொரு மத நூலாசிரியர்களும் அகத்தியரை விடாது கூறியதுபோல் பௌத்தமத நூலாசிரியர்களும் கூறிக்கொண்டனர் எனக் கோடலே பொருத்தம்.

# 8. பிற அகத்தியர்களும் நூல்களும்

1. முன்னர்க்கூறிய நால்வர் அகத்தியர்களேயன்றிப் பிறரும் அகத்தியர் என்ற பெயருடன் வாழ்ந்திருக்கின்றனர். அவருள் காலத்தால் முற்பட்டவரும் (ஆரிய அகத்தியர்களுக்கு முற்பட்டவராகவும் இருக்கலாம்) தமிழரும் ஆகமுத்தூர் அகத்தியர் என்பவர் ஒருவர் இருந்திருக்கின்றார். இவரது வரலாறு விரிவாக அறியப்படவில்லை. இவர் பாடியதாக

"செங்கோன் தரைச்செலவைச் சேந்தன் தனியூரான்
தங்கன் தமிழ்த்தாப் புலித்தொடரால்—அங்கிசைத்தான்
சக்கரக்கோ முன்னின்று சாற்றும் பெருவூழி
யக்கரக்கோ நாமஞ்ச வாம்"

என்ற பாடல் காணப்படுகின்றது. இதனால் தனியூர்ச் சேந்தன் என்பவன் 'செங்கோன் தரைச்செலவு' என்ற நூலை யியற்றினன் என்றும், அந்நூல் முதலூழியிலிருந்த தலைச்சங்கத்தார் காலத்தில் குமரியாற்றிற்கும் பஃறுளியாற்றிற்கும் இடையேயுள்ள பெருவள நாட்டரசனாகிய செங்கோவைப்பற்றிய தென்றும் நாம் உணர்கின்றோம்.

2. சித்தர் பதினெண்மருள் ஓர் அகத்தியர் காணப்படுகின்றார். சித்தர்பாடலுள் அவர் பாடலும் உண்டு.

அகத்தியரால் இயற்றப்பட்டனவாகக் கூறப்படும் நூல்கள் :—

1. வைத்தியக் கும்மி
2. குணவாகடம்
3. வைத்ய சாரம்
4. நயன சாரம்
5. அவிழ்த சாரம்

6. சிந்தூர மஞ்சரி
7. அமுத கலைக்யானம்
8. பஞ்சகாவிய நிகண்டு
9. கன்மகாண்டம்
10. பூரணசூத்திரம்
11. சங்குசுத்தி
12. அஷ்டகம் (வடமொழி நூல்)

இவை பேரகத்தியத்திரட்டின் முகவுரையிற் காணப்பட்டவை)

1. வயித்திய நூல்கள்
2. பெருந்திரட்டு
3. வயித்திய சிந்தாமணி
4. ஆயுள்வேத பாஷ்யம்
5. விதிநூல் மூவகைக் காண்டம்
6. செந்தூரம் 300
7. மணி 400
8. சிவசாலம்
9. சத்திசாலம்
10. சண்முகசாலம்
11. வயித்தியக் கண்ணாடி
12. வைத்தியம் 1500, 1600
13. கர்மவியாபகம்
14. கரிசில் பஸ்மம் 200
15. தண்டகம்
16. பக்ஷணி
17. நாடி
18. அகஸ்திய சம்மிதை யென்னும் வடநூல்)

(இவை அபிதான சிந்தாமணி பக். 5-ல் கண்டவை)

மேற்குறித்த நூல்களை யியற்றிய அகத்தியர்கள் எத்துணைவர் என அறியோம். இவர்களெல்லாரும் அவ்வந்நூல்க ளளவில் அடங்கினவர்களேயன்றி பெரும்புகழ்பெற்று மிளர்ந்தவர்கள் அல்லர். இவர்களுள் சில நூல்களுக்குரிய அகத்தியர்கள் ஆரியராகவும் இருக்கலாம். அகஸ்திய சம்மிதை அஷ்டகம் என்ற வடமொழி நூல்களை யியற்றியவர்கள் ஆரியர்களாகவும் இருக்கலாம்.

## 9. சில கதைகள்

அகத்தியர் கதைகள் பல நூல்களிற் காணப்படுகின்றன. புராணங்களில் நாம் மிகுதியாகக் காணலாம் சரித்திரத்திற்குப் பயன்படுவன பாரதம் இராமாயணம் கந்தபுராணம், திருவிளையாடற் புராணம் முதலிய சில நூல்களேயாம். அவைகளிற் காணப்படும் கதைகளுட் சிலவற்றைக் காண்பாம்.

### பாரதம்—கந்தபுராணம்.

விந்தமலை மேருமலையுடன் போட்டியிட்டு வானளாவ உயர்ந்தது. அதன் செருக்கை யடக்கவேண்டுமென்று எண்ணி அகத்தியர் சிவபெருமானிடம் சென்றுரைத்தார். சிவபெருமானும் உமது கொள்கை நிறைவேறும்; அதன் செருக்கை யடக்கித் தென்தேயம் சென்று பொதியமலையில் இருக்க என்றனர். உடனே அகத்தியர் இறைவனை நோக்கி அடியேன் நம்மைப் பூசிப்பதற்குத் தென்தேயத்தில் வாவி முதலியவற்றில் நீர் நிறைந்திருக்க வேண்டுதலின் அங்கு ஓர் ஆறுவேண்டும் என்ன இறைவன் காவிரியை அழைத்து இதை நமது கமண்டலத்துள் அடக்கிச்

செல்லின் அது அங்கு ஒரு நதியாகப் பெருகும் என்ன முனிவரும் அக்காவிரியைக் கமண்டலத்துள் அடக்கித் தென்திசை நோக்கி வந்தனர்.

வழியில் தாரகனின் மாயா புரியைக் கடக்க வேண்டியதாயிற்று. அங்குக் கிரௌஞ்சன் என்னும் அரக்கன் ஒரு மலை வடிவுதாங்கி வழியில் நின்றனன். அஃதுணராது அகத்தியர் அம்மலை வழியொன்றில் சென்றார். அவ்வழி யவரைப் பல மூலை முடுக்குகளில் கொண்டு சென்றது. அதனால் துன்புற்றனர். அதன் காரணத்தை ஞானத்தாலுணர்ந்து 'வஞ்சகனே நீ நினது அரக்கவடிவு நீங்கி மலைவடிவாகவே யிருக்கக் கடவாய் முடிவில் குமாரக் கடவுளின் வேலாயுதத்தால் பிளக்கப்படக்கடவாய்' என்று சபித்தனர். பின்னர்த் தென்திசை நோக்கிச் சென்று விந்தமலையின் உச்சியில் தமது உள்ளங்கையை வைத்து அதன் செருக்கை யடக்கினர். பின்னர்க் குட நாடடைந்தார். (கந்தபுராணம்)

ஆங்கு வில்வலன், வாதாபி என்ற அரக்கர் இருவர் இருந்தனர். அவர்கள் வேதியர்களைக் கொன்றுண்பதையே தொழிலாகக் கொண்டிருந்தனர். வில்வலன் தானொரு வேதியனாக வடிவு கொண்டு காடுகளிற் சென்று அங்குத் தவம் புரிந்து வாழும் வேதியர்களுள் ஒருவரை விருந்துண்ண அழைப்பான். அவர் இசைந்து வந்தால் ஆடாக உருக்கொண்ட வாதாபியை வெட்டி விருந்து செய்வான். வந்த வேதியர் விருந்துண்டு முடிந்தபின்னர், வில்வலன் வாதாபியைப் பெயரிட் டழைப்பான். வேதியர் வயிற்றகத் திருக்கும் வாதாபி அவரது வயிற்றைக் கிழித்துக்

கொண்டு வெளிவருவான். பின்னர் இருவருமாக இறந்த வேதியரை யுண்பர். இது இவர்கள் மேற்கொண்டிருந்த வழக்கம். ஒருநாள் அகத்தியரிடம் வில்வலன் சென்று விருந்துக்கு அழைத்தான். அவரும் இசைந்தார். வழக்கப்படி விருந்து நிறைவேறியது. வில்வலன் வாதாபியை அழைத்தான். ஞானத்தால் அகத்தியர் உணர்ந்து கொண்டு தமது வயிற்றைத் தடவிக்கொண்டே 'வாதபி சீரணம் ஆகக் கடவது' என்றார். வாதாபி வழக்கப்படி வெளிவராமல் இறந்தனன். எதிர்த்தான் வில்வலன். அவனையும் வென்றார் அகத்தியர். (பாரதம்—கந்தபுராணம்)

அப்பால் கொங்கு நாட்டை யடைந்தார். வாதாபியைக் கொன்றதால் பிரமகத்தி அவரைத் தொடர்ந்தது. அதனை நீக்கும் பொருட்டு ஆங்கோரிடத்திலமர்ந்து சிவபூசனை புரிந்து வந்தார்.

இப்பால் சூரபதுமனின் தொல்லைக் குட்பட்ட இந்திரன் இந்திராணியுடன் வானுலகை விட்டுப் பூமிக்கு வந்து சீர்காழியம்பதியில் மூங்கில் வடிவாகி நந்தவனம் அமைத்துச் சிவபூசனை புரிந்து வந்தான். சூரபதுமன் இந்திரனை யெங்குந் தேடிக் காணாமையால் அவனைத் துன்புறுத்த வேண்டும் என்று 'மேகம் எங்கும் மழை பொழியாதிருக்க' எனக் கட்டளை யிட்டான். மழை பெய்யாமையால் நந்தவனம் முதலியன வாடத்தொடங்கின. இந்திரன் இறைவனிடம் முறையிட 'நந்தவனம் செழிக்க விரைவில் இங்கு ஓராறு தோன்றும்' என்ற திருவாக்கு வெளிப்பட்டது. பின்னர் நாரதமுனிவர் இந்திரனிடம் வந்து ஸ்ரீ விநாயகக் கடவுளை நினைத்து வணங்

குக என்ன இந்திரன் அங்ஙனமே வணங்கினன். இந்திரன் பக்தியை வியந்த விநாயகர் காக்கை வடிவு கொண்டு அகத்தியரிடம் சென்று அவர் பக்கலிலிருந்த கமண்டலத்தின்மேல் தங்கிக் கவிழ்த்து விட்டார். உடனே கமண்டலத்திருந்த காவேரி பெருக்கெடுத்தோடி இந்திரன் இருந்த சீர்காழி வழியாகச் சென்றது. (கந்தபுராணம்.)

2. இருடிகள் ஒன்றுகூடி மூன்றுண்டுகள் நேற்கொண்டு யாகம் செய்ததாகவும், தேவர்கள் அவ்வியாகத்தைத் தடுப்பான் வேண்டி எங்கும் மழையைப் பெய்விக்காது நிறுத்தியதாகவும் அதனுல் வளங்குன்றியதாகவும் உடனே அவ்விருடிகள் அகத்தியரிடம் முறையிட்டதாகவும், அகத்தியர் உத்திரகுருவிலிருந்து பொருள்களை வருவித்து யாகத்தினைத் தொடர்ந்து நடத்தியதாகவும் மும்மூர்த்திகளுக்கும் அவிர்ப்பாகம் கொடுக்கும் அமயத்தில் தேவர்கள் நடுங்கி வந்து தம் பிழைபொறுக்க வேண்டியதாகவும் ஒருகதை உண்டு (பாரதம்).

3. சிவபெருமானுக்கும் பார்வதி தேவர்க்கும் திருமணம் கூடிய காலத்தில் தேவர் முனிவர் முதலியோர்கள் குழுமிய காரணத்தால் தென்திசை யுயர்ந்து வடதிசை தாழ்ந்துவிட அதைச் சமப்படுத்துவான் வேண்டிச் சிவபெருமான் கட்டளையிட அதனை மேற்கொண்டு அகத்தியர் தென்னுடு போந்தா ரென்று கந்தபுராணத் திருமணப்படலம் கூறுகின்றது.

இக்கதைகளுள் கந்தபுராணம் கூறிய காவிரி வரலாற்றினைச் சிறிது நோக்குவோம்.

........முடுகிக்
கரையெறிந்த பொன்னிக் கடலேழுங் கோப்ப
வரையெறிந்த மன்னர்க்கு மன்னன்"
(இராசராசசோழனுலா)

இம் முச்சோழர் உலாக்களாலும் ஒருசோழன் சைய மலையை அறுத்துக் காவிரிக்கு வழி செய்தனன் என்பது போதரும்.

குலோத்துங்க சோழனுலாவிற்குமட்டும் பழைய குறிப்புரை யொன்றுளது. அதில் மலையெறியும் மன்னர்க்கு மன்னன் சிலுகன் என்று காணப்படுகின்றது. அது கொண்டே பிறவற்றிற்குக் குறிப்புரை யெழுதிய உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் சிலுகன் என்றெழுதி யுள்ளார்கள். ஆனால் அ. கோபாலையர் அவர்கள் தாம் பதிப்பித்த மூவருலாவில் காந்தமனைக் குறிப்பிக்கின்றார்கள். இவர்களுள் சிலுகன் என்ற சோழ மன்னனே மலையெறிந்தவனாகலாம். காந்தமன் பின்வந்த சோழனாகவும் அவன் காலத்திலேயே காவிரியில் நீர் வறண்டதாகவும் கொள்ளலாம். உலா ஆசிரியர் ஒட்டக்கூத்தர் அம்மூவர் காலத்திலும் வாழ்ந்தவராதலின் மூவருலாவிலும் அவ்வரலாற்றினை வைத்துக் கூறினர். அவரே,

"மலைகொன்று பொன்னிக்கு வழிகண்ட கண்டன்
வரராச ராசன்கை வாளென்ன வந்தே"

எனத் தக்கயாகபரணியில் (549) கூறுகின்றார். "பண்டு காவேரியைக் கிழக்கு நோக்கிப் போக ஒட்டாது தடுத்த சையப்பருவதத்தை நடுவற வெட்டிய சோழன் ராசராசனுடைய திருக்கையிற் பிடித்தருளினவாள்" என அதன் உரைகாரரும் கூறினர்.

இச்சோழர்கள் வழியில்வந்த கரிகாலனே I பின்னர்க் காவிரிக்குக் கரை கட்டுவித்தான்.

* "தொக்க கலியின் ஆறாயிரத்துத் தொண்ணூற்றில்
மிக்க கரிகால வேந்தனுந்தான்—பக்கம்
அலைக்கும் புகழ்பொன்னி யாறு கரைகண்டான்
மலைக்கும் புயத்தானும் வந்து

இப்பாவால் அச்செய்தி புலனாகும்.

மேற்கூறிய வாற்றால் சோழர்களே காவிரியைக் கொணர்ந்தவர்கள் என்பதும் அவர்களே அதற்குக் கரை கட்டி வளப்படுத்தினவர்கள் என்பதும் பெறப்படும். மற்றைக் கதைகள் கதைகளேயன்றி வரலாறுகளல்ல. மேற்கூறிய புராணங்கள் வரலாற்றொடுபட்ட கதைகளாம். அதனால் சில விடங்களில் உண்மையும் பல விடங்களில் புனைவுகளும் காணக் கிடக்கின்றன. புராணங்களைப் பற்றித் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களின் கருத்தைக் காண்க.

†" 'யான் புராணங்களை முத்திறமாகப் பிரிப்பது வழக்கம். ஒன்று மெய்வரலாறுகளைத் தெரிவிப்பது. இன்னொன்று தத்துவ நுட்பத்தை உலகோர் பொருட்டுக் கட்டுக்கதைகளாகப் புனைந்துரைப்பது. வேறொன்று பொய்யே புகல்வது. முதலினத்திற் சேர்ந்த புராணங்கள் மிகச் சில. கடைக் கூட்டத்திற் சேர்ந்த புராணங்கள் பல. இவை இயற்கை நுட்பமும் தத்துவ ஆராய்ச்சியும் குன்றிய காலத்துப் பொழுது போக்குக் கெனச் சொற்புலவராலும், சமய வெறிய

* பெருந்தொகை 778.

† முருகன் அல்லது அழகு பக். 111.

ராலும், காமுகராலும் யாக்கப்பட்டன. இடை வகுப்பைச் சேர்ந்த புராணங்களே ஆராய்ச்சிக் குரியன.''

திரு. வி. க. அவர்களின் கூற்றுப்படிப் பாரத இராமாயணங்கள் முதலினத்தைச் சார்ந்தனவாம். ஆனல் அகத்தியரைப்பற்றி அவை கூறுவன வற்றுள் கட்டுக்கதைகள் பல காணக் கிடக்கின்றனவே யெனின், அவைகள் இடைச் செருகல்களாகலாம். ஆராய்ச்சியாளர்களும் வேதம், பாரதம், இராமாயணம் ஆகிய நூல்களிலும் இடைச் செருகல்கள் மலிந்தன என்றும் அந்நூல்களைக்கொண்டு உண்மையை முற்றும் உணர முடியாதென்றும் கூறுகின்றனர். கந்தபுராணம் இரண்டாம் வகுப்பைச் சார்ந்ததாகும். அது தத்துவத்தையே விளக்க எழுந்த நூல். அது அதற்கு வேண்டியவாறு கதைகளைப் புனைந்து கூறுவது. பெரிய புராணம் வரலாற்ருெடுபட்ட தத்துவ விளக்கநூல். ஆதலின் அது முதலிரண்டு வகுப்புக்களிலும் சாரக்கூடியது. திருவிளையாடற் புராணமும் சிறிது வரலாற்ருெடு பட்டதென்னலாம். பிறபுராணங்கள் பெரும்பாலும் மூன்ரும் வகுப்பைச் சார்ந்தனவே. சைனபௌத்த நூல்களிலும் வரலாற்ருெடு பட்டன உள. யசோதரகாவியம் சைனநூல். சிறிது வரலாறும் பெரும்பகுதி புனைவும் கொண்டதென்னலாம். மணிமேகலை பௌத்தநூல். வரலாற்ருெடு பட்டது. இம்முறையில் புராணங்கள் செல்வதால் கட்டுக்கதைகளும் பல மலியலாயின. இனிப்பிற நூல்களை நோக்குவோம்.

## இராமாயணம் (கம்பர்).

1. இயக்கர் குலத்தில் சுகேது என்பவன் பிரமனைக் குறித்துத் தவம் புரிந்தனன். பிரமன் வாக்கால்

நூறுயானை வலிமையுள்ள பெண்மகவைப் பெற்றான். அவள் வலிமைக் கேற்றவாறு மணமகனைத் தேடினன் அவன். இறுதியில் சுந்தன் என்பவனுக்கு மணம் செய்து கொடுத்தான். சுந்தன் சிறந்த ஆற்றலுடையவன். சுந்தனுக்கும் அவளுக்கும் மாரீசன் சுபாகு என்ற மைந்தர்கள் தோன்றினர். அவர்களும் மிக்க வலியினர். ஒருநாள் சுந்தன் அகத்தியர் இருக்குமிடம் அணுகி அவரது தவத்திற்கு இடையூறு செய்தனன். உடனே அகத்தியர் அவனை உயிர் இழக்கச் செய்தனர். அது பொருத சுந்தன் மனைவி மக்களுடன் அகத்தியரைக் கொல்வான் வந்தனள். அகத்தியர் அவர்களை அரக்கராகச் சபித்தனர். சுந்தன் மனைவியே தாடகை யென்பவள். (கம்ப. தாட். 25. 38)

இது வரலாற்றொடு பட்டது. தாடகை யென்ற ஒருத்தியை இவர் அரக்கி யென்ற பெயரிட்டமைத் திருக்கின்றார் எனத் தெரிகின்றது. யாதுகாரணம் பற்றியோ இவள் கணவன் அகத்தியரைத் துன்புறுத்தி யிருக்கின்றான். இராவணன் முதலியோர் போல இவனும் பார்ப்பனரின் வேள்விக்கிடையூறு செய்திருக்க வேண்டும். அதனால் அவனை இவர் கொன்றிருக்கலாம். அது பொறாது தாடகையும் எதிர்த்திருக்கலாம். இவர் அவளை அரக்கியென்று இழித்துரைக்க அவளும் அது முதல் வடநாட்டுப் பார்ப்பனரின் யாகங்களை அழிக்கத் தொடங்கியிருக்க வேண்டும். இந்நிகழ்ச்சியையே பின்னர் வட ஆரியர்கள் தமது நூலில் தாடகை ஒரு அரக்கி யென்றும் மேற்குறித்தவாறு அகத்தியரால் சபிக்கப்பட்டவள் என்றும் கதைகட்டி விட்டனராவர். ஆராய்ச்சிக்

காவமல்லாத அக்காலத்தில் பின்வந்தவர்களும் நம்பித் தாமும் பல நூல்களில் அக்கதையினைக் கொள்வாராயினர்.

2. சுவேதன் என்பவன் பலகாலம் தவஞ்செய்து பின்னர்ப் பிரம உலகத்தை யடைந்தனன். அவ்வுலகம் அடைந்தும் பசியும் தாகமும் வருத்தின. இவ்வுலகம் வந்தும் பசியும் தாகமும் தன்னை வருத்தக் காரணம் என்ன என்று பிரமனை வணங்கிக் கேட்டனன். அவன் "நீ பூலோகத்தில் நின்பணத்தையும் பொருளையும் பிறர்க்கு ஈயாமற் பொதிந்து வைத்திருந்தமையால் இங்கு வந்தும் அவைகள் நின்னைப் பற்றிக்கொண்டன. அன்றியும் பூலோகம் சென்று நினது பிணத்தை நீயே தின்று வருக. தின்னத் தின்ன நினது பிணம் பெருகும். அகத்திய முனிவரை என்று அவ்வழிவரக் காண்கின்றனையோ அன்று பசியும் தாகமும் அடங்கி நின்பிணத்தை நீயே தின்னும் தீமையும் ஒழியும்" என்றனன். அதன்படித் தன் பிணத்தைத் தானே தின்று வருகையில் அகத்திய முனிவர் தவஞ்செய்வதற்கென்று தண்டகவனத்தில் வந்து தங்க ஒருநாள் அவரைக் கண்டனன். அன்று முதல் பிணந்தின்னும் நிலை நீங்கினன். (இராமா. உத்)

இது ஒரு கட்டுக் கதையேயாம்.

## திருவிளையாடற் புராணம்.

1. இந்திரன் தேவ மாதரின் நடனத்தில் ஈடுபட்ட அமயம் தேவகுரு வியாழன் வந்தார். அதனையறிந்தும் அறியாதவன் போன்று இந்திரன் இருந்தனன். வியாழன் உடனே மனமுடைந்து திரும்பினர்.

அது முதல் இந்திரன் செல்வம் குறையலாயிற்று. செல்வம் குறைவதைக் கண்ட இந்திரன் தனது தவறு தலை யுணர்ந்து குருவைத் தேடினன். எங்கும் காணப் பெறுமல் பிரமனிடம் சென்றனன். பிரமன் நினது குருவை யடையும் வரையில் விசுவரூபன் என்ற அசுரனைக் குருவாகக் கொள்க என்றனன். அங்ஙனமே இந்திரன் விசுவரூபனைக் குருவாக அடைந்தனன். ஒருகால் இந்திரன் தனது புதிய குருவைத் தன் பொருட்டு யாகம் வளர்க்கச் செய்தனன். விசுவரூபன், மனதில் அசுரர்க்குச் செல்வம் பெருக எனக் கொண்டு புறத்துத் தேவர்களுக்குச் செல்வம் பெருக எனக் கூறினன். இதை உணர்ந்த இந்திரன் தன் குலிசங் கொண்டு அவன் தலைகள் மூன்றனையும் துணித்தான். இஃதுணர்ந்த விசுவரூபனின் தந்தை துவட்டா என்பவன் ஒருயாகம் செய்து அதில் தோன்றிய விருத்திராசுரனை இந்திரனைக் கொல்லும்படி யேவினன். விருத்திராசுரனுக்கு இந்திரன் தோற்றுப் பின் விஷ்ணுவின் சொற்படித் ததீசி முனிவரிடம் சென்று அவரது முதுகந்தண்டைப் பெற்றுக் குலிசப் படையாக்கிக் கொண்டு அவ்வசுரனுடன் போர் புரிந்தனன். குலிசப் படையை எதிர்க்க இயலாத அசுரன் கடலிற் புக்கு ஒளித்தனன். பலகால மாகியும் வந்திலன். உடனே இந்திரன் பிரமதேவன் சொல்லியபடி அகத்தியரிடம் வந்து முறையிட்டனன். அகத்தியர் சிவபெருமானை மனதில் நினைத்துக் கடல்நீரை உளுந்தளவாக ஆக்கியுண்டார். விருத்திராசுரன் அங்கோர் மலையுச்சியில் தவத்தை மேற்கொண்டிருந்தனன். அவனை இந்திரன் குலிசங்கொண்டு தலையறுத்தான். அவ்வசுரனைக் கொன்ற பாவத்தால் பிரமகத்தி இந்திர

ளைத் தொடர்ந்தது. அதனால் இந்திரன் ஈசான திக்கி லுள்ள ஒரு குளத்தில் ஒளித்துக் கொண்டனன். அத னால் சுவர்க்கம் தன் விளக்கம் குறைந்தது.

இந்திரன் இன்மையால் சுவர்க்கம் பொலிவிழந்த மையைக் கண்ட தேவர்கள் பூமியில் நகுடன் என்னும் ஓரரசன் அசுவமேதம் செய்தலை யறிந்து அவனை முடி தரிப்பித்து அரசனாக ஏற்றுக்கொண்டார்கள். அவன் உடனே இந்திராணியை அழைத்து வரும்படித் தூது வர்களை ஏவினன். இந்திராணி தன் கணவன் இந்திரன் உயிருடன் இருக்க இன்னொருவனைக்கூட மனமில் லாதவளாய் வியாழனைச் சரண் புகுந்தனள். வியாழன் "புதிய இந்திரனை ஏழு முனிவர்களும் தாங்கச் சிவிகையூர்ந்து வரும்படித் தூதரிடம் சொல்லியனுப் புக" என்றனர். அவர் கூறியபடியே இந்திராணியும் தூதனுப்பினள். கேட்ட நகுடன் அங்ஙனமே யெழு முனிவர்கள் சிவிகை தாங்க வந்தனன். வருகையில் இந்திராணியைக் கூடவேண்டும் என்னும் காம வேட் கையின் மிகுதியால் விரைவாகச் செல்க என்பதற்குச் 'சர்ப்ப' என்றனன். அதுபோது எழுவருள் ஒருவ ராய அகத்தியர் அவ்விரைவுச் சொற்பொருது 'நீ சர்ப்ப'மாக எனச் சபித்தனர். உடனே அவன் பாம்பாகச் சிவிகையிலிருந்து நழுவினன். இக் கதை யைத்தான் பரிமேலழகர் அவர்கள்,

"ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுறிந்து
வேந்தனும் வேந்து கெடும்" (குறள் 899)

என்ற குறளின் விசேடவுரையில் எடுத்துக் காட்டி னர். "நகுடன் என்பான் இந்திரன் பதம்பெற்றுச் செல்கின்ற காலத்துப் பெற்ற களிப்பு மிகுதியான்

அகத்தியன் வெகுள்வதோர் பிழைசெய்ய அதனாற் சாப மெய்தி அப்பதம் இடையே யிழந்தான் என்பதனை யுட்கொண்டு இவ்வாறு கூறினர்'' என்றது காண்க. வள்ளுவர் பொதுமையிற் கூறினரே யன்றி இக்கதையை உட்கொண்டு கூறினரல்லர்.

2. இராமன் இலங்கை நோக்கிச் செல்லுகையில் மதுரையை யடைந்தனன். சிவபிரானால் மாயப் பசுவை நந்தி வென்று அவ்வெற்றிக் கறிகுறியாகத் தன் உடலை மலையாகவிட்டுச் சென்றனன். வந்த இராமன் அம்மலையில் தங்கினான். அங்கு அகத்தியர் வந்து இராமனைக் கண்டனர். மதுரை யிறைவன் திருவிளையாடல்களை யெடுத்துரைத்தனர். இராமன் உடனே அகத்தியருடன் கூடிச்சென்று இறைவனை வணங்கினன். இறைவன் இராமனை நோக்கி "நீ இலங்கை சென்று நின்தேவியை மீட்டு அயோத்தி யெய்திப் பன்னாள் வாழ்ந்து பழைய வைகுண்டம சேர்வாயாக'' என மொழிந்தனர். இராமனும் வணங்கிச் சென்றனன். (பரஞ்சோதி திருவிளை. மாயப் பசுவை வதைத்த படலம்.)

3. ஒரு காலத்தில் பிரமதேவர் அகத்தியர் முதலிய முனிவர்களைக்கொண்டு பத்து அசுவமேத யாகம் செய்து முனிவர்களுக்குச் சிறப்புச் செய்து தன துலகை யடைந்தனர். பின்னர் முனிவர் அனைவரும் காசிவிசுவேசுரர் திருமுன்படைந்து வணங்கி முத்தி மண்டபத்தில் சென்று தக்ஷிணாமூர்த்தி சந்நிதியில் தங்கினர். அங்கு நாரதமுனிவரை நோக்கி மூர்த்தி தலம் தீர்த்தம் மூன்றும் சிறந்த ஒரு சிவத்தலம் சொல்லும் என வேண்டினர். நாரதர் வியாசரைக் காட்டினர். வியாசர் முருகனிடம் யாவும் உணர்ந்த அகத்தியரைக்

கேளுங்கள் என்ன முனிவர்கள் அகத்தியரை வேண்டினர். அகத்தியர் மகிழ்ந்து மதுரைத் திருவிளையாடல்களைத் தமக்குக் குமாரக்கடவுள் கூறியருளியாங்குக் கூறினர். (புராணவரலாறு)

இன்னும் புராணக்கதைகளை யளந்துகொண்டே போனால் பெருகும்.

## சிலப்பதிகாரம்

சிலப்பதிகார நூலிலும் அடியார்க்கு நல்லார் உரையிலும் அகத்தியரைப்பற்றி வருவனவற்றைக் காண்பாம்.

தெய்வ மால்வரைத் திருமுனி யருள
எய்திய சாபத் திந்திர சிறுவனொடு
தலைக்கோற் றானத்துச் சாபம் நீங்கிய
மலைப்பரும் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பிற் குன்றாச் செய்கையொடு பொருந்திய
பிறப்பிற் குன்றாப் பெருந்தோள் மடந்தை
தாதவிழ் புரிகுழல் மாதவி''
(அரங்கேற்றுக்காதை 1—7)

நாரதன் வீணை நயந்தெரி பாடலும்
தோரிய மடந்தை வாரம் பாடலும்
ஆயிரங் கண்ணோன் செவியகம் நிறைய
நாடக முருப்பசி நல்கா ளாகி
மங்கலம் இழப்ப வீணை மண்மிசைத்
தங்குக இவளெனச் சாபம் பெற்ற
மங்கை மாதவி வழிமுதற் றோன்றிய
அங்கர வல்குல் ஆடலுங் காண்குதும்''
(கடலாடு காதை 18—25)

இவற்றால், இந்திரன் அவைக்கண் உருப்பசி நடம் புரிந்தாள் எனவும் அது காலை இந்திரன் மகன் சயந்தன் என்பான் இவளைக் காதல் நோக்குடன் நோக்க இவளும் அவனை அங்ஙனம் நோக்கினள் எனவும் அது பொறாத அகத்தியர் சயந்தனை மூங்கிலாக எனச் சபித்தனர் எனவும், உருப்பசியை பூமியிற்சென்று தங்குக எனச் சபித்தனர் எனவும் அறிகிறோம். மேற் காட்டிய கடலாடு காதையடிகளின் உரைக் குறிப்பில் அடியார்க்கு நல்லார் பின்வருமாறு எழுதுகின்றார்.

"உருப்பசியின் சாபவரலாறு என்னையோ எனின்,

வயந்த மாலை நயந்த முனிவரன்
எய்திய வவையின் இமையவர் வணங்க
இருந்த இந்திரன் திருந்திழை யுருப்பசி
ஆடல் நிகழ்க பாடலோ டிங்கென
ஓவியச் சேனன் மேவினன் எழுந்து
கோலமும் கோப்பும் நூலொடு புணர்ந்த
இசையும் நடமும் இசையத் திருத்திக்
கரந்துவர லெழினியொடு புகுந்தவன் பாடலிற்
பொருமுக வெழினியிற் புறந்திகழ் தோற்றம்
யாவரும் விழையும் பாவனை யாகலின்
நயந்த காதற் சயந்தன் முகத்தில்
நோக்கெதிர் நோக்கிய பூக்கமழ் கோதை
நாடிய வேட்கையின் ஆடல் நெகிழப்
பாடல் முதலிய பல்வகைக் கருவிகள்
எல்லாம் நெகிழ்தலின் ஒல்லா முனிவரன்
ஒருதலை யின்றி யிருவர் நெஞ்சினும்
காமக் குறிப்புக் கண்டனன் வெகுண்டு
சுந்தர மணிமுடி யிந்திரன் மகனை

மாணு விறலோய் வேணு வாகென
விட்ட சாபம் பட்ட சயந்தன்
சாப விடையருள் தவத்தோய் நீயென
மேவினன் பணிந்து மேதக வுரைப்ப
ஓடிய சாபத்து உருப்பசித் தலைக்கட்டும்
காலைக் கழையும் நீயே யாகி
மலையமால் வரையின் வந்துகண் ணுற்று
தலையரங் கேறிச் சார்தி யென்றவன்
கலக நாரதன் கைக்கொள் வீணை
அலகில் அம்பண மாகெனச் சபித்துத்
தந்திரி யுவப்பத் தந்திரி நாரிற்
பண்ணிய வீணை மண்மிசைப் பாடி
ஈண்டு வருகெனப் பூண்ட சாபம்
இட்டவக் குறுமுனி யாங்கே
விட்டனன் என்ப வேந்தவை யகத்தென்.

என்பதனான் அறிக" (பக். 186)

"இதனாற் சொல்லியது நாரதன் கலகப்பிரியன் ஆதலால் தனது யாழைப் பகை நரம்புபட இசைத்தலின் தான் இங்ஙனம் இசைத்தற்குக் காரணம் இன்றாகவும் இவள் கலங்கினமை தான் நமக்கறிவித்து நம்மால் இவளை முனிவிப்பான் வேண்டி நம்மை மதியானாயினன் என அவளொடும் சாப மிடுகின்றவன் வீணை மங்கலம் இழக்க; மண்மிசைத் தங்குக; இவள் மண்ணிற் போய்ப் பிறக்க எனச் சாபம் இட்டான் என்பது. வீணை மண்மிசைத் தங்குக எனவே இவனை நீங்கா வரத்தின் வந்ததாகலான் இவனும் மண்மிசைத் தங்குக என்பதாயிற்று. எனவே இவன் மண்ணிற் பிறவானாதல் உணர்க." (பக்கம். 186)

"இந்திரன் அவைக் களத்து ஒருவரை ஒருவர் விழைந்து அகத்திய முனிவராற் சாபம் பெற்ற சயந்தனும் உருப்பசியும் முறையே விந்தமலையில் மூங்கிலாயும் காஞ்சி நகரத்துத் தேவகணிகையாயும் பிறந்தனர் என்று "வானவர் கோமான் வாளிடை யிருந்து" என்னும் ஆசிரியப் பாவால் சூத்தாநந்தப் பிரகாசப் பரதநூலாசிரியர் கூறினர்."

(சிலப். பக். 78. அடிக்குறிப்பு. உ. வே. சா. ஐயர்)

இவைகளால் அகத்திய முனிவர் சயந்தனையும் உருப்பசியையும் சபித்தமை தெரிகின்றது. இக் கதை ஒரு புனைவே.

நமக்குக் கிடைத்துள்ள தமிழ் நூல்கள் யாவும் கடைச் சங்கத்துப் பாடலுள்ளவையும் அச்சங்கத்திற்குச் சிறிது முற்பட்ட காலத்துப் பாடலுள்ளவையும் அச்சங்கத்திற்குப் பின்னர்ப் பாடப்பட் டுள்ளவையுமேயாம். ஆதலின் சங்கநூல்கள் என்று இக்காலத்துக் கருதப்படுகின்ற நூல்களினும் சிற்சில ஆரியரின் புனைவுக் கதைகள் காணப்படுகின்றன. இடைக் காலப் புராணங்களில் காணப்படுதலில் வியப்பு ஒன்றுமில்லை. சிலப்பதிகாரம் புராணகாலத்திற்குச் சற்று முற்பட்டது. கி. பி. இரண்டாம் நூற்றாண்டையது. சிலர் ஏழாம் நூற்றாண்டென்கின்றனர். எங்ஙனமேனும் அகநானூறு, புறநானூறு, குறுந்தொகை, பதிற்றுப்பத்து, பத்துப் பாட்டு முதலிய சங்கநூல்களுக்குப் பிற்பட்டதேயாம். மணிமேகலையும் இதன் காலத்ததே. இவையிரண்டும் சங்க இலக்கியங்களாகக் கருதப்படவில்லை. பிற்காலத்தனவாக இவையிருப்பதால் தான் கட்டுக்கதைகளும் கூறுகின்றன.

வீரசைவ மதத்தைத் தழுவிய அகத்தியரும் ஒரு ...ர் இருந்திருக்கின்றார். அவர் இராமாயணகால ...கத்தியராகவே யாகவேண்டும்.

'வீரசைவம்' என்ற திங்கள் வெளியீட்டில் "வீர ...சவ பஞ்சாசாரிய பீடங்களும் அவற்றின் தொன் ...மையும் என்ற தலைப்பில் வந்த கட்டுரையில் கண்ட ...வது:—

* "1-வது அரம்பாபுரி சமஸ்தானம்

இப்பீடம், மைசூர் நாட்டில் கடூர் ஜில்லாவில் ...சிங்க ராஜபுரம் தாலுகாவில் ரம்பாபுரி (பாளே ...ஹான்னூர்) என்னுமிடத்தில் தலைமைபெற்று ...ங்குகின்றது. இம்மடத்தின் முதற்குரவரும் வீர ...சவ மதத்தாபனுசாரியர்களில் மிகமேன்மை பெற்ற ...நமான ஸ்ரீ ஜகத்குரு இரேணுக சிவாசாரிய சுவாமி ... கொல்லிபாகம் சோமநாதலிங்கத்தின்கண் அவ ...த்து மலய மலையின் மத்தியில் தம்முடைய பீடத் ...தத் தாபித்தனர். இவர் உலகம் போற்றும் தமிழ் ...ரியாகிய அகத்திய முனிவருக்குச் சடுத்தல ...றியை யுபதேசித்து அவர்க்கு இலிங்கதாரணமும் ...செய்வித்தார் என்பதற்குப் பல சிறந்த காரணங்கள்

* வீரசைவம் மலர். 1. இதழ் 1. பக். 14

† அகத்தியர்க்கு இலிங்கதாரணம் செய்தது எப்பொழுது ...பது விளங்கவில்லை. இரேணுகர் இலங்கையில் 3 கோடி ...ங்கங்களை விபீடணன் வேண்டுகோளுக்கிணங்கித் தாபித்த ...க் கூறலின் இலிங்கம் தாபித்தது விபீடணன் ஆட்சிக்காலத் ... என்பது புலனாகும். அப்படியாயின் அகத்தியர் தென்னாடு ... மீண்டபின்னரே இலிங்கதாரணம் செய்யப்பட்டிருக்க

இருக்கின்றன. இவர் தென்சமுத்திர தீரத்திலுள்ள இராமேச்சுரத்தில் சிலகாலம் எழுந்தருளி யிருந்து பின்னர் சோழநாட்டின் தலைநகராயிருந்த காஞ்சி நகரத்திற் கெழுந்தருளி பலவற்புதங்களைச் செய்து சிவ தருமங்களை நிலைநாட்டினர். பின்னர் இலங்கைக்குச் சென்று விபீடணன் வேண்டுகோளின்படி ஒரே காலத்தில் மூன்றுகோடி இலிங்கங்களைத் தாபித்து அவனது கருத்தை முடிவுறச் செய்தனர். இவ்வாறு பல திருவிளையாடல்களைச் செய்து பம்பா பருப்பதம் காசி இமாலயம் முதலான சிறந்த தலங்களைத் தமது காட்சியாற் றூய்மையுறச்செய்து முடிவில் தமது பேரருட்டிறத்தால் உருத்திர முனீந்திர ரென்னும் பேரொளி வடிவாகிய குருமூர்த்தியைப் புகருப்பத்தினின்றும் அவதாரஞ் செய்வித்துத் தமதாட்சியை அவர்பாற் கொடுத்து முன்னர்த் தோன்றிய சோமேச லிங்கத்தின் கண்ணேயே மறைந்தருளினர்."

இதனால் மேலது வலியுறும்.

## முடிப்புரை

இதுகாறும் கூறியவாற்றால் அகத்தியர் ஒருவர் அல்லர் பலர் என்பதும், அவருள்ளும் தமிழகத்தியர் கள் இருவர் இரண்டு சங்கங்களில் திகழ்ந்தனர் என் பதும் ஆரிய அகத்தியர்களும் இருவர் என்பதும், மூததூரகத்தியன் என்பவரும் ஒருவர் இருந்தனர் என்பதும், பிற அகத்தியர்களும் இருந்திருக்கின்றனர் என்பதும் அவர்களின் வரலாறுகளும், ஆரிய அகத்தி யர்களைப் பற்றிய கட்டுக்கதைகளும் ஒருவாறு உணரலாம்.

* "அவர் ஆரிய வந்தேறிகளின் தலைவர் என்று கூறுவதைவிட அக்குடியேற்றக் கட்டுக்கதைக்கு தலை வரே யெனக் கூறலாம்" எனக் கால்டுவேல் பாதிரி யார் அவர்கள் கூறியதுபோல 'அகத்தியர்' பல கட்டுக் கதைகளுக்குத் தகுதியான சொல்லாகி விட்டது.

MAHAMAHOPADHYAYA
DR. U.V. SWAMINATHA IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-600 090.

* கால்டுவெல் ஒப்பிலக்கணம் (தமிழ்) பக். 170